www.tamilarangam.net



SUVADUKAL

# சுவடுகள்

A Tamil Monthly from Norway

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# "முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டது வருத்தத்திற்குரியது!"
## – யாழ் பல்கலைக்கழகத் துணைவேந்தர்

கடந்த ஏப்ரல் மாதமளவில் உலகின் அதிவடக்குப் பல்கலைக்கழகமான துரொம்சோப் பல்கலைக்கழகமான தொரம்சோப் பல்கலைக்கழகத்தின் தமிழ் மாணவர்களின் முயற்சியால், அவர்களது அழைப்பை ஏற்று அங்கு வருகை தந்திருந்த யாழ் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் துரைராஜா அவர்கள், இவ்விரு பல்கலைக்கழகங்களுக்கும் இடையில், கடல்வளத்துறைப் பீடம் ஒன்றை உருவாக்கி அதற்கான ஆராய்ச்சித் துறை நிபுணர்களையும் பரிமாறிக்கொள்வது தொடர்பாகவும் ஆரம்பப் பேச்சுகளை தொரம்சோப் பல்கலைக்கழக வேந்தர் மற்றும் கடல்வளத்துறைப் பேராசிரியர்களுடன் நிகழ்த்தியதன் விளைவாய், இரு பல்கலைக் கழக்ங்களுக்கும் இடையில் இதற்கான ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்தாகி உள்ளது.

கடந்த வருடத்தில் நடத்திய பேச்சுகளின் தொடர்ச்சியான நடவடிக்கையாக இம்மாதம் (29.08.93)மீண்டும் யாழ் உபவேந்தர் வந்திருந்தபோதே இவ் ஒப்பந்தம் கைச்சாத்தாகியது. இப்பீடத்தை ஆரம்பிப்பதற்கான நிதி முதலாக தளபாட உதவிகளை வழங்கும் பொறுப்பைத் தொரம்சோப் பல்கலைக்கழகம் பொறுப்பேற்றுள்ளது.

மேலும் இலங்கையின் இனப்பிரச்சனைக்கான தீர்வை நோக்கிய, சகல தரப்பினரையும் பிரதிநிதித்துவப் படுத்தும், ஒரு மாநாட்டை நடத்த யாழ்



பல்கலைக்கழகத்துடன் இணைந்து கூட்டாகத் தொரம்சோவில் நடத்த முன்வருவதாகவும் தொரம்சோப் பல்கலைக்கழகம் விருப்பம் தெரிவித்துள்ளது.

ஒப்பந்தம் கைச்சாத்தானதன் பின் ஒழுங்குசெய்யப் பட்டிருந்த விரிவுரை நிகழ்ச்சி ஒன்றில் திரு துரைராஜா அவர்கள் பேசுகையில், பத்திரிகையாளர் ஒருவரது கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே முஸ்லிம் மக்கள் வெளியேற்றப்ப பட்டது வருந்தத் தக்கதெனக் கூறினார்.

இலங்கையின் இனப்பிரச்சனையும் அபிவிருத்தியும் என்ற தலைப்பின் கீழ் பேராசிரியர் நிகழ்த்திய ஒரு மணிநேர விரிவுரையில் குறிப்பிடப்பட்ட சில கருத்துகள் பின்வருமாறு:

தமிழ் மக்களது ஆயுதப் போராட்டம் அரசு கூறுவதுபோல பயங்கரவாதப் பிரச்சனை அல்ல. அது தமிழ் மக்களது உரிமைகள் மறுக்கப் பட்டதன் விளைவாக எழுந்த போராட்டமாகும். தனிச்சிங்களச் சட்டம், திட்டமிட்ட குடியேற்றங்களின்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மூலம் தமிழர்களது பாரம்பரியப் பிரதேசங்களில் நிலப்பறிப்பு போன்றவற்றாலும் இனக்குரோத நடவடிக்கைகளாலும் வளர்த்தெடுக்கப் பட்ட இப்பிரச்சனைக்கு அதிகாரப் பரவலாக்கம் ஒன்றின் மூலம் சுமுகமான தீர்வு காணப் பல்வேறு காலகட்டங்களில் பல்வேறு ஒப்பந்தங்கள் அப்போதைய தலைமைகளுக்கும் அரசுக்கும் இடையில் உருவாகி, அவை யாவுமே நடைமுறைப் படுத்தப்படாமலும் தோல்விக்கும் இட்டுச் சென்றன. தமிழ் மக்கள் சாத்வீகமானவர்கள். இவற்றை எதிர்த்துச் சாத்வீகவழிப் போராட்டங்களை நடத்தியபோது அவர்களுக்குப் பலாத்காரமே பதிலாகக் கிடைத்தது.

சிங்களவர்கள், நாங்கள் கிறிஸ்தவ சிங்களவர்களைப் போல், உரிமைகள் எதையும் கோராமல், அவர்களின்கீழ் இரண்டாம்தரப் பிரஜைகளாக இருக்க ஒப்புக்கொள்ளின் எங்களை நன்றாக வைத்துக் கொள்வர்.

தமிழ் மக்களின் வரலாறு நிறைய சமஷ்டித் தீர்வு முதலான பல தீர்வுகள் யாவும் வந்துபோயின. ஆனால் அவை பேரினவாதத்தால் தோற்கடிக்கப் பட்டன. 1970களில் தமிழ் மக்களின் சொத்தான கல்வியில் மொழிவாரித் தரப்படுத்தல் அறிமுகப் படுத்தப்பட்டுப் பல்கலைக்கழகத்திற்குத் தமிழ் மாணவர்கள் தொகை கட்டுப்படுத்தப் பட்டபோதுதான் கொதிப்படைந்த தமிழ் மாணவர்கள் பலர் ஆயுதப் போராட்டத்தில் குதித்தனர். அதனைத் தொடர்ந்த 1983ஆம் ஆண்டு இனக்கலவரம் தமிழ் மக்களை அகதிகளாக்கிய போது, அரசினால் தமிழ் மக்கள் கப்பல்கள் மூலம் அவர்களது பிரதேசமான வடக்குக் கிழக்குக்கு அனுப்பி வைக்கப்பட்டபோது, அரசாங்கத்தாலேயே வடக்கு கிழக்கே தமிழர்களுக்கான பாதுகாப்புப் பிரதேசம் என்று ஒப்புக்கொள்ளப் பட்டது. இதன்மூலம் அது அவர்களது பாரம்பரியப் பிரதேசம் எனவும் ஏற்றுக்கொள்ளப் பட்டது.

உரிமைகள் கேட்கப் பட்டபோதே தமிழர்கள் விரட்டப் பட்டார்கள், கொல்லப் பட்டனர். இக்கலவரங்களின் தொடர்ச்சியாக 83யூலை இனக்கலவர உச்சமே தமிழ் மக்களை ஆயுதப் போராட்டத்தினை அங்கீகரிக்க வைத்தது. அதுவரை அவர்கள் சாத்வீகப் போராட்டங்களிலும், பேச்சுவார்த்தைகளிலும் சுமுகமான தீர்வுகளிலும் நம்பிக்கை கொண்டிருந்தனர்.

மறித்துக் கட்டப்பட்ட சுவர்களுக்குள் விரட்டப்பட்ட நாய் திருப்பித் தாக்கும். இப்போது தமிழர்களது நிலையும் இதுவே. தற்போதும் இது பயங்கரவாதப் பிரச்சனை எனக் கூறுவதன் மூலம் அரசு, சகல தமிழ் மக்களையும் தனது எதிரயாகக் கருதுகிறது; எதிரியாக ஆக்கியுள்ளது.

இப்பிரச்சனை அரசு கூறுவதுபோல பயங்கரவாதப் பிரச்சனை எனில் தமிழ் மக்களைத் தன்பக்கம் ஈர்ப்பதற்குப் பதிலாக, அவர்களுக்கான அடிப்படை வசதிகள் யாவற்றையும் பொருளாதாரத் தடை மூலம் துண்டறுத்து, அவர்களின் வெறுப்பையே சம்பாதிக்கிறது. அவர்களை மேலும் மேலும் போராட்டத்தின்பால் தள்ளுகிறது. எவ்வித வேறுபாடுமின்றிக் குண்டுவீச்சு விமானங்களால் பொதுமக்களைக் கொல்கிறது.

இனப்பிரச்சனை ஒன்று உண்டு என்று அரசு ஒப்புக் கொள்ளாதவரை பிரச்னைகக்குத் தீர்வு கடினமாகும். இது இன அழிப்பிலேயே முடியும்.

சர்வதேச சமூகங்களின் தலையீட்டினாலும், அவர்களது மேற்பார்வையின் கீழுமே சமஷ்டி முறையிலான தீர்வுகள் அமுலாக்கப்பட முடியும் என்பது எனது பிரத்தியேகமான கருத்து எனவும் கேள்வி ஒன்றுக்கான பதிலில் பேராசிரியர் துரைராஜா கூறினார்.

மேற்குலக நாடுகள் பற்றி அவர் குறிப்பிடுகையில், இவர்கள் இலங்கை

கேட்டுக்கொள்ளும் அளவுக்கு மேலாக வழங்கும் கடனுதவிகளும், அபிவிருத்திக்கான உதவிகளுமே தமிழ் மக்களின் மேல் விமானக் குண்டுகளைப் பொழிய அரசால் பயன்படுத்தப் படுவதாகவும் அவர் கூறினார். இவ்வுதவிகளைக் குறைப்பதன் மூலமோ, மறுப்பதன் மூலமோ, அரசின் இந்த நடவடிக்கைகளுக்குத் துணைபோகாதிருக்கலாம் எனவும் குறிப்பாக விண்ணப்பித்துக் கொண்டார்.

நான் ஒரு தமிழன், ஒரு தேசியவாதி என்ற அடிப்படையிலேயே பல்வேறு இக்கட்டுகளுக்கிடையில் ஆபத்தான சூழலில் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராக என்னால் கடமையாற்ற முடிகிறது. இரு எஜமானர்களுக்கிடையில் (masters) நான் பணியாற்ற வேண்டியுள்ளது. அதற்காக நான் எனது தேசியத் தன்மையை, எனது மக்களின் போராட்டத்திற்கான நியாயத் தன்மையை விட்டுக்கொடுக்கத் தயாராயில்லை.

மனித உரிமைகள் பற்றிப் புள்ளிவிவரம் எடுக்கும் எந்த வெளிநாட்டு நிறுவனங்களும், தமிழ் மக்களது தலைமேல் குண்டுபொழிவதைப் பற்றி அலட்டிக் கொள்வதில்லை. இதன்மூலம் மனித உரிமை மீறல்கள் இல்லை என நான் கூறவில்லை. ஆனால் இவர்கள் தமிழ் மக்கள் மீதான இனஅழிப்பு யுத்தம் பற்றி எதையுமே பேசிக்கொள்ளாததன் மூலம் ஏதோ ஒருவகையில் தமிழ் மக்களது நியாயமான போராட்டத்தைக் கண்டுகொள்ளாமல், ஒரு கிராமத்தின் மீது மட்டும் நூற்றுக்கு மேற்பட்ட குண்டுகள் பொழியும் சம்பவங்களையோ, போஷாக்கின்மையால் இறக்கும் குழந்தைகள் பற்றியோ சொல்ல மறுக்கிறார்கள்.

தொரம்சோப் பல்கலைக்கழகத்தில் கல்வி பயிலும் தமிழ் மாணவர்கள் வெளிநாட்டு மாணவர்கள், நோர்வேஜிய மாணவர்கள் மற்றும் நோர்வேஜியப் பத்திரிகையாளர்கள் கூடியிருந்த கூட்டத்தில் அவர் இவ்வாறு கூறினார்.

வடக்கில் இருந்து முஸ்லிம்கள் வெளியேற்றப் பட்டது வருந்தத் தக்கது. அதேவேளை கிழக்கில் முஸ்லிம்களின் தமிழ் மக்கள் மீதான தாக்குதலும் வருத்தத்திற்குரியது என்றார் அவர்.

யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் தொடர்பாக அங்கிருந்த மாணவர்களாலும், பத்திரிகையாளர்களாலும் எழுப்பப்பட்ட கேள்விகளுக்கும் அவர் பதிலளித்தார்.



"!------...!!"

மனித உரிமைகளுக்கான யாழ் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் என்ற ஒன்று யாழ் பல்கலைக்கழகத்தில் இல்லை என்ற அவரது அறிக்கை தொடர்பான கேள்விக்கு அவர்: அது உருவாக்கப்பட்ட போது அதில் நானும் இருந்தேன். ஆனால் அதிலிருந்த பலரின் வெளியேற்றத்தை அடுத்து அது பல்கலைக்கழகத்தில் தற்போது இயங்குவதில்லை. கொழும்பிலோ வேறு எங்குமோ அது இருக்கலாம். ஆனால் யாழ் பல்கலைக்கழகத்தில் அதன்

www.tamilarangam.net

இயக்கம் இல்லை என்றார்.

பல்கலைக்கழக மாணவர்களது கைது தொடர்பான கேள்விகளுக்கு அவர் பின்வருமாறு கூறினார்.

ஒரு மாணவர் கைது செய்யப் பட்டால் அம்மாணவர்களின் பெற்றோரின் தகவல் அடிப்படையில் நாம் செய்தி அறிந்தவுடன் உரியவர்களுடன் தொடர்பு கொள்வோம். இப்படி மேற்கொண்ட தொடர்புகளின் அடிப்படையில் சிலர் சிலநாள் விசாரணையின் பின்போ, அல்லது அவர்கள் மீதான குற்ற அடிப்படையில் மேலும் தாமதமாகவோ விடுவிக்கப் பட்டுள்ளனர்.

செல்வி, மனோகரன் போன்றோரை விடுவிப்பதில் நாங்கள் மேற்கொண்ட முயற்சி பயனற்றுப் போய்விட்டது. அவர்கள் மீதான குற்றச்சாட்டுகள் வேறாக உள்ளன. அவர்களுக்கும் மற்றும் ஸ்தாபனங்களுக்குமான தொடர்பு பற்றிய சந்தேகம், அவர்களின கைது பற்றிய பரபரப்பான செய்திகள் பரவியமை போன்றவை அவர்களை விடுவிப்பதைக் கடினமாக்கியுள்ளது என்றார்.

மற்றைய இயக்கங்களை அழிக்கும், குறிப்பாக இடதுசாரித் தன்மை கொண்ட இயக்கங்களை அழிக்கும் புலிகளது நடவடிக்கை பற்றி ஒரு நோர்வேஜியரால் எழுப்பப்பட்ட கேள்விக்கு அவர் ரெலோவைக் குறிப்பிட்டு அவ்வியக்கம் தனக்குள்ளான மோதலால் சிதைந்து நலிந்திருந்ததே புலிகளால் அவர்களின் அழிவுக்குக் காரணம் ஆயிற்று என்றார்.

தொரம்சோ என்பது நோர்வேயின் (உலகின்) அதிவடக்கே உள்ள ஒரு நகரமாகும். 50,000பேர் வதியும் இந்நகரில் நோர்வேயின் நான்கு பல்கலைக்கழகங்களில் ஒன்றான தொரம்சோப் பல்கலைக்கழகம் அமைந்துள்ளது. பதினைந்துக்கும் தமிழ் மாணவர்கள் இங்கு கல்வி பயில்கின்றனர். தமிழர்கள் இந்நகரில் ஏறத்தாழ 35பேர் உள்ளனர். ஆனி முதல் ஆவணிவரையான இரண்டரை மாதப்பகுதி, 24 மணிநேரமும் பகலாகும். நள்ளிரவுச் சூரியனை இக்காலப் பகுதியில் காணலாம். பனியுறைகாலமான ஆண்டின் இறுதியான நவம்பர், டிசம்பர் மாதங்களில் 24 மணிநேரமும் இரவாகும். இவை சூரியன் இன்றிய நாட்கள்.

•

**துருவன்**

*பின்குறிப்பு: கடந்த வருடம் தொரம்சோ அழைக்கப் பட்டிருந்த துணைவேந்தரின் வருகை மாணவர்களால் ஒழுங்குசெய்யப் பட்டிருந்தது. இவ்வருடம் அவரது வருகை, அவர் கலந்துகொள்ளும் நிகழ்ச்சிகள் யாவும் ஒரு அந்நியமான அழைப்புக் கடிதமூலம் இறுதிநேரத்தில் அறிவிக்கப் பட்டது என்றும், மாணவர்கள் புறக்கணிக்கப் பட்டனர் என்றும் தொரம்சோப் பல்கலைக்கழக மாணவர் ஒருவர் கருத்துத் தெரிவித்தார். ஒப்பந்தம் கைச்சாத்திடப் பட்டது பற்றி மிக்க மகிழ்ச்சி தெரிவித்த அவர், இதற்காக முன்னின்ற மாணவர்கள் வேறுசிலரால் புறக்கணிக்கப் பட்டது பற்றிக் கவலை தெரிவித்தார்.*

**சரிநிகர்**

இலங்கையில் இருந்து நடுநிலையுடன் செய்திகள், விமர்சனங்களைத் தரும் ஒரே, மாதமிருமுறை இதழ். வருட சந்தா 30 டொலர்கள். தற்போதைய முகவரி: Sarinigar, 18/2, Allo avenue, Colombo 3.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சந்திரசூரியர்

லண்டனில்

# தொண்டமானிற்கு கோவம் வந்ததேன்?

*காலம்: ஆவணி.13, 1993,*
*இடம்: 'கொன்வே' மண்டபம், இலண்டன்*

மலையகத் தமிழர் என அன்பாக அண்மையிலும், வடக்கத்தையான் அல்லது இந்தியக் கூலிகள் எனச் செல்லமாக காலம்காலமாக நம்பப்பட்டும் அழைக்கப்பட்டும் வந்த இலங்கைத்தீவுவாழ் மக்களது தனித்தலைவன் எனத் தன்னையே அறிவித்துக் கொள்ளும் சிறிலங்கா அமைச்சர் திரு.செள.தொண்டமான் மிக அண்மையில் இலண்டன் வந்திருந்தார். சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி இங்குவாழும் தமிழ்ச் சமூகத்தின் பிரமுகர்கள், இயக்க ஆதரவாளர்கள், இலங்கைத் தமிழர்பால் அக்கறை கொண்டவர்கள் என்று பலரினை அழைத்து அரியதொரு சந்திப்பை அமைச்சரிடம் ஒப்பேற்றி வைத்தது Tamil Information Centre எனும் அமைப்பு.

அழைப்பினையேற்று வருகைதந்திருந்த நூறு பேரளவிலான கூட்டத்தில் அமைச்சரவர்கள் கேள்விபதில் மூலம் சகல விடயங்களையும் புரிந்து கொள்ளலாம் எனக்கூறித் தனது பேச்சினை மிகவும் சுருக்கமாக முடித்துக்கொண்டார்.

வடக்கு கிழக்கு மக்களையே பிரதிசெய்த அக்கூட்டத்தில் அப்பிராந்தியங்களைக் கவனத்தில் கொண்ட கேள்விகள், கருத்துகள், எதிர்பார்ப்புகள் என்பவற்றைக் காணக்கூடியதாக இருந்தமை நியாயமானதே.

இப்பிரதேசங்களில் நடைபெறும் போரின் பின்னணியில் பாதிக்கப்பட்டு அவஸ்தைப்படும் அப்பாவி மக்களது துயரங்களையும், அரசதரப்பினால் நடத்தப்படும் மனிதஉரிமை அத்துமீறல்களையும் குறிப்பிட்டுப் பல கேள்விகள் எழுப்பப் பட்டதுடன், அவை யாவற்றையும் முடிவுக்குக் கொண்டுவர அமைச்சரது உத்வேக உதவியும் முயற்சியும் பலரால் வேண்டிக்கொள்ளப் பட்டது.



www.tamilarangam.net

'விடுதலைப் போர்' ஒன்றினை யாராவது நடத்துவார்களேயாயின், இவ்வகையில் உயிரிழப்புகளும், இன்னல்களும் துயரங்களும் விலையாக அமையத்தான் வேண்டும். மாறாக, சாப்பாட்டுக் கோப்பையில் எதிர்பார்ப்பதுபோல் யாராவது விடுதலையை வென்றுவிடலாம் என்று எண்ணினால் அவர்கள் இலண்டன் போன்ற இடங்களில் கதிரைகளில் வாழ்பவர்களாகவும், பிரயோகம் அற்றவர்களாகவுமே இருக்க முடியும் என அமைச்சர் கருத்துரைத்தார்.

மேலும், மனித உரிமை - மனிதஉரிமை என்று இவ்விடங்களில் இருந்து கூப்பாடு போடுவது பொருந்தாது என்றும், இவை பொதுவில் வெள்ளையர்களது கருத்துகள் என்றும் அலட்சியமாக நிராகரித்த அமைச்சர் வெள்ளையர்கள் எனது மக்களை மனித உரிமைகளினூடாகவா கையாண்டார்கள் எனவும், அதேவேளையில் அவர்கள் பற்றி மற்ற இலங்கையர்கள் ஏன் இவ்வாறு மனித உரிமைக்குரல்களை என்றும் எழுப்பவில்லை எனவும், விசமத்துடன் வினவினார். ஐம்பதுக்கு ஐம்பது என்ற ஜீஜீ.பொன்னாவின் கோரிக்கையையும் தொட்டுக்காட்டி தனது மக்களுக்கு எதிரான விடயங்கள் என்ற பாங்கில், மனித உரிமைகள் என்ற கோட்பாடுகளின் நிலைகொள்ளல் பற்றியும் சற்றே நையாண்டி செய்தார். தொடர்ந்து இவ்வாறான பதில்களின் போக்கினை மாற்றி இரு சமமான குழுக்கள் சமரிடும்போது இன்னல்கள், மனித உரிமை மீறல்கள் யாவும் சகஜமே எனத் தெரிவித்துக்கொண்ட அவர், இவ்வேளையில் எவ்வாறு ஒரு சாராரிடம் இருந்து மட்டுமே மனித உரிமைகளைப் பேணுமாறு எதிர்பார்ப்பது, கேட்டுக்கொள்வது என்று வினவினார்.

ஆகாயப்படையின் வடக்கு கிழக்குப் பிராந்தியக் குண்டுவீச்சுகளை நிறுத்த உதவுமாறு கேட்கப்பட்டபோது, மேற்கூறிய கருத்துகளை மீண்டும் கூறிய அமைச்சர், இரு குழுக்கள் சமமாக நின்று போரிடும்போது எவ்வாறு ஒரு பக்கத்தினரிடம் அவ்வகையான கோரிக்கைகளைத் தான் வைக்கமுடியும் என்று கேட்டுக்கொண்டார்.

திரு.தொண்டமானினது மனித உரிமைகள் பற்றிய மேலெழுந்தவாரியான போக்கினாலும், நிராகரிப்புத் தன்மையாலும் உந்தப்பட்டவர்கள் சிலர் மேற்படி கேள்விகளை குறிப்பாகவும், சம்பவங்கள் - பாதிப்புகள் என்ற புள்ளிவிவர அடிப்படைகளுடனும் முன்வைத்து அவரது கருத்தினை மீண்டும் கேள்விக்குள்ளாக்கினர்.

சின்ன விடயத்தைப் புரியமாட்டாதவர்களாக உள்ளார்களே என்ற நம்பிக்கையுடன் எழுந்த பொறுமையிழப்பினால் பாதிக்கப் பட்டவர் போலக் காட்டிக்கொண்ட அமைச்சர், இப்படியான கேள்விகள் - கருத்துகள் குழந்தைத் தனமானவை என வர்ணித்ததுடன், அவ்வகைக் கேள்விகள் தொடரவே, அவற்றின் அடிப்படையாக உள்ள தகவல்களைத் தான் எவ்வாறு உண்மைகள் என ஏற்றுக்கொள்வது எனக் கோபத்துடன் வினவினார். ஆனால், அக்கேள்வியினுள்ளே அமர்ந்துகொண்ட விசத்தைக் களையவேண்டும் என உணர்ந்தவர் போல் தொடர்ந்து, தானோ கேள்வி கேட்பவர்களோ இவ்விடங்களுக்கு நேரடியாகச் சென்று இத்தகவல்களின் உண்மையினை ஊர்ஜிதம் செய்யமுடியாத நிலையில் இவை பற்றித் தொடர்ந்தும் பேசுவது பிரயோசனமற்ற விடயம் என முடிவாகக் கூறினார்.

பேச்சுவார்த்தைகள் - தீர்வுகள் என்பதன் அடிப்படையில் எழுந்த கேள்விகளுக்குப் பதில் சொல்ல விழைந்த திரு.தொண்டமான், புலிகளுக்குத்

www.tamilarangam.net

தனிநாடு என்பதிலும் குறைந்த தீர்வில் விருப்பம் இருந்தபோதிலும், அது என்ன என்று தெரியாத குழப்பமான நிலையே தடங்கலாக இருப்பதாகத் தெரிவித்தார். இத்தடங்கலை நேர்கொள்ளவும் ஒரு ஆலோசனைத் தீர்வினை முன்வைப்பதன் மூலம் புலிகளது அதுகுறித்த கருத்துகளால் ஒருவித அறிவினை - ஆரோக்கிய நிலைமையினை வளர்த்து விடலாம் என்ற நோக்கத்திலேயுமே தான், இதொகா சார்பில் தனது தீர்வுக்கான ஆலோசனை முன்வைக்கப் பட்டது என்றும் கூறினார். இவ்வகையில் இம்முயற்சி தனது ஒரு யூகம் எனக் காட்ட முற்பட்டதால், முயற்சியின் தோல்விக்கு யார் காரணம் என்ற கேள்விக்கான பதிலாகக் கொண்டார்.

பல வேளைகளில் "எனது மக்கள் குறித்த முடிவுகளை நான் தனியே முடிவு செய்கிறேன், எனது கட்டுப்பாட்டுடனேயே எனது மக்கள் முன்செல்கிறார்கள்" எனத் தட்டிச் சொல்லிக் கொண்ட தொண்டமான், இவ்வேளைகளில் அம்மக்கள் வடக்கு கிழக்குத் தமிழர்களிடம் இருந்து வேறுபட்டவர்கள் என்பதையும், அவர்கள் புதிய திராணி கொண்டவர்கள் என்ற கருத்துகளை நேரடியாகவும், நாசுக்காகவும் சொல்லிவைக்கத் தவறிவில்லை. இவற்றின்போதும், வடக்கு கிழக்குத் தீர்வு குறித்த குறிப்பான கேள்விகளின்போது தடங்கல்களுக்கான காரணங்களில் ஒன்றாக இயக்கங்களிடையே உள்ள கருத்து வேறுபாடுகளைக் குறிப்பிட்ட அமைச்சர், சகலரும் இயக்கங்கள் உட்படப் புலிகளின்பின் சேரவேண்டும் எனக் கேட்டுக்கொண்டார். ஆனால், எந்த அடிப்படையில் அது சாத்தியம், எவ்வாறு ஏற்படுத்த முடியும் என்ற கேள்விகளைக் கேட்டும் கேளாதிருந்துவிட்ட திரு.தொண்டமான், ஒற்றையாட்சிக்கு உட்பட்ட தீர்வையே தான் எதிர்பார்ப்பதாகக் காட்டிக்கொண்டார்.

> இன்னும் எட்டு வருடங்களில் உலகம் முழுவதும் ஏறத்தாழ மூன்றுகோடிக்கும் நாலுகோடிக்கும் இடைப்பட்ட மக்கள் (ஆண்கள், பெண்கள், குழந்தைகள்) எய்ட்ஸால் பீடிக்கப் படுவர். இவர்களில் 90%மானோர் அபிவிருத்தி அடையும் நாடுகளில் இருப்பர்.
>
> குறைந்தது ஒவ்வொரு வருடமும் பத்துலட்சம் பேருக்குப் புதிதாக எய்ட்ஸ் தொற்றும். தன்ஸானியாவில் மாத்திரம் எட்டு வருடங்களுக்குள் 24லட்சம் பேர் எய்ட்ஸ் தொற்றலுக்கு உள்ளாவர்.
>
> – சிவன் –

நோபல் பரிசுபெற்ற சிலரால் ஐ.நா. தலையீட்டினை உருவாக்க ஏற்படுத்தப்படும் முயற்சிகளை, "நெடுகலும் பேசப்படும் பழைய விடயம்" என்று நிராகரித்த அமைச்சர், இந்தியா இம்முயற்சியை எவ்வாறு நோக்கும், இந்திய - இலங்கை ஒப்பந்தம் குறித்த இந்தியாவின் இன்றைய நிலைப்பாடு பற்றிய கேள்விகளைக் காதிலும் வாங்கிக்கொள்ளவில்லை. "அவர்கள் (இந்தியா) தாமே குழம்பிப் போயுள்ள வேளையில் அவர்களிடம் இருந்து எதனையும் எதிர்பார்க்க முடியாது" என்றுமட்டும் கூறிவைத்தார். மேலும், இந்தியாவில் உள்ள அகதிகளை வலுக்கட்டாயமாகத் திருப்பி அனுப்புவதைத் தான் ஏற்கவில்லை என்றும், அதனைத் தான் இந்திய மண்ணிலேயே தெரிவித்ததாகவும் கூறினார். அகதிகள் குறித்த இன்னுமொரு கேள்வியில், ஐரோப்பிய அகதிகளை மலைநாட்டுப் பிரதேசத்தில் முகாம்களில் சேர்ப்பது என்ற

www.tamilarangam.net

ஆலோசனை மடைத்தனமானது என்றும், தமக்கு ஏற்கனவே பிரச்சனைகள் உள்ளனவென்றும் இது சாத்தியப்படாது என்றும் நிராகரித்தார்.

கேள்விகளிடையே அவ்வப்போது அரசியற் துணுக்குகளையும், குறிப்புகளையும் கூறி இலைமறைகாயாகப் பல விடயங்களைச் சொல்ல விழைந்தார் திரு.தொண்டமான். இலங்கைவாழ் தமிழ் பேசுவோர் அனைவரும் ஒரே இனத்தவர் என்றும் அவர்களுக்குத் தொண்டமானே தலைமை ஏற்கவேண்டும் என்ற போர்வையில் எழுந்த கோரிக்கைகள் கேள்விகளுக்குப் பதிலளித்த அமைச்சர், வட்டுக்கோட்டைத் தனிநாட்டுப் பிரகடனம் த.வி.கூட்டணியினரால், இதொகா அதிலிருந்தபோதிலும், தம்மைக் கேட்டுக்கொள்ளாது செய்த முடிவு எனவும், அதனைத் தான் ஏற்கமுடியாது என உடனேயே மறுத்ததாகவும் குறிப்பிட்டார். ஆனால் தந்தை செல்வா அவர்கள், நாம் எல்லோரும் தமிழர்கள் - இன்று தமிழர் விடுதலைக் கூட்டணியில் இருந்து பிரிந்து சென்றுவிடாதீர்கள் எனத் தன்னைக் கேட்டுக் கொண்டதாகவும் தொண்டமான் கூறினார். தம்மை இனிமேல் அலட்சியமாகப் பாவித்துவிட முடியாது என்பதையே சொல்வதுபோல் இருந்தது. மேலும் 83இன் பின்னடியில் மன்னார் பா.உ, சூசைதாசன் தன்னைச் சந்தித்தபோது த.வி.கூட்டணியினரை வியாபாரம் இழந்துவிட்ட ஸ்தாபனமாகத் (company) தான் வர்ணித்ததுடன் அதைக் கலைத்துவிடுமாறு வேண்டிக் கொண்டதாகவும் கூறினார்.

தமிழ் பேசுபவர்கள் யாவரினதும் தலைவனாகுமாறு கேட்டுக் கொள்வதால் தான் மனச் சந்தோஷம் அடைந்த போதிலும், தனது தொகுதி - மக்கள் - வாக்காளிகள் யாவரும் தனது மக்களே என்றும் அவர்களைவிட்டுத் தன்து அரசியற் பரப்பு மாறாது என்றும் அவர் தெரிவித்தார். மேலும், தனது மக்கள் சார்பில் பல வெற்றிகளைக் கண்டுள்ள போதிலும், அவர்கள் இன்றும் வடக்கு கிழக்கு மக்களின் பொருளாதார மற்றும் நிலைகளில் தாழ்ந்தவர்களே என்றும், அதைச் சமப்படுத்துவதே தனது இன்னும் அரைகுறையாக உள்ள பாரிய கருமம் எனவும் கூறி, அவை குறித்தே தனது கருத்துகளும் கடமைகளும் அமையும் என உறுதியாகக் கூறினார்.

தமிழர்கள் (வடக்கு கிழக்கில்) அரசினால் வருத்தப்படும் போது தமிழரான அவர் அமைச்சராக இருப்பது தகைமையல்ல எனச் சபையிலிருந்து கருத்துத் தெரிவித்தபோது, மீண்டும் தனது மக்களது பற்றித் தான் கொண்ட கருமங்களைச் சுட்டிக் காட்டிய திரு தொண்டமான் அவற்றின் அடிப்படையிலான கடமைகளாலேயே தான் அமைச்சராக இருப்பதாகக் கூறினார். இதனைவிட ஒருகாலத்தில் தானா, சிறில் மத்தியூவா என்றதன் அடிப்படையில் ஒருவித பரீட்சாத்திரமும் இருந்ததாகவும், மீண்டும் தான் வெற்றிபெற வேண்டியது கடமை எனவும் காட்டிக்கொண்டார்.

கூட்டமுடிவில் நன்றியுரையாற்றிய வழக்குரைஞர் திரு.சிதம்பரப்பிள்ளை அவர்கள், தொண்டமான் இவ்வளவு கூறியபின்னும், அவரை இலங்கைவாழ் சகல தமிழரது தலைவருக்கான பொறுப்பை உடனடியாக ஏற்க வலியுறுத்தினார். மேலும் 2/3 அந்நியநாட்டுச் செலாவணியை ஈட்டித்தரும் மலையகத் தமிழரது தொழிலாள பலத்தை உடனடியாக வடக்கு கிழக்கில் இடம்பெறும் போருக்குச் சாதகமான முறையில் நிர்மாணித்து, அப்போருக்கு உடனடித் தீர்வு காணவேண்டும் எனக் கேட்டுக் கொண்டார். தன்னைப்

www.tamilarangam.net

பொறுத்தவரை அமைதியையும் சமாதானத்தையுமே அன்று அங்கு

குழுமியிருந்தவர்கள் யாவரும் விரும்புகிறார்கள் என்று முடிவில் தெரிவித்த திரு.சிதம்பரப்பிள்ளை அவர்கள், திரு. தொண்டமான் அதைப் பெற்றுத் தருவதையே கருமமாகக் கொள்ளவேண்டும் என வலியுறுத்தினார்.

திரு.தொண்டமானை நேரில் கண்டு பரிச்சயமற்ற, அன்றைய கூட்டத்தில் இருந்த அனைவருக்கும் அவரது அன்றைய நடத்தை புரிந்துகொள்ள முடியாததாகவே பட்டது. அமைச்சராக இருக்கும் ஒரு தலைவர் எதேச்சாதிகாரமாகப் பதில்களையும் கருத்துகளையும் தேர்ச்சி செய்யப்படாத வார்த்தைகளால் தெரிவித்ததைக் கண்டு பலர் ஏமாற்றம் கொண்டவர்களாகக் காணப்பட்டனர். ஆனால் அவர்களது ஏமாற்றத்தின் பின்னணியில் அவரை ஒரு புத்திஜீவியாக 'கணித்துவிட்டதுதான்' என்ற காரணத்தைக் காண முடியாமல் இருந்தது. அவரது நடத்தையையும், பொதுவான கூட்டத்தினரது ஏமாற்றத்தையும் சித்தரிக்கக் கூடியதான இரு குறிப்புகள் பின்வருமாறு:

மலையக மக்கள் தீவிரவாதியான திரு சந்திரசேகர் சிறைவைக்கப் பட்டுள்ளமை பற்றித் தொடர்ந்து வினவியதால் பொறுமையிழந்த தொண்டமான், "சந்திரசேகரன், ஆமா அவன் எங்கட ஆளு. நான்தான் கூட்டிச்சென்று ஆளாக்கினேன். இன்று உள்ளுக்கிருப்பான். வருவான் நாம பாத்துக்குவம்....." என்று இப்படியான விளக்கம் சொன்னார்.

முடிவில் கூட்டத்தில் இருந்த ஒருவர் சொன்னது, "எங்கட போராட்டத்தை வைச்சு இந்தியர் தங்கள் அலுவலைப் பார்த்துக் கொண்டார்கள், கெட்டித்தனம்தான்" ●

---

●

சுவடுகள் இந்த இதழுடன் ஐந்தாண்டுகளை நிறைவு செய்கிறது. வாசகர்களிடம் இருந்து விமர்சனங்களையும், படைப்புகளையும் எதிர்பார்க்கிறோம்.

– சுவடுகள் –

## அடுத்த இதழ்:

*சிறப்புக் கவிதைகள்*
*ஒஸ்லோ கோடைகால விளையாட்டுகள்*
*சில கலைநிகழ்வுகள் – ஒரே பார்வையில்*
*இலங்கை சென்று திரும்பிய நோர்வேஜியர் ஒருவரது நேரடி அனுபவங்கள்.*
*தில்லையின் கடிதமும் கவிதையும் மற்றும் வழமையான அம்சங்களுடன்.*

## ஐரோப்பிய வாசகர்களுக்கு:

*உங்களிற் பலரது சந்தா வந்து சேரவில்லை. உடன் சந்தா கிடையாவிடில் அல்லது நீங்கள் தொடர்பு கொள்ளாவிடில் இந்த இதழுடன் உங்களது சந்தாவை நிறுத்த நேரிடலாம். சிரமத்துக்கு வருத்துகிறோம், ஆனால் அதைவிடச் சிரமத்தைச் சுவடுகள் எதிர்நோக்குகிறது.*

*– சுவடுகள் –*

## சுவடுகள் சந்தா

பன்னிரு இதழ்களுக்கு 300 குறோணர்கள். வங்கிக் கணக்கிலக்கம்: 160752 13062 (SparebankenNOR). வங்கியூடாக மாத்திரமே பணம் செலுத்தவும்.

●சுவடுகள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பிரதம ஆசிரியரின் கைது

நீதிமன்றம் ஒருவருக்குப் பிணை கொடுப்பதென்றால் குற்றவாளியென்று கருதக்கூடிய ஒருவருக்கல்லவா பிணை கொடுக்க முடியும்? குற்றமற்றவருக்கு ஏது பிணை?

கொழும்பில் தமிழ் இளைஞர் யுவதிகளைக் கண்மூடித்தனமாகக் கைது செய்கின்ற பொலிசாரின் நடவடிக்கை பெரும் கிலியை ஏற்படுத்தியுள்ளது. இதையிட்டு பத்திரிகைகளிலும் பாராளுமன்றத்திலும் கேள்விகள் எழுப்பப்பட்டு, அதற்கான ஏதோ சமாதானங்கள் கூறப்பட்டுமுள்ளன. இந்நிலையில் இவ்வாறான வகையில் கைது செய்யப்பட்டவர்கள் சிலரைச் சந்தித்து அவர்களது அனுபவங்களை எமது சஞ்சிகையில் பிரசுரிப்பதற்காக அப்படி நிகழ்ந்தவற்றைக் கூறுவதற்கு முன்வரக்கூடியவர்கள் உள்ளனரா எனத் தேடிக் கொண்டிருந்தேன். ஆனால் எனது அதிர்ஷ்டம் – தமிழ் மக்களுக்குப் பீடித்த பொதுவான துரதிர்ஷ்டம், நானே கைது செய்யப்பட்டு அந்த ‘சுவையான’ அனுபவத்தை விலாவாரியாக ஊட்டப் பெற்றேன். ஆம்! ஒரு பத்திரிகையாளனாக, பிரதம ஆசிரியராக இருந்தும், பத்திரிகையாளர்கள் பொலிசாரால் தொல்லைப்படுத்தப் படமாட்டார்கள், பொலிசார் யாவரும் அறிவுறுத்தப் பட்டுள்ளார்கள், என்ற அரசாங்கத்தின் வெளிப்படையான உத்தரவாதத்திற்குப் பின்பும், வேறெந்தக் காரணத்திற்காகவுமல்ல, தமிழனென்ற ஒரே

எடுத்துக்கொண்டு தம்மோடு புறப்படும்படி சொன்னார்கள். நான் அவ்விடத்தில் அவர்களுக்குச் சொன்னேன் நான் ஒரு பத்திரிகை ஆசிரியர், பொலிசார் பத்திரிகையாளர்களைத் தொந்தரவு செய்ய மாட்டர்கள் என்ற உத்தரவாதம் எமக்குத் தரப்பட்டுள்ளது, முன்னாள் அமைச்சரவைப் பேச்சாளராக இருந்த இன்றைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவே அப்படித் தெரிவித்திருந்தார், இதுகுறித்துப் பொலிசாருக்கும் அறிவிக்கப் பட்டுள்ளதாக

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

காரணத்திற்காக நானும்தான் கைது செய்யப் பட்டேன்.

28.06.93

இரவு சுமார் 10.30மணி. நான் சற்று நேரத்திற்கு முன்னர்தான் உணவருந்திவிட்டு அறைக்குத் திரும்பியிருந்தேன். வெளிநாட்டில் இருந்து வந்திருந்த எனது மைத்துனர் ஒருவருடன் கதைத்துக் கொண்டிருந்தேன். திடீரெனப் பொலிசார் உள்ளே நுழைந்தார்கள். இருவரையும் மாறிமாறிக் கேள்வி கேட்டார்கள். பின்னர் எம்மை எமது அடையாள அட்டைகளை



அவர் கூறியிருந்தார், அதனால் நீங்கள் இவ்வாறு என்னைக் கைது செய்வது தவறு என்று. அத்துடன் எனது அடையாள அட்டை, வேலை அட்டை என்பவற்றையும் காண்பித்தேன். ஆனால் அவர்களோ நான் கூறும எதையும் காதில் வாங்கிக் கொண்டவர்களாகத் தெரியவில்லை. எம்மிருவரையும் கூட்டிச் சென்று ஜீப்பில் ஏற்றினர். நான் உள்ளே காவலுக்கிருந்த பொலிசாருக்கும் அதையே திரும்பச் சொன்னேன். அதை அவர்கள் உதாசீனம் செய்துவிட்டுத் தங்கள் பாட்டில் இருந்தார்கள். பின்னர் அவ்விடத்தில் உள்ள சிங்கள நபரொருவருடன் மீதிப் பொலிசாரும் ஜீப்பில் ஏறிக்கொள்ள ஜீப் புறப்பட்டது. அந்த நபர் ஒரு ஒழுங்கையுள் இட்டுச் சென்று ஏதோ ஒரு வீட்டைக் குறிப்பிட்டுவிட்டு முன்னரே இறங்கிக்கொள்ள, பொலிஸ் அந்த வீட்டிலிருந்தும் பல தமிழ் இளைஞர்களையும் பெண்களையும் அழைத்துவந்து ஜீப்பில் ஏற்றினர். பெண்களைக் கைது செய்தபோது பெண் பொலிசார் எவரும் வந்திருக்கவில்லை. ஜீப் பொலிஸ் ஸ்ரேஷனை அடைந்ததும் எம்மை அங்கிருந்தவர்களிடம் பொறுப்பளித்துவிட்டு எம்மைக் கூட்டி வந்தவர்கள் போய்விட்டார்கள்.

எம்மில் மொத்தம் 22பேர் இருந்தோம். அதில் எட்டுப்பேர் பெண்கள். அங்கு இரண்டு கூண்டுகள் இருந்தன. அதற்குள் ஏற்கனவே சிலர் இருந்தார்கள். அக்கூண்டுகளுள் ஆண்களைப் போகச் சொன்னார்கள். பெண்களைக் கூண்டுக்கு வெளியே இருந்த அறையில் வாங்குகளில் இருக்கச் சொன்னார்கள்.

அதன்பின்னர் யாவரையும் முன்னறைக்குக் கூட்டிச்சென்று பெயர் விலாசம் பதிந்தார்கள். எனது முறை வந்தபோது நான் அவர்களுக்குச் சொன்னேன், நான் ஒரு பத்திரிகையாளன் என்று கூறியும் இங்கு கூட்டி வந்துள்ளார்கள், இப்படிச் செய்வது தவறு என்று. அவர்களோ அதை அசட்டை செய்துவிட்டுப் பெயர் விலாசம் பதிந்தார்கள். அப்போது நான் அவர்களைக் கேட்டேன் அப்படியானால் நான் இங்கு முறைப்பாடு கொடுக்கிறேன் அதை எழுதிக் கொள்ளுங்கள் என்று. அதற்கு அவர்கள் நாளைக்கு ஓ.ஐ.சி. வருவார், அவரிடம் கொடுக்கும்படி கூறினார்கள்.

பின்னர் எம்மைத் திரும்பவும் அழைத்துவந்து ஆண்களை அவ்விரு கூண்டுகளுள்ளும் பெண்களை வெளி வாங்குகளிலும் விட்டார்கள்.

நான் இருந்த கூண்டு சுமார் 5அடி அகலமும், 18அடி நீளமும் கொண்டது.

www.tamilarangam.net

அதற்குள் 5அடி அகலத்தில் ஒரு குந்து கட்டப் பட்டிருந்தது. உள்ளே ஏற்கனவே நால்வர் இருந்தனர். மூவர் போதைப் பொருள் தொடர்பாகவும் ஒருவர் களவு தொடர்பாகவும் அடைக்கப் பட்டிருந்தனர். அத்துடன் என்னோடு சேர்த்துக் கொண்டுவரப் பட்டவர்கள் ஐவர், மொத்தம் ஒன்பது பேர். குந்தின்மேல் ஏற்கனவே இருவர் படுத்திருந்தார்கள், கீழே எமக்குக் குறுக்குப் பாட்டாகவே படுக்க வேண்டும். இடமில்லை. அப்படிப் படுப்பதற்கும் கால்நீட்ட முடியாது. முடங்கியபடியே படுக்க வேண்டும். சலம் கழிக்க மூலையில் சிறுதுளை கொண்ட கட்டு ஒன்றுள்ளது. போதைப் பொருட்காரர் அடிக்கடி சலம் கழிக்கச் சென்று கொண்டிருந்தார். கூண்டு முழுவதும் ஒரே துர்நாற்றம் வீசியபடி இருந்தது. இரவு முழுவதும் அவ்வாறே நாம் கழிக்க நேர்ந்தது. பெண்களைப் பொறுத்தவரை மூதாட்டி ஒருவர் அவர்களைக் கவனிப்பதற்காக அமர்த்தப் பட்டிருந்தார்.

விடிந்ததும் நான் அங்கிருந்த பொலிஸாரிடம் அப்பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியைச் சந்திக்க வேண்டுமெனக் கேட்டேன். அவர் இன்னும் வரவில்லை என்று கூறப்பட்டது. எனது உறவினர்களுக்குத் தொலைபேசி மூலம் அறிவிக்க வேண்டுமென்று கேட்டேன். என்று காரணம் கூறினார். எனது வாக்குமூலம் சிங்களத்தில் பதியப்பட்டது. மொழி புரியாததால் அதில் என்ன எழுதப் பட்டுள்ளதென்பதைத் தெரிந்துகொள்ள முடியவில்லை.

நாம் மீண்டும் பழையபடி கூண்டுகளில் அடைக்கப் பட்டோம். பின் நான் சொல்லியனுப்பிய தகவல் கிடைத்து, என் உறவினர்கள் வந்து என்னைப் பார்வையிட்டனர். அவர்கள் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியிடம் பேசியதில் எம்மை சுமார் பி.ப.1.30மணிபோல் நீதிமன்றத்திற்குக் கொண்டுசென்று பிணையில் விடுவிப்பார்கள் என்றும் யாராவது பிணை எடுக்க வரவேண்டும் எனவும் கூறப்பட்டது.

சுமார் ஒருமணிபோல் எம்மை அழைத்துச் சென்று படம் எடுத்தனர். ஆண்களை சேட்டைக் கழற்றி அரை வெற்றுடம்புடன் இலக்கத் தகடுகளைக் குறுக்காகப் பிடித்துப் படம் எடுத்தார்கள். பின்னர் யாவரையும் நீதிமன்றத்திற்குக் கொண்டு சென்றார்கள்.

அங்கு ஆண்கைதிகளை ஏற்கனவே வேறு இடங்களில் இருந்த சிங்களக் கைதிகள் இருந்த கூட்டில் விட்டார்கள். அக்கைதிகளில் சிலர் எம்மை வெருட்டி எமது பைகளைத் துழாவிப் பணம்பறிக்க முற்பட்டனர். சிலர் ஏற்கனவே பணம் பொருட்களை அனுபவிப்பதில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். இவற்றுக்கு மத்தியில் நாம் சுமார் 4.30வரை இருந்துவிட்டுப் பின்னர் நீதிமன்றத்திற்கு அழைக்கப் பட்டோம். அங்கு ஏற்கனவே வந்திருந்த எமது உறவினர்கள் மூலம்

ஒவ்வொருவருக்கும் தலா 750ரூபா பிணைசெலுத்தி எம்மைப் பிணையில் விட்டார்கள். எமக்கு ஆடி 6ஆம் திகதி நீதிமன்றம் வரவேண்டும் எனத் தெரிவிக்கப் பட்டது.

6.7.93 அன்று எமது வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப் பட்டது. எட்டுப் பெண்கள் உட்படப் பத்தொன்பது பேரும் பெயர்கள் வாசிக்கப்பட்டு, கூண்டில் ஏற்றப்பட்டு எவ்வித விசாரணையும் இன்றி 'விடுதலை செய்யப் படுகிறீர்கள்' என்ற ஒரு வார்த்தையுடன் விடுதலை செய்யப் பட்டோம். எமக்கு எதிராகப் பொலிஸார் கொடுத்திருந்த விளக்கம் விஷேட சுற்றிவளைப்பொன்றில், கொழும்பில் ஏன் நிற்கிறார்கள் என்ற சரியான காரணம் காட்டாததால் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப் பட்டார்கள் என்பதே. விடுதலை செய்யப் பட்டபோது 'பயங்கரவாதச் செயற்பாட்டுடன் இவர்களுக்கு எந்தவிதச் சம்பந்தமும் இல்லை என்பதால் விடுதலை

www.tamilarangam.net

மறுக்கப்பட்டது. எனக்கு வெளியால் உள்ளவர்களுடன் தொடர்பு கொள்ள எந்த வழியும் செய்து தரப்படவில்லை. அங்கு கைதிகளைப் பார்க்க வந்தவர்களிடம் மட்டும் எனக்கு வேண்டியவர்களுக்குத் தகவல் கொடுக்கும்படி கேட்டுக்கொண்டேன்.

சுமார் காலை 8.30போல் காலைக்கடன் முடிக்க எம்மை வெளியால் அழைத்துச் சென்று வந்தார்கள். அப்போது பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி வந்திருப்பதைக் கண்டு நான் அவரைச் சந்திக்க வேண்டும் எனக் கேட்டேன். அதற்கு மறுத்துவிட்டார்கள். இதேவேளை எம்மோடு அழைத்துவரப்பட்ட மூவர் ஏதோ சிபார்சின் பேரில் விடுவிக்கப் பட்டனர்.

பின்னர் சுமார் 10.30 மணியளவில் எம் எல்லோரையும் அழைத்துச் சென்று கைரேகை பதிந்து வாக்குமூலம் எடுத்தார்கள். நான் மீண்டும் அவ்விடத்தில் அவர்கள் செய்வது தவறு எனக் கூறினேன். என்னிடம் வாக்குமூலம் பெற்றபோது நான் ஒரு பத்திரிகையாளன் என்று கூறியும்கூட என்னை உங்கள் அமைச்சரின் உத்தரவாதத்திற்கு மாறாக இவ்வாறு கைது செய்தது சரியா என வினவினேன். அதற்கு அவர், பொதுவாக மேற்கொள்ளப்படும் கைது நடவடிக்கையில் உங்களையும் கைது செய்துள்ளார்கள்

> **கொழும்பில் தமிழ் இளைஞர்-யுவதிகளைக் கண்மூடித்தனமாகக் கைது செய்கின்ற பொலிசாரின் நடவடிக்கை பெரும் கிலியை ஏற்படுத்தியுள்ளது. இதையிட்டுப் பத்திரிகைகளிலும் பாராளுமன்றத்திலும் கேள்விகள் எழுப்பப்பட்டு அதற்கான ஏதோ சமாதானங்கள் கூறப்பட்டுமுள்ளன. இந்நிலையில் இவ்வாறான வகையில் கைது செய்யப்பட்டவர்கள் சிலரைச் சந்தித்து அவர்களது அனுபவங்களை எமது சஞ்சிகையில் பிரசுரிப்பதற்காக அப்படி நிகழ்ந்தவற்றைக் கூறுவதற்கு முன்வரக்கூடியவர்கள் உள்ளார்களா என்று தேடிக்கொண்டிருந்தேன். ஆனால் எனது அதிர்ஷ்டம் - தமிழ் மக்களுக்கு பிடித்த பொதுவான துரதிர்ஷ்டம். நானே கைது செய்யப்பட்டு அந்த "சுவையான" அனுபவத்தை விலாவாரியாக ஊட்டப்பெற்றேன்.**

பறிகொடுத்து விட்டார்கள். அதைக்கண்டு நாம் கூச்சலிட்டு சிறைக்காவலர்களை அழைத்து முறையிட்டோம். சிறைக்காவலர்கள் உடனே அவர்களை வேறு கூட்டினுள் பிரித்து விட்டார்கள். அதற்குள் இருந்த அவர்கள் எம்மை மகர சிறைச்சாலைக்கு வருவீர்களாயின் கால்களை ஒடிப்போம் என மிரட்டினர். எம்முடன் மீந்திருந்த வேறுசில சிங்களக் கைதிகள் களவாக உள்ளே தருவித்துக்கொண்ட போதைப்

செய்யப் படுகிறார்கள்' என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

இன்றுவரை சுமார் எண்ணாயிரத்துக்கு மேற்பட்ட கொழும்பு வாழ் தமிழ் மக்கள் - ஆண்கள் பெண்கள், பலதரப்பட்ட ஊழியர்கள், வயதானவர்கள், சுகவீனமானவர்கள் என்ற பேதமின்றி எழுந்தமானமாகக் கைது செய்யப்பட்டு இவ்வகை அனுபவத்தின் ஊடாகச் சென்று வந்துள்ளார்கள். இவ்வனுபவம் இவர்களின் குறைந்தபட்ச வேதனை மட்டுமே. பலருக்கு இதைவிட மோசமான அனுபவங்களும் நிகழ்கின்றன. அவர்கள் பல நாட்கள் தடுத்து வைக்கப் பட்டிருக்கலாம். தாக்கப் பட்டிருக்கலாம். மேலும் உளவியல் ரீதியாகவும் பாதிக்கப் பட்டிருக்கலாம். இவர்கள் திடீரெனக் கைது செய்யப் படுவதால் எவ்வளவோ முக்கிய அவசர காரியங்கள் கைவிடப் பட்டிருக்கலாம். அவற்றின் பாதிப்புகள் சிலசமயம் பாரதூரமானதாகவும் இருக்கலாம். ஒரு வெளிநாட்டுப் பயணம் நின்றுபோயிருக்கலாம். திருமணம் பிற்போடப் பட்டிருக்கலாம். வேலைக்கான நேர்முகப் பரீட்சை ஒன்று தவறிப் போயிருக்கலாம். இதைவிட இவர்களை மீட்பதற்காக உத்தியோகபூர்வமாகக் கொடுக்கப்படும் பிணை மற்றும் செலவினங்கள் தவிரப் பன்மடங்கு பணம்



www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வழக்கறிஞர்களுக்கும் சலுகை கருதிப் பொலிசாருக்கும், அலைந்து திரிவதில் ஓட்டோ, டாக்சி போன்றவற்றிற்கும் தொலைபேசிக்கும் என்றுவேறு செலவாகிறது.

இப்படியான ஒரு அவலநிலை எந்தக் குற்றத்திற்காக இத்தமிழ் மக்கள் மீது சுமத்தப் பட்டிருக்கிறது? உண்மையில் கொழும்பு வந்துள்ள பெரும்பாலான தமிழ் மக்கள் வடக்கு கிழக்கில் இருக்கின்ற பாதுகாப்பற்ற கடினமான வாழ்நிலையில் இருந்து தப்பித்துப் புலம்பெயர்ந்தவர்களே. இவர்களை வரவேற்று அபயமளிக்க வேண்டிய ஓர் கடமைப்பாடுடைய ஓர் அரசாங்கம் இவர்களை அனுதாபக் கண்கொண்டு பார்க்க வேண்டியதற்குப் பதிலாக மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் ஏன் இவ்வாறு தொல்லைப் படுத்துகிறது?

இப்படி ஒரு அரசாங்கம் நடத்துவதைப் பார்த்தால் தமிழ் மக்கள் அனைவரையும் பயங்கரவாதிகளாகவே அது பார்க்கிறது என்பதைத்தான் உணரமுடிகிறது. ஒரு நாட்டின் பாதுகாப்பிற்காக என்று போடப்பட்ட சட்டங்களும் நடவடிக்கைகளும் எவ்வாறு குறிப்பாக ஒரு இனத்துக்கு எதிராகச் செயல்படுத்தப் படுகிறது என்பதை நாம் இங்கு பார்க்க முடியும். உதாரணத்திற்கு என்னைக் கைது செய்த

> எட்டுப் பெண்கள் உட்பட பத்தொன்பது பேரும் பெயர்கள் வாசிக்கப்பட்டு கூண்டில் ஏற்றப்பட்டு எவ்வித விசாரணையும் இன்றி "விடுதலை செய்யப்படுகிறீர்கள்" என்ற ஒரு வார்த்தையுடன் விடுதலை செய்யப்பட்டோம். எமக்கு எதிராக பொலிஸார் கொடுத்திருந்த விளக்கம் விசேட சுற்றிவளைப்பொன்றில், கொழும்பில் ஏன் நிற்கிறார்கள் என்ற சரியான காரணம் காட்டாததால் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டார்கள் என்பதே. விடுதலை செய்தபோது "பயங்கரவாதச் செயற்பாட்டுடன் இவர்களுக்கு எவ்விதச் சம்பவமும் இல்லை என்பதால் விடுதலை செய்யப்படுகிறார்கள்" என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தது.


என்பதே ஒழிய அவ்விடத்தில் எதையும் செவிமடுப்பதாக இருக்கவில்லை.

குற்றவாளிகளை இனங்கண்டு தேடிப்பிடிக் முடியாத அரச பாதுகாப்புப் படைகளின் இயலாமையையும் பலவீனத்தையும் மறைக்க அது மறுதலையாக சகல தமிழ் மக்களையுமே கைது செய்து அவர்களுக்குள்ளிருந்து குற்றவாளிகளைக் கண்டுபிடிக்கலாம் என்ற ஓர் இலகுவான மூடத்தனமான முடிவை எந்தவித சமுதாயப் பொறுப்பும் இல்லாமல் மேற்கொண்டுள்ளது. இது கடலை இறைத்து மீனைப் பிடிப்பது போன்றதாகும். இவர்கள் சிலவேளை ஓரிரு பயங்கரவாதிகளை இவ்வகையில் பிடிக்கக் கூடும். ஆனால் இந்த இம்சை ஆத்திரமுற்ற பலரைப் புதிதாகப் பயங்கரவாதிகளாக மாற்றத்தான் வழிகோலும். நேரடியாக அவ்வாறு மாறாவிட்டாலும் கூட பயங்கரவாதிகளுக்குச் சாதகமான உளப்பாங்கையே அவர்களை அடையவைக்கும். இவ்வகை அனுபவத்திற்கு உட்படுகையில் கௌரவமான ஒரு பிரஜை காரணம் எதுவும் கூறப்படாமல் கைது செய்யப்பட்டு குற்றவாளிகளுடன் சேர்த்து அடிப்படை வசதிகள் கூட அற்ற ஒரு சிறைக்கூண்டில் அடைக்கப்பட்டு அவமானப் படுத்தப் படுகையில் அவற்றை இலங்கையின் பாதுகாப்புச் சட்டங்கள் நீ தமிழன் என்ற காரணத்தினால் இந்த அவமானம் உனக்கு உபாக்கியதை உடையதுதான் எனச் சொல்வதாக அவன் உணர்கையில், இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் சமத்துவமான குடிமக்களுள் ஒருவனாகவா தன்னை உணருவான்?

இன்னுமொரு விடயம். அரசாங்கம் அதன் பொறுப்புமிக்க அமைச்சர்கள் மூலம் கொடுக்கும் உத்தரவாதங்கள நடைமுறையில் எவ்வாறு உதாசீனப்படுத்தப் படுகின்றன எற்பதையும் இங்கு

www.tamilarangam.net

சம்பவத்தை எடுத்தால் எனது அறைக்குள் பொலிசார் பிரவேசிக்கும்போது அதற்குள் யார் இருக்கிறார்கள் என்றே அவர்களுக்குத் தெரியாது. எனது பெயர் என்ன? தொழில் என்ன? வயதென்ன? உருவம், நிறம், ஆணா பெண்ணா எதுவுமே அவர்களுக்குத் தெரியாது. ஆக அவர்களுக்குத் தெரிந்த ஒன்று இதற்குள் யாரோ தமிழர்கள் இருக்கிறார்கள் என்பது மட்டும்தான். உள்ளேவந்த பின்னர்தான் உனது பெயரென்ன தொழிலென்ன ஊரென்ன என்று கேட்கிறார்கள். ஆனால் இவர்கள் என்னைக் கைது செய்ததற்குக் கொடுக்கப்பட்ட சட்டரீதியான விளக்கம் 'நியாயமான சந்தேகத்தின் பேரில்' (on reasonable suspicion) என்பதே. ஆக அவர்களுக்கு என்மீது சந்தேகம் எழுந்ததற்கான வலுவான நியாயம் இவன் ஒரு தமிழன் என்பது மட்டும்தான். ஏனெனில் அது மட்டுமே அவர்களுக்கு முன்னமே தெரிந்திருந்தது. இவர்கள் தமது குற்றப் பத்திரத்தில் குறிப்பிட்டதுபோல கொழும்பில் நிற்பதற்குத் தகுந்த காரணம் அளிக்க முடியாதவனாக அல்லாமல் தகுந்த அத்தாட்சிகளைக் காண்பித்தும்கூட என்னை அழைத்துச் சென்றார்கள். (இவ்வாறு பலருக்கு நிகழ்ந்துள்ளது) இவற்றிற்கெல்லாம் அவர்களின் பதில் பொலிஸ் ஸ்டேசனில் வந்து சொல்



காணமுடியும். தற்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க முன்னர் அமைச்சரவைப் பேச்சாளர் என்ற நிலையில் பத்திரிகையாளருக்குத் தந்த உத்தரவாதம் ஒன்றும் இலகுவாகப் பெறப்பட்ட ஒன்றல்ல. பத்திரிகையாளரான கேலிச்சித்திர ஓவியர் யூனுாஸ் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலுடன் முனைப்புப் பெற்ற பத்திரிகையாளர் போராட்டம் பின்னர் வளர்ந்து வலுவடைந்து சென்ற ஒரு கட்டத்தில் வென்றெடுக்கப்பட்ட அவர்களின் உரிமைக்கான உத்தரவாதமாகும் அது. ஆனால் அந்த உத்தரவாதம் பாதுகாப்பு நடவடிக்கைகள் என்ற வகையில் இப்போது தமிழ்ப் பத்திரிகையாளர்களுக்கு மறுக்கப் படுவதை நாம் இங்கு காண்கிறோம். இதேவேளை தமிழ் அரசியற் தலைவர்கள் தமிழ் மக்களுக்கு ஏற்பட்டுள்ள

இன்றுவரை சுமார் எண்ணாயிரத்துக்கு மேற்பட்ட கொழும்பு வாழ் தமிழ் மக்கள் ஆண்கள், பெண்கள், பலதரப்பட்ட ஊழியர்கள், வயதானவர்கள், சுகயீனமானவர்கள் என்ற பேதம் ஏதுமின்றி எழுந்தமானமாக கைது செய்யப்பட்டு இவ்வகை அனுபவத்திற்கூடாக சென்றுவந்துள்ளார்கள். இவ் அனுபவம் இவர்களின் குறைந்த பட்ச வேதனை மட்டுமே. பலருக்கு இதைவிட மோசமான அனுபவங்களும் நிகழ்கின்றன.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

செல்லாக் காசாகிவிட்டது.

பெண்களைக் கைது செய்யும்போது பெண்பொலிசார் உடனிருக்க வேண்டும், கைது செய்யப் பட்டவர்கள் குற்றவாளிகளுடன் அடைக்கப் படுவது நிறுத்தப்பட வேண்டும், சரியான சான்றிதழைக் காண்பிப்பவர்கள் கைதாகக் கூடாது, என்பனவெல்லாம் இவற்றை மேற்கொள்பவர்களால் கருத்திற்கு எடுக்கப் படுவதாகவே தெரியவில்லை. இப்படியானால் இந்த உத்தரவாதங்களை ஏன் இவர்கள் வழங்கிறார்கள்? வெளிநாடுகளுக்கான ஒரு கண்துடைப்பாக மட்டுமா? சட்ட நடவடிக்கைகளுக்குப் போகும்போது இவ்வுத்தரவாதங்கள் சட்டப் பிரகாரம் வாதிடக்கூடிய அடிப்படைகள் அல்ல. அவற்றிற்கும் சட்டத்திற்கும் சம்பந்தமில்லை என்று சட்டத்தரணிகள் கூறுகிறார்கள்.

இவற்றைவிட கைது செய்யப் படுபவர்கள் தமது உறவினர்களுக்கு, அலுவலகத்திற்கு, அல்லது வழக்கறிஞர்களுக்குத் தொடர்புகொள்ள விடப்படுகிறார்களில்லை. இந்நிலையில் அவர்களுக்காகப் பிணை எடுக்க ஒருவர் நீதிமன்றம் வராவிட்டால் அவர்கள் நீண்ட நாட்கள் தடுத்து வைக்கப்பட வேண்டி நேரிடும். அவர்களது வாக்குமூலங்கள் தமிழ் நன்றாகப்

எனது அறைக்குள் பொலிசார் பிரவேசிக்கும்போது அதற்குள் யார் இருக்கிறார்கள் என்றே அவர்களுக்குத் தெரியாது. எனது பெயர் என்ன? தொழில் என்ன? வயதென்ன? உருவம், நிறம், ஆணா, பெண்ணா, எதுவுமே அவர்களுக்குத் தெரியாது. ஆக அவர்களுக்குத் தெரிந்த ஒன்று இதற்குள் யாரோ தமிழர் இருக்கிறார்கள் என்பது மட்டும்தான். உள்ளே வந்த பின்னர்தான் உனது பெயர் என்ன? தொழில் என்ன? ஊரென்ன? என்று கேட்கிறார்கள்.

இவ்இன்னல்கள் குறித்து எடுத்துரைத்த போது அவர்களுக்குப் பொறுப்புமிக்க அமைச்சர்களால் வழங்கப்பட்ட உத்தரவாதங்களும் உதாசீனப் படுத்தப் படுவதைக் காணலாம். ஏன் அரசாங்கத்தின் அமைச்சரவையில் அங்கம் வகிக்கும் அமைச்சர் தொண்டமானிற்கு இதுகுறித்து வழங்கிய உத்தரவாதமும்கூட புரியாதவர்களாலேயே சிங்களத்தில் பதியப்படுகின்றன. அதில் என்ன எழுதியிருக்கிறது என்று தெரியாமலே அவர்கள் கையொப்பம் இடவேண்டியவர்கள் ஆகிறார்கள்.

இது ஓர் அடிப்படை மனித உரிமைகள் சம்பந்தமான பிரச்சனை, முதலில் இவ்வாறு ஒருவர், அல்லது ஒருதொகையானோர் என்ன குற்றத்திற்காக என்று கூறப்படாமல் திடீரெனக் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டு, கைரேகை அடையாளங்கள், வாக்குமூலங்கள், படங்கள் ஆகியவை எடுக்கப் படுவது அவர்களின் அடிப்படை உரிமைகளை மீறும் செயல் இல்லையா? நீதிமன்றம் ஒருவருக்குப் பிணை கொடுப்பதென்றால் குற்றவாளி என்று கருதக்கூடிய ஒருவருக்கல்லவா பிணை கொடுக்கமுடியும்? குற்றமற்றவருக்கு ஏது பிணை? இலங்கை நாட்டின் சட்டங்கள் இவற்றை அடிப்படை உரிமைகளை மீறும் செயல் அல்ல என்று காத்து நிற்குமேயானால் அது கூறும் செய்தி என்னவென்றால், குற்றமற்ற ஒரு மனிதன் அல்லது ஒருதொகை மனிதர்கள் இவ்வளவு வேதனைகளுக்கும் எந்த மறுப்பும் இன்றி உட்பட்டுப் போவதுகூட இங்கு அவர்களது அடிப்படை உரிமைகள்தான் என்பதையே.


*து.பாஸ்கரன்,*
*பிரதம ஆசிரியர்,*
*அருவி.*

குற்றவாளிகளை இனங்கண்டு தேடிப்பிடிக்க முடியாத அரச பாதுகாப்புப் படைகளின் இயலாமையையும் பலவீனத்தையும் மறைக்க அது மறுதலையாக சகல தமிழ் மக்களை மே கைது செய்து அவர்களுள்ளிருந்து குற்றவாளிகளைக் கண்டுபிடிக்கலாம் என்ற ஓர் இலகுவான முட்டாள்தனமான முடிவை எந்த வித சமுதாயப் பொறுப்புமில்லாமல் மேற்கொண்டுள்ளது. இது கடலை இறைத்து மீனைப் பிடிப்பதாகும்.



www.tamilarangam.net

www.tamilarangam.net




இரண்டுக்கும் என்ன வித்தியாசம்? இதுதான் இன்றைய கேள்வியாக உள்ளது. குறிப்பாக 'பெனட்டன்' ஆடைநிறுவன விளம்பரங்களே இப்படிக் கேட்க வைக்கின்றன. முன்பும் பல விளம்பர உத்திகளைச் செய்து பலத்த சர்ச்சைக்குள்ளான இந்நிறுவனம் அண்மையில் வெளியிட்ட விளம்பரம் மேலும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இம்முறை இத்தாலியப் புகைப்படப் பிடிப்பாளர் ஒலிவேறோ ரொஸ்கானோ (Olivero Toskano) என்பவரால் உருவாக்கப் பட்டுள்ளது. பல புகழ்பெற்ற விளம்பரங்களை உருவாக்கியுள்ள இவர், இம்முறை 'பெனட்டன்' விளம்பரத்தில் ஆண், பெண் அந்தரங்க உறுப்புகளைப் படமாகப் பயன்படுத்தியுள்ளார். ஒரு தொடராக வண்ணங்களாக இந்தப் புகைப்படங்களை அமைத்துள்ளார் ரொஸ்கானோ.


விளம்பரம் போகும் வேகத்தைப் பார்த்தால்.......?

- சாதனி -

## *மின்சாரக் கார்*

*அடுத்த ஆறேழு வருடங்களில் 20,000 மின்சாரக் கார்கள் ஒஸ்லோ வீதிகளில் பாவனையில் இருக்கும் என எதிர்பார்க்கப் படுகிறது. அண்மையில் தபாற் திணைக்களம் மின்சாரக் கார்களை வாங்கிப் பாவனையில் ஈடுபடுத்தியுள்ளது. தற்போது ஒஸ்லோவில் மாத்திரம் 50 மின்சாரக் கார்கள் பாவனையில் உள்ளன.*

*-பாதசாரி -*





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பேர்களில் ஓர் ஆராச்சி விஞ்ஞானி

• நர்த்தனன்



கடின உழைப்பும், ஆர்வமும், கொண்ட குறிக்கோளை அடையும் இலட்சியமும் ஒருவரின் வெற்றிக்குக் காரணமாக அமையும் என்கிறார் கலாநிதி.அ.அ.கிறிஸ்ரி. இவர் தற்போது பேர்கன் பல்கலைக்கழகத்தில் இரசாயனவியல் பகுதியில் ஆராய்ச்சி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

விஞ்ஞானியாகப் பணிபுரிகிறார்.

யாழ்ப்பாணத்தில் பிறந்த இவர், யாழ்.சம்பத்திரிசியார் கல்லூரிப் பழைய மாணவர். தற்போது நாற்பது வயதாகும் கலாநிதி கிறிஸ்ரி பேராதனைப் பல்கலைக்கழகத்தில் இரசாயனவியலில் சிறப்புப் பட்டமும், பேர்கன் பல்கலைக்கழகத்தில் முதுமாணி, கலாநிதிப் பட்டங்களும் பெற்றார். இவரது செந்நிறக் கீழ்க்கதிர் நிறமாலையியலினைப் (Infrared Spectroscopy) பெற்றோலியப் புவி இரசாயனவியலுக்கு (Petroleum Geochemistry) எப்படிப் பயன்படுத்துவது என்பது பற்றிய ஆராய்ச்சிக்காக 1990இல் பேர்கன் பல்கலைக்கழகம் இவருக்குக் கலாநிதிப் பட்டம் வழங்கியது.

செந்நிறக் கீழ்க்கதிர் நிறமாலையியல் என்பது, இரசாயனச் சேர்வைகளில் உள்ள தொழிற்பாட்டுக் கூட்டங்களைக் (Functional groups) கண்டறிவதற்குப் பயன்படும் துறை பற்றிய கலையாகும். செந்நிறக் கீழ்க்கதிர்களை இரசாயனச் சேர்வைகளினூடு செலுத்துகையில், அவற்றிலுள்ள தொழிற்பாட்டுக் கூட்டங்கள் செந்நிறக் கீழ்க்கதிர்களின் பொருத்தமான அலைகளை உறிஞ்சிக் கொள்ளும். இவற்றை வெளிப்படுத்தும் வரைபடம் செந்நிறக் கீழ்க்கதிர் நிறமாலை (Infrared Spectrum) என அழைக்கப்படும்.

இத்துறையில் இவருக்கு ஏற்பட்ட ஆர்வம், ஆராய்ச்சியின் பலனாக முதலில் இவரது ஆராய்ச்சிக் கட்டுரை ஒன்றிற்கு 1987இல் வெனிசில் (venice) நிகழ்ந்த புவிஇரசாயனவியல் பற்றிய சர்வதேச மாநாட்டில் முதற்பரிசினைப் பெற்றுக் கொடுத்தது.

இவரது தொடர்ந்த ஆராய்ச்சியின் பெறுபேறுகள் 23க்கு மேற்பட்ட ஆராய்ச்சிக் கட்டுரைகளின் மூலம் சர்வதேச இரசாயனவியற் சஞ்சிகைகளில் பிரசுரிக்கப் பட்டுள்ளன. மேலும் இவர் தனது ஆராய்ச்சி பற்றி அமெரிக்கா, இத்தாலி, அவுஸ்திரியா, ஜேர்மனி, இங்கிலாந்து, பிரான்ஸ், டென்மார்க் போன்ற நாடுகளில் நிகழ்ந்த 20க்கு மேற்பட்ட சர்வதேச மாநாடுகளில் கலந்துகொண்டு பேசியுள்ளார். இத்துறையில் இவருக்குக் கிடைத்த பிரபல்யம் 1994இல் பேர்கன் பல்கலைக்கழகத்தில் நிகழவுள்ள செந்நிறக் கீழ்க்கதிர் நிறமாலையியல் பற்றிய சர்வதேச ஆராய்ச்சி மாநாட்டிற்குத் தலைமை தாங்கும் சந்தர்ப்பத்தை ஈட்டித் தந்துள்ளது.

இவர் கடந்த காலத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் உதவி விரிவுரையாளராகவும், நைஜீரியாவில் ஆசிரியராகவும், பேர்கன் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராகவும், ஆராய்ச்சியாளராகவும் பணிபுரிந்துள்ளார்.

எமது மாணவர்களும் கல்வியில் சிறந்து விளங்கவேண்டும் என விரும்பும் இவரை, நாமும் 'சுவடுகள்' சார்பில் சகல சிறப்புகளும் பெற்று நீண்டகாலம் வாழவேண்டும் என வாழ்த்துகிறோம்.

**இவருடைய தொடர்ந்த ஆராய்சியின் பெறுபேறுகள் 23க்கும் மேற்பட்ட ஆராய்ச்சிக் கட்டுரைகளின் மூலம் சர்வதேச இரசாயனச் சஞ்சிகைகளில் பிரசுரிக்கப்பட்டுள்ளன.**

www.tamilarangam.net

# சோளங்கதிருக்கும் ஜெருஸலெம் ரோஜா முள்ளுக்குமிடையிலான உரையாடல்

ஸமி அல் - கஸிம்

தமிழில்: மணி

(காட்சி: மத்தியதரைக் கடலின் கிழக்குக் கரையில் ஒரு வயல்)

சோளங்கதிர்: என் காலம்முடியுமுன் என்னைக் கொல்லாதே
ஜெருஸலெம் ரோஜா முள்: சும்மா கொல்வதுதான் என் ஒரே தொழில்
சோ: ஆனால் உன் அழகியமலர்
தேன்.....
ஜெ: என் தடையிலா ஆசை
ஒரு பாதை... அதன் முடிவு உன் மரணம்
சோ: உன் சோகமான மலர்களுடன்
உன் சாபக்கேடான ஆசையின் இருளுடன்
நீ விரும்பியவாறே வாழ்ந்து சா
வாழ்ந்து சா.... ஆனால் என்னை விடு
ஜெ: அது நம் விதி.... நீ வாழ நான் சாகவேண்டும்
அல்லது நான் வாழ நீ சாகவேண்டும்
சோ: வயலில் நம் இருவருக்கும் போதிய இடமுண்டு
ஜெ: அது நம்விதி அயலவனே
அது நம்விதி

(நெருப்பு வருகிறது. அச்சம் துள்ளி எழுகிறது)
சோ, ஜெ: நெருப்பே நம்மைக் கொல்லாதே
நாம் இளையோர், அழகியோர், ஒன்றாக வளர்ந்தோர்
எம்மைக் கொல்லாதே
எம்மைக் கொல்லாதே

(சாம்பல். சோளங்கதிரும் ஜெருசலெம் ரோஜாமுள்ளும் அடிவானில்)

www.tamilarangam.net



# பாலஸ்தீன விடுதலை எழுச்சி இன்ட்டி.ஃ.பாதா: அரசியல் பகுப்பாய்வு

ஹனன் அஸ்ராவி

தமிழில்: யமுனா ராஜேந்திரன்

- முன்தொடர் -

அமெரிக்காவுக்கு இதைப் புரிந்துகொள்வதில பல சமயங்களில் சிக்கலாக இருக்கிறது. நாங்கள் அமெரிக்காவை இந்தப் பிரச்சினையில் ஒரு கட்சியாகத்தான் பார்க்கிறோம், ஏனெனில் அது வரலாறுமுழுக்க, பெரிய முற்றுமுழுதான இஸ்ரேல் ஆதரவாளனாகவே இருந்துவந்துள்ளது. ஆகவே அமெரிக்கா சமாதானத் தரகர் (peace broker) பாத்திரம் வகிக்க வேண்டுமானால் அது தனது நடுநிலையைக் காண்பிக்க வேண்டும், தனது கை சுத்தமானது என நிரூபிக்க வேண்டும். அமெரிக்க பாலஸ்தீன விடுதலை இயக்கப் பேச்சுவார்த்தைக்கு அதிகாரம் அளிக்கவேண்டும்.

எங்கள் தலைமையைப் பிறர் பிரதிநிதித்துவப் படுத்த விடமாட்டோம். இஸ்ரேலை அங்கீகரிப்பதற்கும், இறையாண்மைக்கும் உள்ள வித்யாசத்தை நாங்கள் வரையறுக்க வேண்டும். முழு உலகமும் இஸ்ரேலை அங்கீகரிக்கலாம், ஆனால் இஸ்ரேலுக்கு இறையாண்மையை வழங்கும் ஒரே மக்களினம் பாலஸ்தீனர்கள்தான். ஏனெனில் நாங்கள்தான் ஆக்கிரமிப்புக்கு உள்ளான துயரவான்கள். எங்கள் நிலத்தில்தான் இஸ்ரேல் உருவாக்கப்பட்டது. ஆகவே எப்போது எவ்வாறு இஸ்ரேலுக்கு இறையாண்மை வழங்கப்பட வேண்டும் என்பதை நாங்கள் தீர்மானிக்க வேண்டும். பாலஸ்தீனர்கள் அல்லாது எவரும் இஸ்ரேலுக்கு இறையாண்மையை வழங்கமுடியாது. இது தெளிவாக்கப்பட வேண்டும். இஸ்ரேலியர்களுக்கு இது தெளிவாகிக்கொண்டு வருகிறது என்று



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




நான் நினைக்கிறேன்.

தடமாற்றங்கள், பக்கப் பேச்சுகள், நிராகரிக்கும் தந்திரோபாயங்கள், திசைமாற்றும் தந்திரங்கள் மூலம் மையப்பிரச்சினைகளில் இருந்து தடம்மாறி எமது பேச்சுவார்த்தைகள் தொடர்ந்து தடம் மாறச் செய்யப் படுகின்றன. ஸ்தூலமான முன்னேற்றத்தைக் கொண்டுவரும் கொள்கைகளை விட்டுவிட்டு, வழி தொடர்பான பிரச்சினைகள் சில்லறை விஷயங்களைப் பெரிதாக்கிக் கொண்டிருக்கிறார்கள். இலக்கு இல்லாது தவறான தீர்வுக்கு இட்டுச் செல்லும் செயற்பாடு வேறு விதத்தில் முடுக்கி விடப்படுகிறது. பொதுப் பிரச்சனைகளில் இருந்து எங்கள் கவனத்தைத் திருப்ப அர்த்தமற்ற விஷயங்கள் பேசப்படுகிறது. பாலஸ்தீன விடுதலை அமைப்பு உயர்ந்தபட்ச அரசியல்கொண்ட விமர்சன ரீதியான அமைப்பு என்பதை நாங்கள் உணர்ந்திருக்கிறோம். ஆனால், நிராகரிப்பு மற்றும் முட்டுக்கட்டையின் ஊற்றுக் கண்கள் இஸ்ரேலும் அமெரிக்காவும்தானே ஒழிய பாலஸ்தீன விடுதலை இயக்கம் அல்ல.

மூன்றாவதும் இறுதியுமான ஆபத்து சமாதானச் செயற்பாட்டின் நோக்கம் மற்றும் உள்ளடக்கத்தைச் சிதைப்பது. மிகக்கறாரான வடிவரீதியிலாக ஆதிக்கத்துக்கு நாங்கள் உள்ளாகிறோம். தொடர்ந்த சமரசங்களுக்குத் தள்ளப் படுகிறோம். 1988 நவம்பர் பாலஸ்தீன சமாதானத் திட்டப் பரிந்துரையை முன்வைத்தோம். அதற்குப் பின்பு மிகக் காலந்தாழ்ந்து சம்பந்தமற்ற வகையில் சமீர் திட்டத்தை எமக்குக் கொடுத்தார். சமீர்தான் தேர்தல் என்கிற வார்த்தையைக் கண்டுபிடித்தார் என்பது மாதிரி ஒரு பிரமையை உலகுக்கு ஏற்படுத்தியிருக்கிறார். ஜனநாயகம் இஸ்ரேலுக்குள் ஒரு மறுமலர்ச்சி யுகத்தை உருவாக்குவது மாதிரியான சித்திரத்தை முன்வைத்தார்கள். அது சொன்னது, ஆக்கிரமிப்பின் கீழ் பாலஸ்தீனர்கள் தங்கள் பிரதிநிதிகளைத் சுதந்திரமான முறையில் தேர்வு செய்யப் போகிறார்கள், என்று. பாலஸ்தீனத்தின் முழு மக்களும் சுதந்திரத்தை தங்கள் ஜனநாயக உரிமைகளை அனுபவிக்காத ஒரு சூழலில் இத்தேர்தல் நிகழும் என்றது.


www.tamilarangam.net

பிறகு இரு நிலைப்பாடுகட்கும் இடையில் ஒரு சமரசத் திட்டத்தைப் பெற்றோம். முதலில் எம் வரலாற்றுக்கு மிகப்பெரிய பின்தள்ளல், எமக்கு மிகச்சிறிய எிதர்வினை. பிற்பாடு எகிப்தியர்களின் பத்து அம்சத் திட்டம், பாலஸ்தீன மக்களின் சுயநிர்ணய உரிமையை விடுத்து, பாலஸ்தீன விடுதலை இயக்கத்தின் பிரதிநிதித்துவத்தை விடுத்து, முன்வைத்த திட்டம். பிறகு அந்தச் சமரசத்திற்கொரு சமரசமாக இஸ்ரேலின் நிலைப்பாடு, தொடர்ந்து பேக்கரின் ஐந்து அம்சத் திட்டம். பேக்கரின் ஐந்து அம்சத் திட்டத்திற்குப் பிறகு இஸ்ரேலின் ஆறு அம்சத் திட்டம் மற்றும் நிபந்தனைகள். ஆக இருபத்தியொராம் நூற்றாண்டில் ஒருவகையான பேச்சுவார்த்தையை நாங்கள் துவங்கக் கூடும்.

இப்போது நாங்கள் எங்கே இருக்கிறோம்? அரசியற் தீர்வுத் திட்ட வரையறை இல்லாமல், உள்ளடக்கப் பின்னணி இல்லாமல், பேச்சுவார்த்தை நுட்பங்கள், தனிமை, எதிர்மறைத் தேர்வு, முன்நிபந்தனைகள் சட்டதிட்டங்கள் போன்றவற்றின் இடையில் இருக்கிறோம்.

எவ்வாறாயினும் பாலஸ்தீனத் தரப்பில் பார்த்தீர்களானால், விட்டுக்கொடுக்கும் தன்மை, அறிவுமுதிர்ச்சி, தீர்வை நோக்கி இயங்கும் போக்கு ஆகியவற்றைக் காணலாம்.

கோட்பாட்டளவில் பாலஸ்தீனர்கள் தேர்தல் பரிந்துரையை ஏற்றுக் கொள்கிறார்கள். தொடர்புபடுத்திய வரையறைக்குள், பேச்சுவார்த்தையெனும் தெளிவான புறநிலை யதார்த்தத்திற்குள் அதை ஏற்கிறார்கள். பகிரங்கமான அடிப்படைத் திட்டத்தின்மீது, ரகசியத் திட்டத்தின் மீதல்ல, பாலஸ்தீன விடுதலை இயக்கப் பிரதிநிதித்துவத்தின் மூலம் பேச்சுவார்த்தை. இது சர்வதேசிய கருத்தரங்கின் நடுப்பகுதியாக நிகழவேண்டும். ஏனெனில் நாங்கள் மிகச்சரியாக அறிவோம், இது உலக மற்றும் அராபியப் பரிமாணம் கொண்டது. உண்மையான





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அமைதியென்பது சர்வதேச அமைதி மற்றும் இறையாண்மையில் இருந்துதான் வரும்.

இஸ்ரேல் மூலம் விளைந்த ஒரு நெருக்கடியில் இப்போதும் நாம் நிற்கிறோம். மூன்று கட்சிகளுக்கு இடையில் நிகழும் பேச்சுகள் தொடர்பான பூர்வாங்கப் பிரச்சினைமீது கருத்துருவாக்க வேண்டும். மூவர் யாரெனில் ஒன்று இஸ்ரேல், இரண்டாவட, அமெரிக்கா, மூன்றாவதாக எகிப்து. பாலஸ்தீனியப் பிரதிநிதித்துவம் உருவாக்குவது தொடர்பாக எகிப்தியர்கள் பேசுவார்கள். ஆக, எகிப்தியர்கள் பாலஸ்தீனப் பிரதிநிதித்துவத்தை இஸ்ரேலோடு பேசுவதற்காக உருவாக்குவார்கள். எதற்காக? அந்தப் பேச்சுவார்த்தைகள் தேர்தல் உருவாக்கங்களுக்கு இட்டுச் செல்லும். அது எதற்காக? சுயாதிபத்தியத்திற்காக.

இன்ட்டி∴பாதாவும், பாலஸ்தீன அரசியற் திட்டமும் ஒன்றை நிரூபித்திருக்கின்றன. தன்னாட்சி உரிமை (autonomy) என்ற சொல் அதன் கேம்ப் டேவிட் உடன்பாடு மூலமோ அல்லது வேறெந்த உடன்பாடு மூலமோ முன்வைக்கப் பட்டாலும் அது எம் விருப்பம் அல்ல. விருப்பிற்குகந்தது அல்ல.

இப்போது மறுபடியும் நாம் கவனமாக இருத்தல் அவசியம். முழுப்பிரச்சினையும் கடத்திப் போகப்படவில்லை. முடிவுக் கட்டத்திற்குத் தடம் மாறிப் போகவில்லை, முறிவுநிலைக்குப் போய்விடவில்லை.

பரஸ்பரம் மற்றும் இணையான அடிப்படையிலான சமநிலையில் பேச்சுவார்த்தைகள் இடம்பெற வேண்டும். உண்மையான பிரதிநிதிகளுக்கு இடையில் பேச்சுவார்த்தை நிகழவேண்டும்.

உள்ளடக்கத்தின் அடிப்படையில், தீர்வை

எட்டும் எமது நோக்கத்தில், எந்தத் தரப்பினதும் இறையாண்மையும் அதிகார தளமும் நிராகரிக்கப் படாமல் பேச்சுவார்த்தை நிகழவேண்டும். பேச்சுவார்த்தைகளுக்கு நோக்கம் வேண்டும். காலம் கடத்தக் கடத்துவதற்கு அல்ல, நிராகரிப்பதற்கு அல்ல, மாறாக சமாதானத்தைச் சாதிப்பதில் நிஜமான அக்கறையோடு பேச்சுவார்த்தை நடத்தப்பட வேண்டும்.

## நோர்வே - பாலஸ்தீனம் - இஸ்ரேல்

*மிக நீண்டகாலமாக இழுபறியில் இருந்துவந்த பாலஸ்தீனப் பிரச்சனைக்குச் சில தீர்வுகள் ஏற்பட்டுள்ளன. பாலஸ்தீனர்கள் செறிவாக வாழும் காஸா, மற்றும் மேற்குக்கரைப் பகுதி நகரம் ஒன்று என்பவற்றுக்கு மட்டுப்படுத்தப்பட்ட சுயாட்சியை வழங்குவதாக இஸ்ரேல் ஒப்புக்கொண்டதே இதற்கு முக்கிய காரணம்.*

*இந்தத் திட்டத்தை பாலஸ்தீன விடுதலை இயக்கம் ஏற்றுக்கொண்ட போதிலும், பல பாலஸ்தீனர்களும் அவர்களது அமைப்புகளும் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளன. இந்தத் தீர்வில் நோர்வே முக்கிய பங்கு வகித்துள்ளது. ஆரம்பத்தில் இருந்தே இருபகுதியினரையும் இணைத்துப் பேச்சுகளில் ஈடுபடுத்தியதில் நோர்வே வெளிநாட்டமைச்சர் முக்கிய பங்குவகித்துள்ளார். இதற்காக அவர் பலதடவை இஸ்ரேலுக்கு இரகசிய விஜயங்களை மேற்கொண்டும் உள்ளார். இரு பகுதியினருக்கும் இடையில் மிக அண்மையிலும் ஒஸ்லோவில் இரகசியப் பேச்சுகள் நிகழ்ந்துள்ளன.*

*இத்திட்டத்தை எதிர்ப்பவர்கள், பாலஸ்தீனர்களின் 2வீதத்தினருக்கும் குறைவானோரே இதனால் பயனடைவர் என்பதை முக்கிய குறையாகக் கூறுகின்றனர்.*



- சிவன் -

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உண்மையான பிரச்சனையை மறைக்கும் இஸ்ரேலியப் போக்கை நாங்கள் தொடர்ந்து எதிர்ப்போம். நாங்கள் பாலஸ்தீனர்கள், தொடர்ந்து எமது விவாதங்களின் குவிமையத்தை அதை நோக்கித் திருப்புவோம்.


அந்தப் பிரச்சினை எமது பாலஸ்தீன மக்களின் நிஜமான சுயநிர்ணய உரிமைதான்.

## ஹனன் அஸ்ராவி பற்றி மொழிபெயர்ப்பாளர் குறிப்பு

ஹனன் அஸ்ராவி பாலஸ்தீனியக் கிறித்தவர். பேராசிரியர். சிறுகதை ஆசிரியர், ஆங்கிலத்தில் கவிதைகள் எழுதுபவர்.

பாலஸ்தீன விடுதலை இயக்கத்தின் அதிகாரபூர்வப் பேச்சாளர். அவ்வமைப்பின் லண்டன் அலுவலகத்தில் சிறிதுகாலம் பணியாற்றியவர். வளைகுடாப் போரில், அமெரிக்கத் தலையீட்டைக் கண்டித்து தொலைக்காட்சிகளிலும், கல்லூரிகளிலும் உரை நிகழ்த்தினார்.

இக்கட்டுரை, நம்பிக்கையும் இன்ட்டிஃபாதாவும் என்ற தலைப்பில் வெளிவந்த தொகுப்பு நூலில் வந்த அஸ்ராவியின் கட்டுரையின் தமிழாக்கம் (நூலின் வெளியீடு: Orbis books, ISBN: 0-88344-808-4)




# நின்று தூங்கும் நான்

## சோலைக்கிளி

நான் நின்று தூங்குகிறேன்.

என் கட்டிலில் கள்ளி விதைகள் விழுந்து
தினமும் முளைப்பதனால்
நான் நின்றுகொண்டே குப்புறப் படுத்து
குறட்டையும் விடுகிறேன்.

இப்போதெல்லாம் நான்
அவளைக் கனவில் காண்பது
நின்று தூங்கியபடியே.
அன்றும் அவள் என் நின்று தூங்கலின்
கனவில் வந்தாள்.
கொண்டையில் என் முகத்தைப் போன்ற பூ
சூடியிருந்தாள்.


அன்று நான் நின்று தூங்கியபோது
வீரிட்டுக் கத்தினேன்.
இருட்டுக்குள் ஒரு பூதம் வந்து
ஏறி என் நெஞ்சில்
இருந்ததைப் போன்று இருந்தது.
என்னை அறியாமலே சிறுநீர் விட்டேன்,
நின்று தூங்கியபடியே.

நின்று தூங்குவதும் அவ்வளவு சிரமமல்ல.
எனக்குள் இருக்கின்ற புற்கள் எப்போதும்
மலர்வதைப் போலவே,
மலருகின்றன.
ஒரு குலைப் பூவை
மூன்றுபேர் முக்கி
தூக்கும் அளவுக்கு மிகவும் பாரமாய்.

16.06.93

www.tamilarangam.net

சஞ்சயன்



# இன்னோர் தேசம்; இன்னோர் கனவு

நாட்டைவிட்டுப் புலம்பெயர்ந்த எம்மில் பலர் கனவு மிதப்பில் வாழ்கின்றனர். தங்களது எதிர்காலம் ஐரோப்பாவில்தான் என்பது பலரின் சிந்தனை. தாய்நாட்டைப் பற்றிச் சிந்திப்பதற்கே பலருக்கு 'நேரமில்லை'. தப்பித் தவறித் தாய்நாட்டைப் பற்றிக் கதைப்போரையும் 'ஒருமாதிரி'ப் பார்க்கும் நிலைமை தோன்றி வருகிறது. ஆனால் ஐரோப்பாவின் வரலாற்றை ஓரளவு தெரிந்து வைத்துள்ளவர்களுக்கு உண்மைநிலை விளங்கும். எதிர்கால ஐரோப்பா எமக்குப் பல பாடங்களைக் கற்றுத்தரும் என்பது கசப்பான உண்மை.

நோர்வேயைப் பொறுத்தவரை இனவாதத் தாக்குதல்கள் முன்பைவிடப் பெருகி வருகின்றன. அண்மையில் சம்ஸயா (Ramzaya) என்ற குர்திஷ் சிறுமி, இனவாதிகளால் கடுமையாகத் தாக்கப்பட்டு மயக்கமடைந்து வீதியில் அனாதையாகக் கிடந்தாள். தனது சிறுவயதுத் தங்கையைப் பாடசாலையில் இருந்து அழைத்துவரச் செல்கையிலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. மூன்று நோர்வேஜிய இளைஞர்கள் 'கறுத்த பன்றி, 'கொழுத்த பன்றி' 'எமது நாட்டைவிட்டு வெளியேறு.' என ஆவேசமாகக் கத்தியபடி காலால் உதைத்தும் கைகளால் கடுமையாகத் தாக்கியும், றம்ஸயா மயங்கி விழும்வரை வெறியாட்டம் நிகழ்த்தியுள்ளனர். வீதியோரத்தில் கிடந்த இச்சிறுமியை இரு நோர்வேஜியப் பெண்கள் சிறுமியின் வீட்டுக்கு அழைத்துச் சென்றுள்ளனர். அங்கிருந்து பொலிசாருக்கும், பாடசாலை நிர்வாகத்திற்கும் தொலைபேசி மூலம் செய்தி தெரிவிக்கப்பட்ட போதும் ஒருவருமே வரவில்லை. பொலிசாரதும், பாடசாலை நிர்வாகத்தினரதும் இந்த அசட்டைத்தன்மை பொதுமக்களது கண்டனத்துக்கு உள்ளாகியுள்ளது.

றம்ஸயா என்ற இச்சிறுமி பாடசாலையிலும் வெளியிடங்களிலும் இனவாதக் கேலிக்கு உள்ளாக்கப் பட்டுள்ளாள். இது தொடர்பாக பாடசாலை ஆசிரியர்களுடன் மேற்கொண்ட தொடர்பு எதுவித பலனையும் அளிக்கவில்லை. ஆறு வருடங்களுக்கு மேலாக இங்கு வாழும் றம்ஸியாவின் குடும்பத்தினர், எப்போதும் தாம் பாதுகாப்பற்ற சூழலையே இங்கு உணர்வதாகக் கூறியுள்ளனர். "எமது தாயகத்திற்குத் திரும்பிப் போகும் சந்தர்ப்பம் ஒன்று கிட்டினால் எமது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தாய்நாட்டிற்குத் திரும்பிப் போவதையே நாம் விரும்புகிறோம். இயற்கையோடு ஒன்றிய அந்தக் கிராமிய வாழ்வு ரம்மியமானது. அதற்கீடாக எதுவும் இல்லை. தாய்நாட்டில் எமது சமுதாயத்துடன் இணைந்து வாழ்வதற்கு ஒத்ததாக வேறு எதையும் கருத இயலாது" என அவர்கள் கூறியுள்ளனர்.

அண்மையில் மிகுந்த பரபரப்பை ஏற்படுத்திய இரண்டு (கொலைச்) செய்திகள் பின்வருவன: 1. 'யூகோஸ்லாவிய' நாட்டவர் ஒருவரால் அரச அதிகாரியான ஒரு நோர்வேஜியப் பெண் குத்திக் கொல்லப் பட்டமை. 2. நோர்வேஜிய இளம்பெண் ஒருவர் ஈரானைச் சேர்ந்த ஒருவரால் குத்திக் கொலை செய்யப் பட்டமை.

இவ்விரு செய்திகளும் வெளியானதும் வழமைபோல பொலிசாரும், ஒருசில பத்திரிகைகளும் வெளிநாட்டவர்களது வன்முறைகள் அதிகரித்து விட்டதாகவும், பெரும்பாலான குற்றச் செயல்களுக்குப் பின்னால் வெளிநாட்டினரே உள்ளனர் எனக் கூறியுள்ளன. புள்ளிவிபரத் திணைக்களத்தின் புள்ளிவிவரங்களைத் தங்களுக்கேற்ற விதத்தில் இவர்கள் திரித்துள்ளனர் என்றே கூறத் தோன்றுகிறது.

சமூகத்தில் வன்முறைகள் எந்த வடிவில் வந்தாலும் அவை எதிர்க்கப்பட வேண்டியவையே. இதில் மாற்றுக் கருத்துக்கே இடமிருக்க முடியாது. ஆனால் ஒரு வெளிநாட்டவன், தான் புலம்பெயர்ந்த சமூகத்தில் எதிர்நோக்கும் 'சமூக', 'பொருளாதார', 'கலாசார'ப் பிரச்சனைகள் உளவியல் ரீதியாக அவனைக் கடுமையாகப் பாதிக்கின்றன. தாய்நாட்டின் கோரமான யுத்த சூழலில் இருந்து வந்தவர்களுக்கு இத்தாக்கம் மிக அதிகம். தாய்நாட்டை விட்டுப் புலம்பெயர்ந்த மக்களில் பெரும்பாலானோர் சாதாரண மனோநிலையில் இல்லை என்பது பல உளவியல் மருத்துவர்களால் கண்டுபிடிக்கப் பட்டுள்ளது. இத்தகைய சூழலில் மனோநிலை பாதிக்கப்பட்ட மக்களுக்கு மட்டுமன்றிப் பொதுவில் சகலருக்கும் போதுமான புனருத்தாரண நடவடிக்கைகள் அவசியம். இத்தகைய புனருத்தாரணங்கள் வெறுமனே பொருளாதாரத்தை மட்டும் மையப்படுத்தி அமைய முடியாது. புலம்பெயர் நாட்டின் சமூகத்தில் அவனும் ஒரு சாதாரண உணர்வுகள் உடைய மனிதனாக வாழக்கூடிய நிலையை ஏற்படுத்தல் வேண்டும். இதன்மூலமே வெளிநாட்டில் புலம்பெயர்ந்து வாழும் மக்களுக்கும், புலம்பெயர்ந்த நாட்டவருக்கும் இடையே புரிந்துணர்வை ஏற்படுத்த முடியும்; பிரச்சனைகளுக்கும் விரைவில் தீர்வு காணலாம். இதற்கான முன்முயற்சிகளை புலம்பெயர்ந்தோரை ஏற்ற நாட்டவரே செய்தல் வேண்டும் எனினும் அதற்கான முயற்சிகளில் ஈடுபட வேண்டியது புலம்பெயர்ந்தவர்களது கடமை மட்டுமல்ல வரலாற்றுப் பொறுப்பும் என்பதை மறக்கக் கூடாது.●

---

நோர்வேயில் உற்பத்தியாகும் வீட்டுக் கழிவுகளின் அளவு பின்வருமாறு கணக்கிடப் படுகிறது.

வருடத்தில் நாடு முழுவதுமாக எட்டுலட்சம் தொன் வீட்டுக் கழிவுகள் வீசப் படுகின்றன. இது ஒருவருக்கு 200கிலோ என்ற வீதத்தில் உள்ளது. இந்த இருநூறு கிலோவில் 60கிலோ உணவுக் கழிவு, 20கிலோ உலோகங்கள், 12கிலோ கண்ணாடி, 17கிலோ பிளாஸ்ரிக் மற்றும் ஆடைகள், 70கிலோ கடுதாசி என்பவற்றுடன் இரண்டரைக் கிலோ நச்சுக் கழிவுகளும் அடங்கும்.


• அமா

---



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# பத்து

'பத்துவருடக் கண்ணீர்' நிகழ்ச்சியில் ஆதரவுக் குழுவின் முன்னோட்டக் குழுவால், நோர்வே மக்களுக்கும் நோர்வே அரசியல்வாதிகளுக்கும் விடுக்கப்பட்ட வேண்டுகோளின் தமிழாக்கம்.

இயற்கை எழிலுக்கும் அமைதிக்கும் பெயர்பெற்ற இலங்கை, கடந்த 10வருடங்களாக உள்நாட்டு யுத்தத்தாலும் மனிதவுரிமை மீறல்களாலும் பயங்கரமும் பலாத்காரமும் நிறைந்த தீவாக மாறியுள்ளது. தமிழ்- முஸ்லீம் மக்களின் பாரம்பரீய பிரதேசங்களான வடக்குக் கிழக்கில், விடுதலைப்புலிகளுக்கும் இலங்கையரசுக்கும் இடையில் மூண்டுள்ள போரால் மக்கள் அளப்பரிய துன்பங்களுக்கு உள்ளாவதுடன் பாரிய பொருட்சேதங்களும் ஏற்பட்டுவருகின்றன. யாழ்.பல்கலைக் கழகத்தின் பொருளியலாளர் ஒருவரது மதிப்பீட்டின்படி வட-கிழக்கின் சனத்தொகை 1987இல் 1.7மில்லியன்களாக இருந்து 1992இல் 900,000ஆக குறைந்துள்ளது. அதாவது இந்த 5வருடகால இடைவெளியில் 47%ஆல் வீழ்ச்சிபெற்றுள்ளது. தற்போது வட-கிழக்கில் இல்லாத 800,000 பேரில் 50,000பேர் இறந்துள்ளனர் அல்லது காணாமற் போயுள்ளனர். 350,000பேர் வெளிநாடுகளில் தஞ்சங் கோரியுள்ளனர். ஏனையோர் தென்னிலங்கையின் பல்வேறு

www.tamilarangam.net

# கண்ணீர்



முஸ்லீம்மக்களது இடப்பெயர்வு பெருமளவில் விடுதலைப் புலிகளது நிர்ப்பந்தத்தால் ஏற்படுத்தப்பட்டது. வடக்கு- கிழக்கு மக்களின் அத்தியாவசியச் செயற்பாடுகளாகிய விவசாயம், கடற்றொழில் என்பன தொடரும் யுத்தத்தால் ஸ்தம்பித நிலையிலுள்ளன. இத்துன்பங்களுடன் இலங்கையரசு வேறு தமிழர் வாழ் பிரதேசங்கள்மீது பொருளாதாரத் தடைகளை ஏற்படுத்தியுள்ளது. இப் பொருளாதாரத் தடைகளால் தமிழ்மக்கள் தமது அத்தியாவசியத் தேவைகளைப் பெறமுடியாத நிலையிலுள்ளனர். இலங்கையரசும் விடுதலைப்புலிகளும், இலங்கையின் இனப்பிரச்சனைக்கு அரசியல் தீர்வைத்தவிர வேறு வழியில்லை என்று கூறிக்கொள்ளினும் யுத்தம் முடிவுக்கு வரும் அறிகுறி ஏதும் தென்படுவதாகத் தெரியவில்லை. 1987இல் கொண்டுவரப்பட்ட இலங்கை - இந்திய ஒப்பந்தத்தால் இலங்கையின் தேசிய இனப்பிரச்சனை ஒரு முடிவுக்கு கொண்டுவரப்படும் என எதிர்பார்க்கப்பட்ட போதும் அதனால் பெருமளவு இழப்புகள் ஏற்பட்டதேயொழிய அமைதி கிட்டவில்லை. இதன் பின்னர் இலங்கையரசு அரைகுறைமனதுடன் பாராளுமன்றத் தெரிவுக்குழுவை நியமித்தது. இந்தத் தெரிவுக்குழுவால்கூட தமிழ் - முஸ்லீம் மக்களது நம்பிக்கையைப் பெறமுடியவில்லை. இவையெல்லாவற்றுக்கும் மாறாக ஆளும்கட்சியான ஐக்கியதேசியக்கட்சியும், பிரதம எதிர்க்கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் வடக்கு- கிழக்கு இணைப்பை எதிர்ப்பதில் மட்டும் அக்கறை காட்டினவேயன்றி அமைதிக்கு வழிகோலும் நடவடிக்கைகளில் தீவிரம் காட்டவில்லை. இந்த வடக்கு - கிழக்கு இணைப்பு எதிர்ப்பு வாதத்தின் மூலம் தமிழ்மக்களது அரசியல் பலத்தை இழக்கச்செய்வதே இவர்களது முக்கிய நோக்கமாக இருந்தது எனலாம். இத்தகைய போக்குகளால் 1956 முதல் இலங்கை எதிர்நோக்கிய தேசிய இனப்பிரச்சனைக்கு எந்தவகையிலும் தீர்வுகாண இயலாது.

மனித அழிவு, சமூகவாழ்வின் சீரழிவு, ஜனநாயக உரிமைகளது இழப்பு, பொருளாதார இழப்பு, வடக்கு - கிழக்கு அபிவிருத்தியின் ஸ்தம்பிதம் மாத்திரமன்றி, இலங்கையரசும் பாராமுகப் போக்கைக் கையாள்கின்றது. இந்நிலை நம்பிக்கையீனத்தை வளர்க்கலாம். இருப்பினும் நாட்டிலுள்ள மக்கள்மட்ட இயக்கங்களது நடவடிக்கைகளால் எதிர்காலத்தில் அமைதியும் சுபீட்சமும் கிடைக்கக்கூடிய அறிகுறிகள் தென்படுகின்றன.

www.tamilarangam.net

பத்து வருடங்களாக இடம்பெற்றுவரும் உள்நாட்டு யுத்தம் தமிழ், முஸ்லீம், சிங்கள மக்களது சிந்தனைகளில் பாரிய தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளன. அவர்கள் அமைதிக்கான தமது விருப்பை தம்மாலியன்ற வழிகளில் வெளிப்படுத்தி வருகின்றனர். இன்னும் கூறப்போனால் வடக்கு - கிழக்கில் இருந்து ஆயிரக்கணக்கில் குடிபெயர்ந்து இலங்கையின் தென்பகுதியில் தஞ்சங்கோரியிருப்பது இன்றைய மாறியநிலையின் வெளிப்பாடாகும். இலங்கையில் இராணுவமும் பொலீசாரும் தமிழ்மக்கள்மீது வெறுப்புடையவர்களாக இருக்கும் போதும், சாதாரண சிங்களமக்கள் இத்தகைய போக்கைக் கொண்டிருக்கவில்லை. வடக்கு - கிழக்கு தமிழர்களது முக்கிய அவா, தமது கௌரவத்தை அங்கீகரிக்கும் சமாதானமாகும். யுத்தத்தை முற்றாக ஒழித்து ஜனநாயகத்துக்கு வழிவகுக்கும் தீர்வுக்கான பாதையை முன்னெடுக்கும் இடைக்காலத் தீர்வே இன்றைய தேவையாகும். இருப்பினும் இலங்கையரசும் விடுதலைப்புலிகளும் பேச்சுவார்த்தைக்கென ஏனைய தமிழ், சிங்கள, முஸ்லீம் கட்சிகளுடன் ஒரு சமாதானப் போக்கைக் கடைப்பிடிக்காதவரை போரை நிறுத்துவதற்கான வேறு சாத்தியக்கூறுகளில்லை. சமாதானத்துக்கு வழிவகுக்கக்கூடிய நடுநிலமையாளர் ஒருவர், இன்றைய இலங்கையின் சமாதானத்துக்குத் தேவையாகவுள்ளது. இத்தகைய பணியைச் செய்யக்கூடிய ஐரோப்பிய நாடுகளில் நோர்வேயும் ஒன்று என நாம் கருதுகின்றோம். ஒரு இடைக்காலத் தீர்வே நமது உடனடி நோக்கமாகும். இராணுவ நிர்மயமாக்கலுடன், ஜனநாயகமயமாக்கலுக்கு அரசியல் சூழலை ஏற்படுத்தவல்ல இடைக்காலத் தீர்வே எமது நோக்கமாகும்.

<u>முன்நிபந்தனைகள்:</u>

1. காலவரையறையற்ற யுத்தநிறுத்தம்.
2. வடக்கிலுள்ள பொருளாதாரத் தடையை நீக்கல்.
3. இடம்பெயர்ந்த மக்கள் தமது சொந்த இடங்களுக்குச் சென்று மீளவும் வாழ வழியமைத்தல்.
4. திட்டமிட்ட குடியேற்றங்களை உடனடியாக நிறுத்துதல்.

<u>இடைக்காலத் திட்டத்தின் முக்கிய அம்சங்கள்:-</u>

1. பிராந்தியஅரசு அல்லது மாகாணசபைகளுக்கு ஊடாக தமிழ்- முஸ்லீம் மக்களது அபிலாசைகளைப் பூர்த்தி செய்யக்கூடியவகையில் அதிகாரப் பரவலாக்கம்.

www.tamilarangam.net

2. இந்த பிராந்தியஅரசோ அல்லது மாகாணசபைகளோ வடக்கு - கிழக்கின் அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்ளவும் அங்குவாழும் சமுகங்களது கலை, கலாச்சாரங்களைப் பேணவும் சுயாதிபத்தியத்தைக் கொண்டிருக்க வேண்டும். வடக்கு - கிழக்கில் வாழும் சிங்கள சிறுபான்மை இனத்தவர்கள், தெற்கில் வாழும் தமிழ் - முஸ்லீம் மக்கள் கொண்டிருக்கும் உரிமைகளைக் கொண்டிருப்பதற்கான உத்தரவாதம் அளிக்கப்பட வேண்டும்.

2. இராணுவ நிர்மயமாக்கல், அதிகாரப் பரவலாக்கம், பாராளுமன்ற ஜனநாயகத்தின் மீளமைப்பு என்பவற்றுக்கு சகல தரப்பினரும் தமது உறுதியான ஆதரவை வழங்க முன்வரவேண்டும்.

3. வடக்கு- கிழக்கின் பொருளாதார, சூழலை புனருத்தாரணம் செய்யும் வகையில் அப்பிரதேசத்தின் பொருளாதார, சூழல் பாதிப்புகள்பற்றிய மதிப்பீடு செய்யப்படல்.

4. யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களது பொருளாதார, வாழ்வுக்கான புனர்வாழ்வுத் திட்டங்கள் ஏற்படுத்தப்படல்.

5. வடக்கு - கிழக்கின் சமுகங்களது பொருளாதார புனர்நிர்மாணத்துக்கு வழிவகுக்கும் வகையில் தமிழ் இளைஞர்களை மீளிணைக்கும் திட்டங்கள் மேற்கொள்ளப்படல்.

இலங்கையில் அமைதிக்கும் நீதிக்கும் நடுநிலமை வகித்தல் என்பது சவாலான ஒரு விடயந்தான். மேற்குறிப்பிட்ட நிபந்தனைகளைத் திருப்தி செய்வதற்கு திறமையும் காலமும் தேவை. அத்துடன் நடுநிலமை வகிப்பும் கண்காணிப்பும் அவசியம். நலநிலமையாளர் இலங்கையரசினதும் விடுதலைப்புலிகளதும் ஏனைய அமைப்புகளதும் நம்பிக்கையைப் பெறக்கூடிய தராதரத்தைக் கொண்டிருத்தல் வேண்டும். எமது கருத்துப்படி நோர்வே இந்த தகைமையைக் கொண்டுள்ளது. நோர்வேஜிய அரசியல்வாதிகளைக் கொண்ட ஒரு குழுவால் இலங்கையின் இனப்பிரச்சனைக்கு ஒரு சமாதான முயற்சியை முன்னெடுக்க முடியுமானால் அதுவே ஒரு வெற்றியாகும். ஆகவே நோர்வே அரசியல்வாதிகளும் அமைதி நடவடிக்கையாளர்களும் இலங்கை இனப்பிரச்சனையில் அக்கறைகாட்ட வேண்டும் எனக் கோருகின்றோம். அத்துடன் இலங்கை இனப்பிரச்சனையில் அக்கறை கொண்டுள்ள நோர்வே மக்களும் சமாதான விரும்பிகளும் இந்த உதவிக்குழுவுடன் இணைந்து தம்மாலான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் வேண்டிக் கொள்கின்றோம்.

ஒகஸ்ற் 14, 1993,
ஒஸ்லோ, நோர்வே.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

## தமிழகத் தபால்



# கருணாநிதியின் உடைப்பு வேலை

திமுகவிற்கு இது சோதனைக் காலம்! கருணாநிதியின் வதவதா செதசெதாப் பேச்சுகளைத் தொண்டர்கள் தற்போது மதிப்பதில்லை. புதிய தலைமுறையினர் கருணாநிதியின் நழுவல்/ மழுப்பல்/ பூசிமெழுகல் போன்ற சாமர்த்தியமான பேச்சுகளை விமர்சனம் செய்யத் தொடங்கியுள்ளனர்; தலைமையையே இன்று கேள்வி கேட்கின்றனர். இதனால் கருணாநிதி கொஞ்சம் கலகலத்துப் போயுள்ளார்.

கட்சியின் துடிப்பான செயற்பாட்டை விரும்பும் புதிய தலைமுறையினர் வை.கோபால்சாமி எம.பி.யின் பின்னால் அணிதிரண்டு வருகிறார்கள். இவ்வாறு அணிதிரள்வது தனக்கும், தனது குடும்ப ஆதிக்கத்திற்கும் எதிரானது என்பதைத் தெரியாதவரா கருணாநிதி? பல

www.tamilarangam.net

## ஒரு இலக்கிய இதயத்தின் மரணம்

இந்திய இலக்கியம் என்பது சமஸ்கிருத இலக்கியம்தான் என்பது போன்ற தோற்றம், வெளிநாடுகளில் இந்த நூற்றாண்டின் மத்தியகாலம்வரையிலும் இருந்தது என்று கூறலாம். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழ் இலக்கியங்களை மேற்குலக நாடுகள் அவ்வளவாக அறிந்துகொள்ளாமல் இருந்தன. இந்த நிலையை மாற்றி தமிழ் இலக்கியங்களை சர்வதேச அளவில் கொண்டுசென்றவர் ஏ.கே.ராமானுஜன். இவர் சங்க இலக்கியங்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து, ஆங்கிலப் பேராசிரியர்களுடன் விவாதித்து தமிழுக்கு உலக அளவில் ஒரு மேன்மையான இடத்தை உண்டாக்கிக் கொடுத்தார். க.நா.சு பிறமொழிப் படைப்புகளைத் தமிழுக்கு அறிமுகம் செய்தார்; ஆனால் ராமானுஜன் தமிழ் இலக்கியங்களை ஆங்கிலத்தில் பதிவு செய்தார்.

அந்தவகையில் தமிழ் இலக்கிய உலகம் ராமானுஜனுக்கு மிகவும் கடன்பட்டுள்ளது. இவரது முழுப்பெயர் அத்திப்பட்டு கிருஷ்ணசாமி அய்யங்கார் ராானுஜன். இவர் 1929இல் பிறந்தார். பிறந்த இடம் கர்நாடகாவில் உள்ள மைசூர். இவரது தாத்தா காலத்திலேயே இவரது குடும்பம் தமிழ்நாட்டில் இருந்து கர்நாடகாவிற்குச் சென்றுவிட்டது. தன்னுடைய சொந்த முயற்சியால் தமிழ்கற்ற இவர், கொஞ்சக் காலம் திருச்சியிலும் வேலை பார்த்துள்ளார். இவரது முதல் நூல் The Siriders என்ற ஆங்கிலக் கவிதைத் தொகுதியாகும். தமிழ் கன்னடம் போன்றவற்றில் பல நூல்கள் எழுதியுள்ள இவர், கடைசியாக சிகாகோ பல்கலைக்கழகத்தில் திராவிட மொழியியல் ஆராய்ச்சிப் பிரிவில் பேராசிரியராக இருந்தார்.

உலகக் கவிஞராகத் திகழ்ந்த ஏ.கே.ராமனுஜன் யூலை 13அன்று சிகாகோவில் மரணமடைந்தார். அவரது மறைவிற்கு வருந்தாத தமிழ் இலக்கியவாதிகள் யாருமே இல்லை எனலாம்.

தலைகளை உருட்டியவராயிற்றே. திமுகவிற்கு உள்ள கட்சிச் சொத்து முழுவதும் தனது குடும்பத்திற்கே என்பதில் கருணாநிதி தெளிவாக இருக்கிறாராம். கட்சி முக்கியமா? கரன்சி முக்கியமா? என்றால் கரன்சியைத் தேர்ந்தெடுக்கும் கருணாநிதி இன்று திமுகவையே சிதடித்து வருகிறார் எனப் பத்திரிகைகள் குற்றம் சாட்டுகின்றன. தனது மகன் ஸ்டாலினுக்குப் பட்டாபிஷேகம் செய்வதற்கு எந்த விலையையும் கொடுக்கக் கோபாலபுரத்தார் தயாராக இருக்கிறாராம். தமிழ்ப் பத்திரிகைகள் கருணாநிதியின் குடும்ப அரசியலைக் கேள்விக்குள்ளாக்குகின்றன. கருணாநிதி என்ன சொல்கிறார்? கட்சியைப் பிளக்க உளவுத்துறை முயற்சி செய்கிறது என்கிறார். கருணாநிதியின் குடும்ப அரசியலுக்கு எதிராகப் பிரசாரம் வலுப்படும் போதெல்லாம் "கட்சியை உடைக்க உளவுத்துறை சதிசெய்கிறது" என்ற பல்லவியைக் கடந்த இருபது வருடங்களாகப் பாடிவருகிறார் அவர்; இம்முறை நம்பத்தான் ஆளில்லை. *ஈ.வே.கி.சம்பத், எம்.ஜி.ஆர், டிராஜேந்தர், நாஞ்சில் மனோகரன்* போன்ற பெரிய ஆட்களையெல்லாம் கட்சியிலிருந்து விலக்கிய கருணாநிதி,

www.tamilarangam.net

கோபால்சாமியையும் அவரது ஆதரவாளர்களையும் வெளியேற்றத் தருணம் பார்த்துக் கொண்டிருக்கிறார்– கொக்கொக்க கூம்பும் பருவத்து என்பதைப் போல. வை.கோ. வெளியேற்றப்படும் சமயத்தில், அதன் விளைவுகள் மிகவும் கடுமையாகவே இருக்கும் என்று நம்பப்படுகிறது. கெடுவான் கேடு நினைப்பான். கருணாநிதியும் இப்படித்தான்.

## ஜோதிபாசுவின் மிரட்டல்

இந்திய மார்க்சிஸ்ட்டுகள் ஒரு அபூர்வப் பிறவிகள்! தேசிய இனத்துக்கு எதிராக நிற்பார்கள்; பெருமுதலாளியின் நலன்களை வரிந்துகட்டிக்கொண்டு பாதுகாப்பார்கள்; மற்றவர்கள் செய்தால் ஊழல், அவர்கள் செய்தால் நிர்வாகக் கோளாறு.... இப்படி. தமிழ்நாட்டில் திராவிட இயக்கங்கள் (அஇஅதிமுக இதில் சேராது) மத்திய அரசை மிரட்ட எண்ணும்போதெல்லாம் "தனித்தமிழ்நாடு உருவாகும்" என்று குரங்காக கண் காது வாய் பொத்தி 'கம்'மென்று இருக்கிறார்கள்.

## நம்பிக்கைத் துரோகம்

நம்பவைத்துக் கழுத்தறுப்பதில் இ.கொங்கிரசுக்கு இணையே கிடையாது. நயவஞ்சகம், சூழ்ச்சி, பிரித்தாளுதல் போன்ற அத்தனை வழிகளையும் ஒவ்வொரு பிரச்சனையிலும் கொங்கிரஸ் கையாளத் தவறாது. ஒரு முதல்வரையே நம்பவைத்து, ஒப்பந்தம் போட்டு ஏமாற்றிய கதையை இந்திய மக்கள் சமீபத்தில் கண்டார்கள்.

காவிரி நடுவர் நீதிமன்றம் வழங்கிய இடைக்காலத் தீர்ப்பை அமுல்படுத்த வேண்டும் என்றுகூறித் தமிழக முதல்வர் ஜெயலலிதா 81மணிநேர உண்ணாவிரதம் இருந்தார். ஊழல் குற்றச்சாட்டுகள், தண்ணீர்ப் பிரச்சனை, டிஸ்மிஸ் மிரட்டல் என்பவற்றையெல்லாம் அதலபாதாளத்துக்குத் தள்ளிவிட்டது உண்ணாவிரதம்! உண்ணாவிரதம் ஏற்படுத்திய அனுதாப அலை ஒருபுறம்,



வைத்துக்கொண்டு சென்னைக்குப் புறப்பட்ட ராசைய்யா என்ற இளையராசா, அன்று இப்படியொரு சாதனையைச் செய்வோம் என்று நினைத்தாரோ என்னவோ! உலகமே இன்று இளையராசாவின் இசைப்புலமையை வியந்து பாராட்டுகிறது. லண்டனில் சிம்.:பனி இசைக்கோர்ப்புச் சாதனையை நிகழ்த்த இவர் எடுத்துக்கொண்டது ஒரு மாதம் மட்டும்தான். சிம்.:பனி இசையமைத்த முதல் ஆசியரும் இவர்தான். உலகின் இசைப்பிரியர்கள் அனைவரையும் ஈர்த்துள்ள இளையராசாவுக்கு, இந்தியா என்ன மாதிரியான கௌரவத்தை அளித்துள்ளது? செம்மங்குடி, எம்.எஸ்.சுப்புலட்சுமி என்று எவராவது வெளிநாட்டுக்கு இசைநிகழ்ச்சி

www.tamilarangam.net



தொடை தட்டுவார்கள். இந்த வழியை மேற்குவங்க முதல்வர் ஜோதிபாசுவும் கையிலெடுத்துள்ளார்.

"பாரதீய ஜனதா கட்சி மத்தியில் ஆட்சிக்கு வருமேயானால் தனி வங்காள நாடு ஏற்படும்" என்று மிரட்டியிருக்கிறார். இவருக்கு என்ன ஆச்சு என்று மார்க்சிஸ்ட்டுகளே ஒருவருக்கொருவர் பேசிக் கொள்கிறார்கள். ஏட்டிக்குப் போட்டியாகப் பிரச்சனையை உருவாக்கும் ஜோதிபாசுமீது சிபிஎம் தலைமை நடவடிக்கை ஒன்றும் எடுக்கவில்லை.

கடந்த காலங்களில் கருணாநிதி, வீரமணி போன்றோர் இவ்வாறு உதார் விட்ட போதெல்லாம், இந்திய ஒருமைப்பாட்டைக் காப்பதாகக் கூறி எகிறிக்குதித்த மார்க்சிஸ்ட்டுகள் இன்று காந்தியக் அதிமுகவினரின் வன்முறை மறுபுறம். இதனால் ஏற்பட்ட கொந்தளிப்பான சூழ்நிலையில் மத்திய அமைச்சர் வி.சி.சுக்லா ஜெயலலிதாவுடன் பேச்சுவார்த்தை நடத்தி, காவிரிநீர் தொட்பான கண்காணிப்புக் கமிட்டி ஒன்றை அமைப்பதாக ஒப்பந்தம் போட்டார். இந்த ஒப்பந்தத்திற்கு கர்நாடக முதல்வர் வீரப்ப மொய்லி சம்மதம் தெரிவித்துள்ளதாகக் கூறப்பட்டது. என்ன ஆச்சரியம்! ஜெயலலிதா உண்ணாவிரதத்தை முடித்துக்கொண்ட அடுத்தநாளே வீரப்பமொய்லி சொன்னார்: கண்காணிப்புக் கமிட்டியா? அப்படின்னா என்ன?" தமிழ்நாட்டு மக்களை நன்றாகவே ஏமாற்றிய திருப்தியுடன் மத்திய அமைச்சர் வி.சி.சுக்லா சென்றிருக்க வேண்டும். பிறகு அவர் காவிரிநீர் கண்காணிப்பு கமிட்டி தொடர்பாகப் பேசவே இல்லை. ஏன் பேசப் போகிறார்? மாநில அரசுகளை எந்த அளவுக்குக் கிள்ளுக்கீரையாக மதிக்கிறது என்பதற்கு இதுவோர் நல்ல உதாரணம்.

## 'இசை'ராஜா

பண்ணைப்புரத்திலிருந்து இருபது ஆண்டுகளுக்குமுன்பு ஒரே ஒரு ஆர்மோனியத்தை மட்டும் நடத்தச் சென்றாலே, இந்தியாவின் வானொலி, தொலைக்காட்சி, பத்திரிகைகள் அனைத்தும் பின்னாலேயே சென்றுவிடும். ஆனால் வரலாற்றுச் சாதனையைப் படைத்துள்ள இளையராஜாவுக்கு இந்திய மத்திய அரசு இதுவரையும் எந்தக் கௌரவத்தையும், விருதையும் தரவில்லை. இதற்கு இரண்டு காரணங்கள் இருக்கலாம்: ஒன்று அவர் ஒரு தென்னிந்தியர் என்பது - அதுவும் தமிழனாக இருப்பது (பிரதமரே தென்னிந்தியர்தானே என்று சப்பைக்கட்டு கட்ட முடியாது; வடவரின் ஆதிக்கம்தான்). இரண்டு, அவர் அய்யராகவோ, அய்யங்காராகவோ, ராவ்வாகவோ, சர்மாவாகவோ இல்லாமல் இருப்பது. இருந்தும் இளையராஜாவின் சிம்ஃபனி இசைக்கோர்ப்புச் சாதனையை, மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் இருக்கின்றது, இந்திய தகவல் தொடர்புச் சாதனங்களால். சர்வதேசமே இவரது இசையை அங்கீகரித்தபிறகு, நாம் 'ஏதாவது' செய்யாவிட்டால் உலகம் நம்மைக் காறித்துப்பும் என்ற எண்ணத்தின் அடிப்படையிலாவது, மத்திய அரசு இளையராஜாவைக் கௌரவப் படுத்தும் என்றும் சிலர் நம்புகின்றனர்.

● அதியமான்

www.tamilarangam.net

ஆசிரியர் குழு:
துருவபாலகர்

எமது பொதுவான பல பிரச்சனைகளில் ஒன்று, எமது அடுத்த தலைமுறையின் எதிர்காலம் பற்றியது. எமது தலைமுறையே ஐரோப்பிய நாடுகளில் வாழ்வது பற்றிப் பலத்த சந்தேகங்கள் எழுந்து வருகின்ற அதேசமயம், எமது அடுத்த தலைமுறையின் ஆரம்ப வாழ்வின் ஒரு பகுதி இங்கு பல நாடுகளில் ஆரம்பித்துவிட்டது.

எவ்வளவு சமாதானத்தை நாம் எமக்குள் கூறிக்கொண்டாலும், இந்த நாடுகளில் இப்போதும், இனிவரும் காலங்களிலும் நாம் வேண்டப்படாத விருந்தாளிகள்தான். இருப்பினும் அரசியல் மற்றும் பொருளாதாரக் காரணங்களால் எமது நாட்கள் இங்கே கழிகின்றன. இந்நிலையில், தவிர்க்கமுடியாமல் இந்த நாடுகளில் உருவாகி வளர்ந்துவரும் எமது அடுத்த தலைமுறையினது வாழ்வு எந்த உத்தரவாதமும் இல்லாமல் அலைக்கழியும் நிலை உருவாகி வருவதுடன், புதிய சிக்கல்களும் தோன்றி வருகின்றன.

முகவரி:
Herslebs Gate 43,
0578 Oslo

இங்கு எமது சமூகத்திற்கும், ஏனைய வெளிநாட்டுச் சமூகங்கள் பலவற்றுக்கும் ஏற்படும் பாரிய பிரச்சனை நிறவாதமாகும். இதை இளஞ்சந்ததியினரும் எதிர்கொள்ள வேண்டிய நிலை உள்ளது. இது இங்குள்ள பொருளாதார, சமூக நெருக்கடிகள் அதிகரிக்க இன்னும் ஏற்றம் பெறும் பிரச்சனையாகவே இருக்கும். நாம் எமது தாய்நாடு என இலங்கையைக் கருதும் அதேசமயம், இங்கு பிறக்கும் எமது பிள்ளைகள் தமது தாய்நாடு அதுவென உணர்வுபூர்வமாக நினைக்கும் சந்தர்ப்பம் மிகக் குறைவு. அந்நிலையில் அவர்களால் நிறவாதத்தை நாம் புரிந்துகொள்வது போலப் புரிந்துகொள்ள முடியாதிருக்கும்.

நாம் தாய்நாட்டில் இருந்து வெளியேறும் நேரத்தில், எம்மிடமிருந்து படிப்படியாக விடைபெற்றுக் கொள்பவை எமது சமயம், பழக்க வழக்கங்கள் என்பன. மொழி, உணவுப் பழக்கங்கள் என்பன இலகுவில் விட்டு விலகாவிடினும் அவை மாறுபாடடையும். இவற்றில் எல்லாவற்றையும் நாம் விட்டுவிட வேண்டுமா என்பது பற்றி நாம் எமக்குள் பலத்த விசாரணை நடத்திக்கொள்ளல் அவசியம். எமது அடையாளங்கள் என நாம் எதைக் காப்பாற்றப் போகிறோம் என்பது விவாதத்திற்குரியது.

சுவடுகள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சந்தா:
பன்னிரு இதழ்களுக்கு
300 குறோனர்கள்

மாத இதழ்
ஸ்தாபிதம்: புரட்டாதி88

எவ்வாறெனினும் எமது அடையாளங்களில் மொழியை நாம் இழக்கக்கூடாது என்பது பலரது கருத்து. இந்த மொழியை அதிகளவில் புலம்பெயர்ந்த தமிழர்கள் இழந்து இன்று தமது தாய்மொழியையே மறந்த நிலையை ஃபிஜி, மொறிஸ்ரீயஸ் போன்ற இடங்களில் காணலாம். இந்தநிலை எமது அடுத்த தலைமுறைக்கு ஏற்படாது காப்பது எமது கடமையாகும். அவர்கள் தமிழைப் பாவிக்கும் சந்தர்ப்பங்கள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட வேண்டும்.

தமிழைப் பயிற்றுவிப்பதில் அனைத்துப் பெற்றோரும் தமது பங்கைச் செய்தல் அவசியம். ஐரோப்பாவைப் பொறுத்தவரை, இங்கு பல தமிழ்ப் பாடசாலைகள் ஆரம்பித்து நடத்தப்படுகின்றன. இவை பலரது உழைப்பையும், நேரத்தையும் அர்ப்பணித்து நடத்தப்படுபவை. இவ்வாறான முயற்சியில் ஈடுபடுபவர்களது உழைப்பு மதிக்கப்படவேண்டும். ஆயினும், இந்த முயற்சிகளில் அரசியல் அமைப்புகள் பின்னிற்கையில் இயல்பாகவே பல அனுகூலங்களும், பிரதிகூலங்களும் ஏற்படும். இது கவனத்தில் எடுக்கப்பட்டு ஆய்வு செய்யப்பட வேண்டும்.

எமதும், எமது அடுத்த சந்ததியினதும் எதிர்கால வாழ்வு ஐரோப்பிய மண்ணில் எவ்வாறு அமையும் என்பது பற்றியும், அதன் விளைவுகளைப் பாதகமற்ற முறையில் எவ்வாறு மாற்றலாம் என்பது பற்றியும் தற்போதைய சூழலில் ஆய்வுகள் அவசியமானவை. எமது தாய்நாட்டின் விடுதலையில் அக்கறை கொண்ட அனைவருக்கும் இது ஒரு முக்கிய பணியாகும். இவ்வாறான ஆய்வுகள் பரவலாக நடத்தப்படுவதும், அதன் விளைவுகள் விபரங்கள் சகலரும் அறியக்கூடியதாயும், கிடைக்கக்கூடியதாயும் இருத்தல் அவசியம்.


எமது அடையாளங்கள் சிலவற்றை வந்த இடத்தில் நாம் தொலைத்திருக்கக்கூடும். ஆனால், நாங்களே ஒரு தொலைந்த சந்ததியாக மாறிவிடக்கூடாது. இதற்கான பணிகளில் நாம் அனைவரும் ஈடுபடல் அவசியம்.

சுவடுகள் 48,
ஆவணி 1993.

சுவடுகள்

www.tamilarangam.net

எஸ். ஜெயக்கொடி



www.tamilarangam.net



அவனுக்கு இது மூன்றாவது களம். முதல் இரண்டு களத்திலும் வெற்றி கண்டதால் அவனில் அபார நம்பிக்கை வைத்து இந்தப் பெரும் பணியையும் இவனிடமே கொடுத்து விட்டனர். இன்றிரவு எட்டு மணிக்கு படகு புறப் படுகிறது. அவனுக்கு இட்ட பணியை முடிப்பதற்கு ஒரு கைக் குண்டு மட்டும் போதுமானது. ஒரேயொரு கைக் குண்டு. ஆயினும் கைகாவலுக்கென்று மேலதிகமாக இன்னொரு கைக்குண்டும் அவனிடம் வழங்கப் பட்டிருந்தது. இன்று அவனுக்கு மூன்றாவது களம்.

மூன்று வருடங்கள் முடிந்து விட்டன. தாய் தந்தையை, மூத்ததும் இளையதுமான இரு சகோதரிகளை, உற்றாரை, உறவினரை விட்டுப் பிரிந்து இயக்கத்தில் சேர்ந்து, உத்தரப் பிரதேசத்தில் ஆயுதப் பயிற்சியும் முடித்து மீண்டும் மண்ணுக்கு வந்து தனக்கென இட்ட பணியை மூன்று வருடங்கள் தாண்டியும் செய்து கொண்டே இருக்கிறான். இன்று அவனது மூன்றாவது களம்.

அவனொரு முரட்டுப் போராளி. ஒரு குருட்டு விசுவாசி. தன்னை வழி நடத்தும் பொறுப்பாளன் எது சொன்னாலும் சந்தேகத்தைக் கூட திரும்பக் கேட்டுத் தீர்க்காமல் செய்து முடிப்பவன். பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் பல, உப தபால் நிலையங்கள் சில அவனுக்கு தூசுக்குச் சமானமானவை. ஆயினும் அவையெல்லாம் அவனுக்கு களமென்ற சேர்மதிக்குள் அடங்காதவை. இன்றுதான் அவனுக்கு மூன்றாவது களம்.

இடுப்புப் பட்டியில் தொங்கும் இரண்டு கைக்குண்டுகளும் மேற்சட்டைக்குள் மறைந்து கனக்கிறது. களம் செல்வதற்கு முன்னால் தனது வீட்டுக்கு ஒரு தடவை சென்று வரலாமென்ற உத்தேசம் அவனுக்குள். பொறுப்பாளியைக் கேட்கிறான். மறுப்பில்லை. சென்றுவர உத்தரவு. ஹொண்டா200. குண்டும் குழியுமான பெருந்தெருக்களை ஒரே வேகத்தில் தாண்டி, அவனது கிராமத்துப் புழுதித் தெருக்களையும் கடந்து வீட்டின் முன்னால் தரித்துக் கொள்கிறது ஹொண்டா200. முற்றத்தில் அம்மா. மாவள்ளிச் சீவலை முற்றத்தில்

விரித்த சாக்கில் பரத்திக் காய விட்டபடி. முதுமை கவிந்த முகத்தில் பிரிவின் துயரக் கோடுகளும் படர்ந்திருக்க, அதனிடையிலும் மகனைக் கண்ட மகிழ்ச்சியின் வெளிப்பாடுகள். புன்னகை. ''மகனே!'' என்ற வெளிவராத வார்த்தைகள் கலந்த புன்னகை.

சூட்டியட வாழ்க்கயச் சீரழிச்சுப் போடங்களே பாவியள். அந்த அப்பாவி பெத்த பிள்ளயின்ர சீவியத்தக் கெடுத்துப் போட்டாங்களே... '' அப்பர் மூர்ச்சையாகிறார். தொடர்ந்து அம்மாவின் பதட்டமும், ஒப்பாரியும். அப்படியே வரிசைக் கிரமமாக அக்கா, தங்கையின் அழுகைக் குரல்கள். சூட்டி அக்கா. சிறு வயதிலிருந்தே இவர்களுடன் பிரியமாயுள்ளவள். காலையிலும் மாலையிலுமாக இரண்டு தடவைகள் தனது சிறிய துண்டுக் காணிக்குள் நிமிர்ந்துநிற்கும் பத்துப்பதினைந்து பனைகளின் உச்சியை நுகர்ந்து தன் வாழ்க்கையைக்

கொண்டு நகர்த்தும் சதாசிவம் குஞ்சியப்புவின் மகள். சிறு வயதிலிருந்தே இவர்களில் அவள் மிகவும் நேசமாயிருந்தாள். அவள் அண்மையில்த்தான் மயிலரின் மூத்த மகனைக் கல்யாணம் செய்தாள். இவனும் அந்தக் கல்யாணத்துக்கு வந்திருந்தான். இவன் வந்தது மட்டுமல்ல, மாப்பிள்ளைத் தோழனாகவும் சூட்டி அக்கா இவனையே நிற்க வேண்டுமென்று அடம் பிடித்து நிற்க வைத்தாள். இரண்டு மாதங்கள்தான் சென்றிருக்கும். சூட்டி அக்காவின் கணவன் இறந்து விட்டாராம். எப்படி...? அவரது இயக்கமே அவரைக் கொன்று விட்டதாம். உட்கொலை. இவனுக்கு நன்கு தெரியும். சூட்டி அக்காவின் கணவர் எப்படியெல்லாம் அந்த இயக்கத்துக்காக உழைத்தார் என்பது. அப்படிப் பட்டவரையே கொன்று விட்டார்களா? அப்படியானால் உட்கொலை என்பது எதன் அடிப் படையில் நிகழ்த்தப்

www.tamilarangam.net

''அண்ணா...'' என்றபடி வீட்டுக்குள்ளிருந்து ஓடி வந்து தோளில் தொங்கும் தங்கை. அவசர அவசரமாய் அடுக்களைக்குள் ஓடிச் சென்று அடிப் பானைக்குள் ஒட்டிக் கிடக்கும் பருக்கைகளை வழித்துத் தட்டில் போட்டு, ஆணத்தையும் ஊற்றி எடுத்து வரும் அக்கா. குடும்பத்தின் பாச உணர்ச்சிக் கண்ணிக்குள்ளும் அவன் சிக்குப் பட்டவனாயினும், தனது தலைமையின் மீதான குருட்டு விசுவாசத்தையும் அதீதமாய் வளர்த்திருப்பவன். அவனொரு முரட்டுப் போராளி. குருட்டு விசுவாசி. இன்று அவனுக்கு மூன்றாவது களம்.

அம்மா வாஞ்சையோடு முதுகைத் தடவிக் கொடுக்க, தங்கை தோழிற் சாய்ந்தபடியிருக்க, அலுமீனியத் தட்டில் அக்கா இட்டு வந்த சோற்றுப் பருக்கையை ஆணத்தோடு குழைத்து உருட்டி உள்ளே தாள்ளி விட்டு வெளியே வந்து ஹொண்டா200இன் மேல் அமர்வதற்குத் தயாராகிறான். கள்ளுத் தவறணைக்குப் போன அப்பர் தகரப் படலையைத் திறந்து கொண்டு அவசர அவசரமாக உள்ளே வருகிறார். அப்பரின் கண்களில் கண்ணீர். பதட்டம். பயம். திகைப்பு. நடுக்கம். இப்படி எல்லாம் கலந்த வெளிப்பாடுகள் அப்பரிடம், ஏதோ நிகழக் கூடாதவை நிகழ்ந்து விட்டதை உணர்த்துகின்றன. சகிக்க முடியாதிருக்கிறது அவனுக்கு. அப்பர் அழுவது அவனை உள்ளார்ந்தமாய் தாக்குகிறது. அப்பர் முற்றத்துக்கு வந்து தரித்து நிலத்தில் வீழ்ந்து புரள்கிறார். ஏதேதோவெல்லாம் உளறுகிறார். அப்பருக்கு வெறியில்லை என்பது தெளிவு. ''ஐயோ அந்தப் பிள்ள படுகிறது? புதிதாய் அவனுள் இப்படிப் பல கேள்விகள். இன்று அவனுக்கு மூன்றாவது களம்.

அவனது இரண்டு வெற்றிகரமான களங்கள். தலா ஒவ்வொரு கைக் குண்டுடன் முடிக்கப் பட்டவை. இருளின் ஆட்சியில் படகு புறப் படும். அந்தப் படகில் இவனும், இவன் இயக்கத்தார் சிலரும். படகு புறப்பட்ட பத்துப் பதினைந்து நிமிடங்களில், அல்லது அரை மணித்தியாலத்தில் படகு வெடித்துச் சிதறும். இவன் மட்டும் தப்பித்தவனாய் கரையை வந்து சேர்வான் சக தோழர்களையும், படகையும், தனது இடுப்பிலிருந்த கைக் குண்டையும் இழந்து போய். இன்று அவனுக்கு மூன்றாவது களம்.

இடுப்பிலிருக்கும் இரண்டு கைக் குண்டுகளையும் தடவிப் பார்க்கிறான். பவுத்திரமாய் இருக்கின்றன. அம்மா, அப்பர், சகோதரிகளை ஏக்கமாய் ஒரு கணம் நோக்கி விட்டு ஹொண்டா200இல் அவன். உறுமிப் புறப் படுகிறது ஹொண்டா200. அவனது இடையில் கனக்கின்றன கைக் குண்டுகளிரண்டும். அவனுக்கு இன்று மூன்றாவது களம். அவன் முன்பு ஒரு குருட்டு விசுவாசி. முரட்டுப் போராளி. அவனுக்கு இன்று மூன்றாவது களம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இலங்கை சுதந்திரம் அடைந்து 45 வருடங்கள் ஆகிவிட்டன. ஆனால் சுதந்திரம் என்பது பெயரளவில் மாத்திரமே நடைமுறையில் உள்ளது. அதிகாரத்தைக் கையில் வைத்துள்ள பல தரப்பினரும் மனித உரிமைகளை மீறிக்கொண்டே இருக்கிறார்கள். இவ்வாறு செயற்படுவோரால் தேசமும் மக்களும் சின்னாபின்னப்பட்டுப் போயுள்ளனர்.

இந்த மனித உரிமை மீறல்களில் இலங்கை அரசு, இந்திய அரசு (இந்தியாவில் உள்ள இலங்கையர்மீது), ஜேவிபியினர், விடுதலைப் புலிகள், முஸ்லிம் ஊர்காவற் படையினர், ஈபிஆர்எல்எஃப், மற்றும் கொழும்பு இயக்கங்கள் தொடர்ச்சியாக ஈடுபட்டு வந்திருக்கின்றன, ஈடுபட்டும் வருகின்றன. மாற்றுக் கருத்து உடையோரைச் சிறையில் அடைத்துச் சித்திரவதை புரியப்படும் கொடுமை இன்னும் தொடர்கிறது இது தொடர்கதையாகவே உள்ளது.

இந்தத் துயர்நிலை நீங்க உழைப்பது அனைத்து மக்களதும் கடமையாகும். இதில் எவரும் எக்காரணத்தைக் காட்டியும் பின்னிற்கக்கூடாது, முடியாது.

சகல அரசியற் கைதிகளும் எதுவித நிபந்தனையும் இல்லாமல் விடுவிக்கப்பட வேண்டும் எனவும், சகல தரப்பு மனித உரிமை மீறல்களும் நிபந்தனையின்றி உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் எனவும் சுவடுகள் அனைத்துத் தரப்பினரையும் வேண்டுகிறது. தாய்நாட்டின் துயர்நீங்கவேண்டும் என்பதில் அக்கறை கொண்டுள்ள அனைவரும் இந்த வேண்டுகோளை விடுக்க வேண்டும் எனவும் சுவடுகள் வேண்டுகிறது.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நோர்வேயில் தேர்தல்

சஞ்சயன்


செப்டம்பர் 13ஆம் திகதி நோர்வேயின் பாராளுமன்றத் தேர்தல்கள் நிகழவுள்ளன. நான்கு வருடங்களுக்கு ஒருமுறை நிகழும் இத்தேர்தல்களில் கடந்த பதினைந்து வருடங்களாக சிறுபான்மை அரசுகளே நாட்டை ஆளும் நிலை ஏற்பட்டு வந்துள்ளது.

எமது நாடுபோல இங்கு பகிரங்கக் கூட்டங்கள் பொதுவாக தேர்தலையொட்டி நிகழ்வதில்லை. எனினும் வாக்களிப்பு வீதம் (90%) மிக அதிகமாகும். தேர்தற் பிரசாரங்களில் தொடர்புச் சாதனங்களின் பங்கு முக்கியமானது. தொலைக்காட்சியில் தனியாகவும், கூட்டாகவும் நிகழும் அரசியற் கட்சிகளின் விவாதங்கள் பல சமயங்களில் கட்சித் தலைவர்களுக்கு வயிற்றைக் கலக்கும் விடயமாகும். தேசிய தொலைக்காட்சியினதும் (NRK), தனியார் தொலைக்காட்சியினதும் (TV2) அனுபவம் வாய்ந்த நிருபர்கள் நடாத்தும் இந்தக் கேள்வி பதில்கள், விவாதங்களுக்கு சகல கட்சிகளும் தவிர்க்க முடியாமல் பங்கெடுக்க வேண்டும். அத்துடன், திறமை வாய்ந்த இந்த நிருபர்களால் நடத்தப்படும் விவாதங்களில் அரசியற் கட்சிகளின் தலைவர்கள் சரியான பதிலளிக்க முடியாமல் திணறுவதைக் காணலாம். இதைவிடப் பத்திரிகைகளும் தமது பங்கினைத் தேர்தலில் முடிந்தளவு சிறப்பாக ஆற்றிவருகின்றன.

கடந்த 40 வருடங்களில் நாடு முன்னெப்போதும் எதிர்நோக்கியிராத பாரிய பொருளாதார நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்துவரும் சூழலில் நிகழும் இந்தத் தேர்தல் பொதுமக்கள் மத்தியில் அதிக ஆர்வத்தை ஏற்படுத்தியுள்ளது. E F என அழைக்கப்படும் ஐரோப்பிய சமூகத்தில் நோர்வே இணைவது தொடர்பாக நாட்டில் நிலவும் அபிப்பிராய மாறுபாடும், தொடர்ந்தும் சீராக அதிகரித்துவரும் வேலையற்றோர் பிரச்சனையும் இத்தேர்தலில் அனேகரின் கவனத்தை ஈர்த்துள்ளதுடன் முக்கிய விடயங்களாகக் கருதப்பட்டு விவாதிக்கப்பட்டு வருகின்றன.

ஐரோப்பிய சமூகம்

ஐரோப்பிய சமூகம் தோற்றம் பெற்றதில் இருந்து, அதில் இணைவது தொடர்பாக மாறுபட்ட கருத்துகள் விவாதிக்கப்பட்டே வந்துள்ளன. 1972இல் நிகழ்ந்த 'இணைவு'





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தொடர்பான அபிப்பிராய வாக்கெடுப்பில் இணைவிற்கு எதிராக மக்கள் வழங்கிய தீர்ப்பு இந்த விடயத்தில் ஒரு முற்றுப்புள்ளி வைத்தது. எனினும் 1980களின் இறுதியில் இருந்து நாடு எதிர்நோக்கிவரும் பொருளாதார நெருக்கடி நிலை ஐரோப்பிய சமூகம் பற்றிய விவாதங்களை மீண்டும் தோற்றுவித்துள்ளது. பாராளுமன்றத்தில் பெரும்பான்மை முடிவுகளுக்கமைய இணைவிற்கான விண்ணப்பத்தை நோர்வே ஏற்கனவே அனுப்பிவிட்ட போதும் அங்கத்துவ நாடுகள் நோர்வேயை இணைத்துக் கொள்ளுமா என்பது கேள்விக்குறியே. காரணம் இணைவு தொடர்பாக நோர்வே குறிப்பிட்டுள்ள பல விடயங்கள் ஐரோப்பிய சமூக நாடுகளின் பொதுக்கோட்பாட்டுக்கு பெருமளவு மாறுபட்டதாக உள்ளது. மறுபுறம் உள்நாட்டில் ஐரோப்பிய சமூகத்திற்கு




எதிரான கருத்து உறுதியான நிலையில் உள்ளது. பிரபல தினசரி ஒன்று நடத்திய கணிப்பீட்டில் 54% மக்கள் இணைவிற்கு எதிராக உள்ளனர். 34%பேர் ஆதரவாகவும், 12% பேர் கருத்தற்ற நிலையிலும் உள்ளனர். இந்தப் 125இல் 80%இனர் இணைவிற்கு எதிராக வாக்களிக்கலாம் என எதிர்பார்க்கப் படுகிறது.

அரசியற் கட்சிகளைப் பொறுத்தவரை முதலிரு பெரிய கட்சிகளான தொழிற் கட்சி(A), வலதுசாரிக் கட்சி(H) என்பவற்றுடன் முன்னேற்றக் கட்சியும்(FrP) ஐரோப்பிய சமூகத்துடன் இணைவை ஆதரிக்கின்றன. சோஷலிச இடதுசாரிக் கட்சி(SV), விவசாயிகளின் ஆதரவு கொண்ட மத்திய கட்சி(SP) என்பவற்றுடன் இடதுசாரிக் கட்சியும் இணைவுக்கு எதிரான நிலைப்பாட்டைக் கொண்டுள்ளன. சில பிரதேசங்களில் பேராதரவு கொண்ட கிறிஸ்தவ மக்கள் கட்சி (KrF) தெளிவற்ற நிலையைக் கொண்டுளளது.

<u>வேலையற்றோர் பிரச்சனை</u>

பல ஐரோப்பிய நாடுகளுக்கும் பொதுவான இப்பிரச்சனை நோர்வேயைப் பொறுத்தவரை மிகச் சிக்கலாக உள்ளது. ஒப்பீட்டு ரீதியில் ஏனைய பல ஐரோப்பிய நாடுகளைப் போலல்லா விட்டாலும், வேலையற்றோர் வீதம் 8.2%ஆக உள்ளது. இவர்களுடன் கீழ்நிலை வேலையற்றோர் பிரிவையும் சேர்த்தால் 10%ஐத் தாண்டிவிடும். இப்பிரச்சனை தொடர்பஏி ஆளும் தொழிற்கட்சியின் வாக்குறுதிகள் எவையும் நடைமுறையில் சாத்தியமாகவில்லை. கடந்த சில வருடங்களாக வேலைவாய்ப்புப் பிரிவு பல முயற்சிகளை எடுத்தாலும், வேலையற்றோர் பிரிவில் வாரம் 2000பேர் புதிதாகச் சேர்கின்றனர்.

கடந்த சுமார் ஆறு வருடங்களாக வேலையற்றோர் பிரச்சனை தொடர்பாக மேற்கொள்ளப்பட்டு வந்த பலவித பொருளாதாரப் புனரமைப்பு முயற்சிகள் எதுவித பலனையும் தரவில்லை. எதிர்காலப் பொருளாதார அபிவிருத்திபற்றிப் பொருளாதார நிபுணர்கள் பச்சைக்கொடி காட்டியுள்ள போதிலும், வேலையற்றோர் பிரச்சனை தொடர்ந்துவரும் வருடங்களில் முக்கிய பிரச்சனையாக வளர்ந்து வரும் என நம்பப்படுகிறது. எனினும் இத்தாக்கத்தின் அளவு, ஆட்சியில் அமரவுள்ள கட்சிகளின் பொருளாதாரக் கொள்கைகளிலேயே தங்கியுள்ளது.




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தொழிற்கட்சி (ArbeiderParti)

இரண்டாம் உலக யுத்தத்தின் பின் கடந்த காலங்களில் நாடு பொருளாதாரத் துறையில் முன்னேற்றம் காணவும் சமூகநல விருத்தியில் கூடியளவு பங்களிப்பு நல்கவும் இக்கட்சியின் கடந்தகாலத் தலைவர்கள் முக்கிய பங்களிப்பை வழங்கியுள்ளனர். மேற்கூறிய திட்டங்களைச் சீராக நடைமுறைப் படுத்தியவரும், நோர்வே நாட்டின் தேசபிதா என அழைக்கப் படுபவருமான எய்னார் கெராட்ஸன் (Einar Geradson, தற்போதைய ஒஸ்லோ மாநகர முதல்வர் றுாண கெராட்ஸனின் தந்தை) இக்கட்சியின் பிரபல தலைவர்களில் முக்கியமானவர்.












கட்சியின் ஆரம்ப காலங்களில் கட்சி சோஷலிசச் சமதர்மக் கோட்பாடுகளைக் கடைப்பிடித்த போதும், அண்மைக் காலங்களில் கட்சியில் வலதுசாரிக் கொள்கை கொண்டோரின் ஆதிக்கம் அதிகரித்து வருகிறது. கடந்த மூன்று வருடங்களில் (91-93) ஆளும் தொழிற்கட்சியும் பிரதான எதிர்க்கட்சியான வலதுசாரிக் கட்சியும் பல விடயங்களில் ஒருமித்துச் செயற்பட்டுள்ளன. ஐரோப்பிய சமூகத்துடன் இணைவது தொடர்பாகத் தலைமைப்பீடம் உறுதியாக இருக்கின்றபோதும் கட்சியின் கணிசமான அங்கத்தவர்கள் இணைவை எதிர்க்கின்றனர்.

கடந்த காலங்களில் சமூகநலத் திட்டங்களுக்கு வழங்கப்பட்ட முக்கியத்தைக் குறைத்து, தனியார் முதலீடுகளை ஊக்குவிக்கக்கூடிய பொருளாதாரச் சலுகைகளை வழங்கியும் பல முக்கிய 'தளங்களில்' அரசின் கட்டுப்பாடுகளைத் தளர்த்துவதன் மூலம் இன்றைய நெருக்கடிநிலைக்குத் தீர்வு காணலாம் எனக் கட்சியின் தலைமை கருதுகிறது. நடைமுறைக்கு வரவுள்ள ஐரோப்பிய பொருளாதார ஒத்துழைப்பு உடன்படிக்கையும், ஐரோப்பிய சமூக இணைவும் நாட்டிற்குச் சாதகமாய் அமையும் எனக் கட்சியின் தலைமை கருதுகிறது. இது எவ்வளவுதூரம் சாத்தியம் என்பதே இன்றைய நிலையில் கேள்வியாகும்.

கடந்த காலங்களில் வீழ்ச்சியுற்ற கட்சியின் செல்வாக்கு அண்மைக் காலங்களாக ஏறுமுகமாக

www.tamilarangam.net

அமைந்துள்ளதைக் (35%) கருத்துக் கணிப்பீடுகள் கூறுகின்றன.

வலதுசாரிக் கட்சி (Hoyre)

பிரதான எதிர்க்கட்சியான இக்கட்சி கடநத் தேர்தலையடுத்து சிறுபான்மை கூட்டரசை நிறுவியபோதும், பத்து மாதங்களிலேயே வீழ்ச்சி கண்டது. 1991இல் கட்சியின் தலைமைப் பொறுப்பை ஏற்ற பெண்மணி காஸி குல்மன் ஃபீவ (Kaci Kulman Five) சரிந்துவந்த கட்சியின் செல்வாக்கை ஓரளவு தடுத்து நிறுத்தியுள்ளார். நாட்டை முதலாளித்துவப் பாதையில் வழிநடத்த வேண்டும் என்பதில் உறுதியாக குறியாகச் செயல்படும் அதேவேளை, நாட்டின் தனித்துவம் பேணப்படல் வேண்டும் என்பதையும் கட்சி கருத்தில் கொண்டுள்ளது. ஐரோப்பிய சமூகத்தில் முழுமையாக இணைவதன் மூலமே ஏனைய நாடுகட்கு நிகராகத் துரித வளர்ச்சியை அடையமுடியும் எனக் கட்சி கருதுகிறது.

வெளிநாட்டவர், அகதிகள் தொடர்பாக ஏனைய ஐரோப்பிய நாடுகளின் கொள்கைகளையே வலியுறுத்தும் கட்சி, அகதிகள் தொடர்பாகக் கடுமையான கட்டுப்பாடுகளை வலியுறுத்துகிறது. சர்வதேசக் கொள்கைகளில் தொழிற்கட்சி போலவே அமெரிக்காவின் ஆதிக்கத்திற்கு ஆதரவான போக்கையே கொண்டுள்ளது. தேர்தலில் வலதுசாரிக் கட்சிகளின் கை ஓங்கும் பட்சத்தில் இக்கட்சி தனித்தோ, கூட்டாகவோ ஆட்சி அமைக்கலாம்.

சோஷலிச இடதுசாரிக் கட்சி (Sosialt Venstre)

தொழிற்கட்சியன் ஆரம்பகாலக் கொள்கைகளுடன் மேலதிகமாக பல சமூக அபிவிருத்தித் திட்டங்களை வலியுறுத்திவரும் இக்கட்சி, கடந்த மூன்று வருடங்களாக மக்களின் செல்வாக்கைப் பெற்றுவந்த போதும் அண்மைய கருத்துக் கணிப்பீடுகளில் கட்சியின் செல்வாக்கு சரிந்து வருவது தெரிகிறது.

நிகழவுள்ள தேர்தலில் ஐரோப்பிய சமூகத்துடன் இணைவதற்கு எதிர்ப்புத் தெரிவிப்பது என்று பல கட்சிகள் நிலைப்பாடு எடுத்தமை இக்கட்சியின் செல்வாக்குச் சரிவிற்கு முக்கிய காரணம். தொழிற்கட்சியிலுள்ள ஐரோப்பிய சமூக எதிர்ப்பாளர்களில் பெரும்பாலானோர் தமது கட்சிக்கு மாற்றீடாக இக்கட்சியையே கருதி வந்தனர். சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பு - அபிவிருத்தி, சாதாரண மக்கள் எதிர்கொள்ளும் சமூகநலத் திட்டங்களில் கூடிய அக்கறை, வெளிநாட்டு அகதிகள் தொடர்பாக ஓரளவு நெகிழ்ச்சித் தன்மை என்பவற்றைக் கட்சி தேர்தற் பிரசாரமாக முன்வைத்துள்ளது.

ஐரோப்பிய சமூக இணைவிற்கு முழு எதிர்ப்பைத் தெரிவிக்கும் கட்சி, இணைவிற்கு அப்பாற்பட்ட முறையில் ஐரோப்பிய நாடுகளுடன், நோர்வேயின் சுயாதிபத்தியத்தைப் பாதிக்காத வகையில் அரசியல் பொருளாதார ஒத்துழைப்பை வலியுறுத்துகிறது. தேர்தலின்பின் தொழிற்கட்சி ஆட்சி அமைப்பின் இக்கட்சியின் ஆதரவு முக்கியமானது.

மத்திய கட்சி (SenterParti)

ஐரோப்பிய சமூக இணைவிற்கு எதிர்ப்பின் (Nei til EF) நாயகியான இக்கட்சியின் தலைவி அன்ன எங்ஙர் லாங்ஸ்ரயின் (Anne Enger Langstain) நாட்டின் வடபகுதிகளில் அதிகளவு செல்வாக்குப் பெற்றவராக உள்ளார். இக்கட்சியும் சோஷலிச இடதுசாரிக் கட்சியும் ஒற்றுமையாக இருந்து தேர்தலில் பொதுவேட்பாளர்களை முன்னிறுத்தியிருப்பின், வடபிராந்தியம் முழுவதையும் தமது கட்டுப்பாட்டுக்குள் இவர்களால் கொண்டுவர முடியும்.

www.tamilarangam.net

## இத்தனை தொகை

நோர்வேயில் அண்மைக் காலங்களாக சிறுவர்மீது பாலியல் நோக்கங்களுக்குப் பலாத்காரப் படுத்துவது தொடர்பான வழக்குகள் அதிக கவனம் பெற்று வருகின்றன. அண்மையில் சமூக சேவைகள் அமைச்சு வெளியிட்ட அறிக்கை ஒன்றின்படி, பதினெட்டு வயதை அடையமுன் 19% பெண்களும், 14% ஆண்களும் வயதுவந்தோரால் இவ்வாறு பலவந்தப் படுத்தப்படுவதாகக் கூறப்படுகிறது.

– தேவகி –

அந்தளவிற்கு அப்பிரதேசங்களில் ஐரோப்பிய சமூக எதிர்ப்பு நிலவுகிறது. ஐரோப்பிய சமூக இணைவுபற்றித் தேர்தலுடன் தொடர்புபடுத்தக் கூடாது என்ற பெரும்பாலான கட்சிகளின் நிலைப்பாடு வடமுனையில் அதிகளவில் பிரதிபலிக்கப் போவதில்லை.

கடந்த தேர்தலில் ஆறுவீத வாக்குகளைப் பெற்றிருந்த கட்சி, அண்மைக்காலமாகக் கணிப்பீடுகளில் ஏறத்தாழ 12% செல்வாக்கைப் பெற்றுள்ளது. விவசாயிகள், மீனவர் மத்தியில் அதிக செல்வாக்குப் பெற்ற இக்கட்சி ஐரோப்பிய இணைவிற்குப் பதிலாக ஸ்கன்டிநேவிய நாடுகளின் ஒத்துழைப்பை வலியுறுத்துகிறது. ஆரம்பத்தில் இக்கட்சி வலதுசாரிப் போக்கைக் கொண்டிருந்தாலும் தற்போது ஓரளவு சோஷலிசக் கோட்பாடுகளை வலியுறுத்துகிறது.

### முன்னேற்றக் கட்சி (FremskritsParti)

கடந்த தேர்தலில் 3வது பெரிய கட்சியாக திடீர் வளர்ச்சியுற்ற இக்கட்சி இன்று ஐந்தாம் ஆறாம் இடத்திற்கு (அபிப்பிராய வாக்கெடுப்பில்) வந்துள்ளது. கட்சியின் இரண்டாம் மூன்றாம் நிலைத் தலைவர்களின் வெளியேற்றமும், கட்சியின் கடந்தகாலச் செயற்பாடுகளும் கட்சியின் செல்வாக்கை விழவைத்துள்ளன.

அதிதீவிர முதலாளித்துவக் கட்சியான இது, வெளிநாட்டார் தொடர்பாகக் கடுமையான போக்கைக் கொண்டுள்ளது. வயோதிப மனைகளுக்கும் (sykehjem), குழந்தைகள் காப்பகங்களுக்கும் (barnehage) மருத்துவமனைப் புனர்நிர்மாணங்களுக்கும் பணம் இல்லை எனக் கைவிரிக்கும் அரசாங்கம், எவ்வாறு இங்குள்ள அகதிகளுக்கும், விறய நாடுகளுக்கும் தாராளமாக(?) உதவுகிறது எனக் கோஷமிடும் கட்சித் தலைவர் கார்ள்.இ.ஹாகன் (Carl.I.Hagen) பல உண்மை விடயங்களை மூடிமறைக்கிறார். இங்கு வாழும் வெளிநாட்டவர்களாலோ, வெளிநாடுகளுக்கு நோர்வே உதவி செய்வதாலோ எவர் பயனடைகின்றனர் என்பது விவாதத்திற்குரியது. ஆனால் இதில் நோர்வேக்கு எதுவித நன்மையும் இல்லை என்பது உண்மைக்குப் புறம்பானது.

கட்சியின் தலைவரின் இனவாதக் கொள்கைகளுக்கு எதிராகக் கட்சியின் இளைஞரணித் தலைமை மேற்கொண்டுவரும் செயற்பாடுகள் கட்சிக்குள் பல குத்துவெட்டுகளை ஏற்படுத்தியுள்ளன.

### கிறிஸ்தவ மக்கள் கட்சி (Kristelig FolkeParti)

நாட்டின் மேற்குப் பிராந்தியத்தில் அதிகளவு செல்வாக்கைப் பெற்றுள்ள இக்கட்சி தனது முன்னைய இறுக்கமான கொள்கைகள் பலவற்றைப் படிப்படியாகக் கைவிட்டுள்ளது. திருமணமின்றி

www.tamilarangam.net

இணைந்து வாழுதல் (samboer), பெண்களின் சமவுரிமை, திருமணமின்றிப் பிள்ளை பெறுதல் போன்ற இங்கு நிலவும் சஏதாரண விடயங்களில் முன்பு போல இறுக்கமான கட்டுப்பாடுகளைக் கொண்டிராமல் நெகிழ்ச்சித் தன்மையைக கடைப்பிடிக்கிறது. எனினும் தன்னினச் சேர்க்கையைக் கட்சி கடுமையாக எதிர்க்கிறது. அண்மையில் கட்சியின் இளைஞரணித் தலைவர் ஒருவர் தான் தன்னினச் சேர்க்கையாளர் என்பதைப் பகிரங்கமாகக் கூறியதையிட்டுக் கட்சியைவிட்டு நீக்கப் பட்டிருந்தார். கட்சி அங்கத்தவர் பலர் மத்தியில் இது பெரிய சலசலப்பை ஏற்படுத்தியிருந்தது. வெளிநாட்டவர் தொடர்பாக ஆதரவான இக்கட்சியின் சில உறுப்பினர்கள் இலங்கைத் தமிழர் தொடர்பாக அனுதாபம் கொண்டோர்.

இந்தக் கட்சிகளைவிட இடதுசாரிக் கட்சி (Venstre), தீவிர இடதுசாரிக் கட்சி (RV), சூழல் பாதுகாப்புக் கட்சி (MiljoParti), ஓய்வூதியம் பெறுவோர் கட்சி (PensjonistParti) என்பனவும் புதிதாக வெளிநாட்டவர்களுக்கு எதிரான கட்சியும் போட்டியிடுகின்றன.

இங்குள்ள மூன்றாம் உலக மக்களைப் பொறுத்தவரை தொழிற்கட்சியும், வலதுசாரிக் கட்சியும் ஒரே கொள்கைகளையே பின்பற்றுகின்றன. நாட்டை முதலாளித்துவ ரீதியில் வழிநடத்துவது தொழிற்கட்சி ஆட்சிக்கு வரின் ஓரளவு தாமதம் ஆக்கலாம். காலம் தாமதித்தேனும் நோர்வேயின் தனித்துவம் பேணப்பட வேண்டும் என்ற கோரிக்கை மேலோங்கலாம். •

## விருதுக்குப் பிறகு....



தமிழில் ஒரு படம் விருது பெற்றால், அந்தப் படம் பொதுவாக வெளிவரமுடியாத நிலையே நிலவும். உதாரணம்: அக்கிரகாரத்தில் கழுதை. அல்லது அந்தப் படம் தோல்வியைத் தழுவும், அல்லது வெற்றி ஈட்டமுடியாத நிலையே இருக்கும். உதாரணம்: மறுபக்கம்.

ஆனால், ஒஸ்கார் விருது பெறும் படங்கள் இதற்கு நேரெதிர் மாறானவை. கடந்த மூன்று நான்கு வருடங்களாக சிறந்த படத்திற்கான விருது பெற்ற படங்கள், விருதுக்குப் பின் அதிக வசூலை ஈட்டிக் கொடுத்தவை.

வெற்றி பெற்ற படங்கள் முப்பது முதல் நாற்பது மில்லியன் டொலர்வரை விருதுக்குப் பின் அதிகமாக, அமெரிக்காவில் மாத்திரம் ஈட்டியவை. இதைப்போலவே ஐரோப்பாவிலும் பணவசூல் ஈட்டுகின்றன இந்த வெற்றிப் படங்கள்.

தமிழில் விருது பெற்ற படம் என்றாலே தூரம் ஓடும் தமிழ்ப்பட விநியோகஸ்தர்கள் இந்தச் செய்தியைக் கேட்டால் நம்புவார்களோ தெரியாது.

மாயவன்

www.tamilarangam.net

தமயந்தி

# ஊர் ஒன்று



## அத்தியாயம் 6

மதிய உணவு இடைவேளைக்கான மணியடித்தது. மாணவர்கள் எல்லோரும் வரிசையில் நின்று "சர்வேஸ்வரா ஸ்வாமி, நாங்கள் புசிக்கியிருக்கிற இந்தக் கொடைகளை ஆசீர்வதித்து...." என்று, மனப்பாடம் செய்துவைத்துள்ள ஜெபத்தைச் சொல்லி முடித்துவிட்டு, மெல்ல மெல்ல நகர்ந்து சென்று ஒவ்வொருவராய் பணிஸ் பெற்றுக்கொண்டனர். வழமைபோல் பாலன்தான் அன்றும் பணிஸ் கொடுத்துக்கொண்டு நின்றான். ரூபன் பணிஸ் வாங்கும் முறை வந்ததும் அவனை நிமிர்ந்து பார்த்து ஒரு சிரிப்பை உதிர்த்துவிட்டு, இரண்டு பணிஸ்களை ஒன்றாகச் சேர்த்துப் பொத்தியபடி ரூபன் கையில் திணித்தான்.

பணிசைச் சாப்பிட்டும், துண்டுதுண்டாய்க் காகங்களுக்கு எனப் பிய்த்தெறிந்தும் முடித்துவிட்டு கிளித்தட்டு, எட்டுக்கோடு, சடுகுடு என்று கூட்டம் கூட்டமாய் நின்று ஒவ்வொரு விளையாட்டையும் விளையாடிக்கொண்டு மாணவர்கள் கலகலப்பாகவும் சுறுசுறுப்பாகவும் நின்றனர்.

ரூபன் வழமையாகக் கிளித்தட்டுத்தான் விளையாடுவான். இன்று அவனுக்கு விளையாட்டில் நாட்டம் இல்லாதிருந்தது. பாடசாலை வளவின் கிழக்கு மூலைக்குள் நின்ற ஆலமரத்தின் அண்மையில் அமைந்துள்ள சிறு மைதானத்திற்தான் மாணவர்கள் கிளித்தட்டு விளையாடிக்கொண்டு நின்றனர். தினமும் பாலன்தான் பொதுக்கிளிக்கு நிற்பான். அவன் அந்தப் பாடசாலை மாணவர்களிடம் தனது அதிகாரங்களை எல்லா இடங்களிலுமே காட்டுவான். கிளித்தட்டிலும் அப்படித்தான். பொதுக்கிளி என்ற நீதிபதி, அவர் சொல்வதே தீர்ப்பு. இன்றும் பாலன் பொதுக்கிளி என்ற நீதிபதியாய் அங்கம் வகிக்க, விளையாட்டு நடந்துகொண்டிருந்தது.

ஆலமர நிழலில் அமர்ந்தபடியே கிளித்தட்டைப் பார்த்து ரசித்தபடி இருந்தான் ரூபன். இப்பொழுதெல்லாம் ரூபனின் கவனம் பூராவும் பாலனின் செயல்கள்மீதே பதிய ஆரம்பித்துள்ளது. முன்பு அப்படியல்ல, அவனை நிமிர்ந்து பார்த்தால் ஏதாவது வம்பு வதந்துவிடுமோ என்று பயம். அதனால் பாலனைக் கண்டாலும் காணாததுபோலத் தானும் தன்பாடும் என ஒதுங்கியுள்ளான். சென்ற மூன்று தினங்களாக அவனோடு கிடைத்த உறவும், பழக்கமும், அனுபவமும் ரூபனுக்கு நம்பமுடியாதவைகளாக இருந்தன.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"பாலன் பாக்கிறதுக்குத்தான் சரியான முறடன். அவனோட நெருங்கிப் பழகாதாக்களுக்கு அவன் கெட்டவானாத் தெரியிறான். ஆனால் அவனோட நல்லாப் பழகினாப் பிறகுதான் தெரியுது, பாலன் சரியான நல்லவன் எண்டு. பாலன், சரியான நல்லவன்" இப்படி ரூபனின் எண்ணங்கள் பாலன்மீதான கண்டுபிடிப்புகளைச் செய்துகொண்டிருந்தன.

கடந்த மூன்று தினங்கள் பாலன் தனக்கு நீச்சல் பழக்கியதையும், கண்ணகையம்மன் கோயிலடியில் அமைந்துள்ள கைவிடப்பட்ட தென்னந்தோப்பில் இளநீர் பறித்துத் தந்ததும், அவற்றையெல்லாம்விடப் பாலன் தனது வீட்டிற்கு ரூபனை அழைத்துச் சென்று, தன் தாய் பிலமினாவின் கையால் நண்டுக்கறியோடு சாப்பாடு தந்ததும் மறக்க முடியாத நிகழ்வுகளாய்த் தெரிந்தன. பாலனின் அம்மா பிலமினாவின் மலர்ந்த முகத்துடனான உபசரிப்பும், கனிவான பேச்சும் இவனை வெகுவாகக் கவர்ந்திருந்தது. தனது தாயிடம் இல்லாத கனிவை, கனிந்த நிறைவைப் பிலமினாவில் ரூபன் கண்டான். பாலன் வீட்டிற்கு வரும்வரை தானும் சாப்பிடாமற் காத்திருக்கும் அந்தத் தாயின் பாசத்தின் வெளிப்பாடும், தாய்மைத் துடிப்பும் ரூபனை வியக்க வைத்தன.

இந்தக் கனிவும் பரிவும் அதியுன்னதமான பாசத்தின் வெளிப்பாடும் தன் தாயானவளிடம் ஏன் இல்லாமற் போனதென எண்ணி வருந்திக் கொண்டான். இந்தக் கனிவும் பரிவும் பாசமும் நிறைந்த தாயைப் பற்றியா இந்தச் சனம் இழிவாகப் பேசுகிறது? என்று கோபத்தில் மனங்கொதித்தாள்.

பாலனுடைய அப்பர் செல்லக்குமார், கிட்டத்தட்டப் பதினான்கு வருடங்கள் முன்பே - பாலன் வயிற்றில் இருக்கும்போதே ஊரைவிட்டு ஓடிவிட்டார். அவர் இப்போது வட்டக்கச்சியில் வேறு கல்யாணம் கட்டியிருக்கிறாராம். அவர் ஓடியதில் இருந்து இத்தனை காலமாக பாலனை வளர்க்கக் கூலிக்கு மாவிடித்து, இடியப்பம் அவித்து விற்று, விறகு விற்றுப் படாத பாடுபட்டு வருகிறாள். அவளது விடாப்பிடியான வைராக்கியமும், தன்னம்பிக்கையுமே இந்தச் சீரழிந்த சமூகத்திடையேயும் வாழ வைத்தது.

"இதுகளுக்கெல்லாம் காரணம் என்ர அப்பர்தானே.....?" என்று தனது தந்தைமேல் ஆத்திரங் கொண்டான் ரூபன்.

"பரலோகஞானி இளந்தாரியிலை பிலமினாவோட தொடர்பாம். அந்தப் பயல் பாலனும் பரலோகஞானிக்குத் தான் பிறந்ததாம். அதாலதான் பிலமினாவின்ர புருசன் விட்டுப்போட்டு வட்டக்கச்சிக்கு ஓடினதாம். உவயள் ரெண்டு பேருக்கயும் இப்பவும் தொடர்பிருக்காம்"

இப்படி ஊரார் பேசும் பேச்சுகள் ரூபனுக்கும் தெரியும். வயதுவந்தோர் விடயம் வயதுவராத இவனுக்குத் தெரிந்துதான் என்ன செய்யமுடியும்?

"பரலோகஞானிக்கும், பிலமினாவுக்கும் இப்பவும் தொடுசல் இருக்குதெண்டு பரலோகஞானி பெண்சாதிக்கும் தெரியும்தானேயண ..... தெரிஞ்சும் ஏனண விட்டிட்டிருக்கிறதா?"

"பரலோகஞானி பெண்டில் பாவம். என்ன செய்யிறதெண்டு அவனோடயிருந்து சீவிக்கிறாள்"

"உது விசர்க்கதை, அவவாலை உத மறிக்க ஏலும். ஆனாத் தன்ர புருசன் உப்பிடிப் போய் வாறது, அவவுக்கு பெருமையாமண...." இப்பிடி ஊராரின் சம்பாஷனைகள் அடிக்கடி வீட்டுக்கு வீடு, தெருவுக்குத் தெரு, திண்ணைக்குத் திண்ணை நிகழ்ந்து கொண்டேயிருக்கும்.

"அடிச்சது பிழை"

"இல்ல, அடிசரி"

"பழம் போனாப் பிறகுதான் அடி விழுந்தது"

"இல்ல, போகமுன்னம் கோட்டில வச்சே அடிவிழுந்திட்டுது"



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கிளித்தட்டு விளையாடிய இருதரப்பினரும் வாக்குவாதப் பட்டனர். இடையிற் சென்ற பாலன் அதனைத் தீர்த்துவைக்கும் முயற்சியில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டான். அவனது தீர்ப்பின்படி அடிவாங்கியவரையும், அடித்தவரையும்; எப்படி ஓடினார் எப்படி அடித்தார் என்று மீண்டும் செய்து காட்டும்படியும், அதனைப் பார்த்தே தீர்ப்பு வழங்கமுடியும் என்றும் கட்டளையிட்டான். இப்போது இருதரப்பு வெற்றி தோல்வியும் அந்த இருவரில் மட்டுமே தங்கியிருந்தது. ஏனையோர் இரு பக்கங்களிலும் நின்று விளையாடும் இருவரையும் உற்சாகப் படுத்திக்கொண்டு நின்றனர். தீர்ப்புச் சொல்வதற்காக ஓர் பக்கத்தில் நின்று நிதானமாக விளையாட்டைக் கவனமாக உற்று நோக்கினான் பாலன்.

ஆலமர நிழலில் அமர்ந்தபடி ரூபனின் பார்வை பாலனையே கவிந்திருந்தது. இப்போது பாலன்மீது இவனுக்கோர் மென்மையான பாச உணர்வு படர ஆரம்பித்துள்ளது.



பாலனை, பாலனின் தாயை, அந்தத் தாயின் பரிவை, கனிவை, பாசத்தை இவன் நேசித்தான். பாலனோடு நெருக்கமாய், அண்ணன் என்ற உறவாய்க் கரங்கள் கோர்த்து வீதியெலாம் வலம்வர வேண்டும் என்று அவனது சின்ன இதயம் ஏங்கியது. முதுகெலும்பு தொலைந்த ஊரைப் பற்றி அவனுக்குக் கவலையில்லை. ஆனால் அம்மா...... முதுகுத்தோலை உரித்து, வெயிலில் காயவைப்பாள் என்ற நினைப்பு அவனை நடுங்கவைத்தது. அப்படியானால் இந்தச் சொந்தங்களோடு உறவாட முடியாமலேயே போய்விடுமோ என்ற கேள்வி அவனை வதைத்தது.

www.tamilarangam.net

பிலமினாவின் சிரித்த முகம் அவனது சிந்தையுடன் கலந்து ஏதோ செய்தது. "அம்மா:...." என்று மெல்ல முனகினான். "அடிச்சது பிழை..." என்று உரத்த குரலில் பாலன் தீர்ப்புக் கூறியது ரூபனின் செவிகளைத் தொட்டது. பாடசாலை மணி ஒலித்தது. எல்லா மாணவர்களும் தத்தமது விளையாட்டுகளை நிறுத்திவிட்டுப் பாடசாலையினுள் நுழைந்துகொண்டிருந்தனர்.

ஆலமர நிழலைவிட்டெழுந்த ரூபன், இதயத்தில் இனம்புரியாத ஒரு சோகத்தின் சுமையைச் சுமந்தபடி பாடசாலையை நோக்கி மெல்ல நடந்தான்.

பாடசாலை வாயிற்படியில் நின்று மெல்ல நடந்துவரும் ரூபனை ஒருதடவை பார்த்துவிட்டு உள்ளே நுழைந்துகொண்டான் பாலன். தன்னை அவன் பார்த்துவிட்டுப் போவதை ரூபனும் கவனிக்கத் தவறவில்லை.

செல்வதி ரீச்சரின் வகுப்பிற் சென்றமர்ந்த ரூபனுக்குப் பாடங்கள் எதுவும் நுழையவில்லை. அடிக்கடி பின்வாங்கில் இருக்கும் பாலனைத் திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டேயிருந்தான். இவன் பார்க்கும் போதெல்லாம், அவனும் இவனைப் பார்த்துப் புன்னகைத்தபடியே இருந்தான்.

பாடசாலை ஓட்டுக் கூரையில் மழைத்துளிகள் விழும் சத்தம் கேட்டது. மெல்ல, மெல்லக் கேட்ட சத்தம், ஓவென்ற இரைச்சலுடன் வந்த பெருமழையினால் உரத்துக் கேட்டது.

பாடசாலை முடிவுக்கான மணியடித்து, அனைத்து மாணவரும் வரிசையில் நின்று, முடிவுத் தோத்திரம் கூறிவிட்டுப்பாடசாலையை விட்டிறங்கிக் கலைந்து சென்றனர்.


இப்போது மழை மெதுவாகத் தூமித்துக் கொண்டிருந்தது. "மழ வருகுது, மத்தளங்கொட்டுது, வேலப்பன் பெண்டிலை வெள்ளங் கொண்டோடுது" தூமிமழையினூடு ஓடிச் செல்லும் மாணவர்களின் கலைந்த குரல்கள் நாற்றிசையிலும் ஓங்கி ஒலித்தன.

ரூபன் வாயிறபடியில் குடையுடன் காத்து நின்றான்; பாலனின் வருகைக்காக. இந்தக் காத்திருப்பின் தீர்மானங்கள் வலிமை உடையன; வாழக்கூடிய வல்லன. சீரழிந்த சமூகத்தைப் பற்றிய, அதன் குதர்க்கங்களைப் பற்றிய, கூசாத நாவுகளைப்பற்றிய கரிசனைகள் அற்றன.

பிஞ்சுகளின் நெஞ்சில் நஞ்சை விதைக்கும் கெட்டசமூகம் இனித் தோற்றோடும். பிறப்புப் பற்றி வசைபாடும் அழுக்கடைந்த நாக்குகள் இனி மௌனித்துப்போம்.

மெலிந்த மழைத்தூறல்களிடையே ஒற்றைக் குடையுள் ரூபனும், பாலனும். அவர்களின் சிரிப்புகள் கலந்த பேச்சுக் குரல்கள் மழைத்தூறல்களிடையே காற்றோடு கலந்து, வானில் பயணிக்கின்றன.

(முற்றிற்று)




## மெ லி ந் து மெலிந்து....

கடந்த முப்பத்தைந்து வருடங்களில் மிக மோசமான அளவில் ஓசோன் படை பாதிப்பிற்கு உள்ளாகிவிட்டது என ஐ.நா.வின் காலநிலை அவதான அமைப்பு கூறியுள்ளது.

இதேவேளை தென்நோர்வேக்கு மேலான ஓசோன் படையில் 15-20% வரை பாதிப்புற்று விட்டதாக அறிவிக்கப் படுகிறது.

www.tamilarangam.net




- முன்தொடர் -

"தேசிய விடுதலைப் போராட்டத்தில் பெண்கள்" என்று தலைப்பிடப்பட்டுத் துாண்டிலில் (39 - 91) வெளியாகிய கட்டுரையில், கட்டுரையாளர் ஈரோஸ் பற்றிக் குறிப்பிடும்போது "கருத்தளவில் முன்னேற்றமான ஈரோஸ் பெண்கள் (தாம்சார்ந்த) அமைப்பின் சகல நடவடிக்கைகளிலும் தொடர்புடையவர்களாகப் பங்கேற்றுச் செயற்பட முற்படும்போது சம உரிமையின்மை நிர்மூலமாக்கப்படும் என்ற கருத்தைக் கொண்டிருந்ததாக, ஈரோஸின் அரசியல் ஏடான பொதுமையை மேற்கோள் காட்டிக் குறிப்பிட்டிருந்தார். இந்த அமைப்பினது பெண்கள் தொடர்பான நிலைப்பாட்டின் அடிப்படையில்கூடப் பெண்கள்; அமைப்பினது சகல நடவடிக்கைகளிலும் பங்குகொள்ளவில்லை, ஈடுபடுத்தப் படவில்லை என்றே கூறவேண்டும்.

"பெண்விடுதலை என்ற இலட்சியப் போராட்டமானது எமது விடுதலை இயக்கத்தின் மடியில் பிறந்த அக்கினிக் குழந்தை. பாலியல் வேறுபாடும் அதன் அடிப்படையில் தோன்றிய பண்பாட்டு நியமங்களும் ஆண்பெண் சமத்துவத்திற்கு முட்டுக்கட்டையாக நிற்கின்றன." இது சர்வதேசப் பெண்கள் தினத்தன்று புலிகளின் தலைவர் பிரபாகரன் விடுத்துள்ள செய்தி.

முன்னெப்போதும் இல்லாத வகையில் பெண்விடுதலைக் கோஷங்கள் இன்று விடுதலைப் புலிகளினால் கவர்ச்சிகரமாக வைக்கப் படுகின்றன. ஆனால் நடைமுறையில் இந்த அமைப்பும் பெண்விடுதலைக்கு எதிரான நிலைப்பாட்டினைக் கொண்டிருக்கிறது என்பதை அவதானிக்க முடிகிறது.

www.tamilarangam.net



89இன் நடுப்பகுதியில் உரும்பிராயில் மூன்று இந்துக்கோயில்கள் ஒன்றாக அமைந்துள்ள பிரதேசத்தில் இருபத்திரண்டிற்கும் பதினெட்டிற்கும் இடைப்பட்ட வயதுடைய ஒரு இளம்பெண்ணின் சடலம் கைகள் பின்புறமாகக் கட்டப்பட்ட நிலையில் புலிகளால் வீதியில் வீசப்பட்டது. "விபச்சாரத்தில் ஈடுபட்டதற்காக மரணதண்டனை வழங்கப் பட்டதாக" ஒரு குறிப்பும் கழுத்தில் தொங்கவிடப் பட்டிருந்தது. எவரும் உரிமைகோர முன்வராத அந்தப் பெண் வெளிமாவட்டத்தைச் சேர்ந்தவராக இருக்கலாம் என மக்கள் பேசிக்கொண்டனர். சமூகரீதியில் அதன் காரண காரியங்கள் ஆராயப்பட்டுத் தீர்வுகாணப்பட வேண்டிய ஒரு பிரச்சனைக்கு வெறுமனே பெண்ணிற்கு மட்டும் தண்டனை வழங்குவது எந்த நியாயத்தின் பாற்பட்டது? ஆண்பெண் சமத்துவத்தைப் பற்றிப் பெரிதாக அலட்டிக்கொள்ளும் இந்த அமைப்பு அந்தப் பெண்ணோடு விபச்சாரத்தில் ஈடுபட்ட ஆண்களுக்கு ஏன் தண்டனை வழங்காது விட்டது ஏன் என்று ஆராய்வோமானால் பெண்விடுதலை குறித்த இவர்களது நிலைப்பாடு தெளிவாகப் புரிந்துவிடும்.

"இந்த மண்ணிலே நாங்கள் சுதந்திரமாகவும் சமத்துவமாகவும் எங்கள் கௌரவத்துடனும் வாழ வழிசமைக்கப் பட்டிருக்கிறது பிரபாகரனின் வழிநடத்தலில்", என்று அதேதினத்தில் பேசிய மகளிர் பிரிவுப் பொறுப்பாளர் ஜெயா, சீதனப்பிரச்சனை, வேலைவாய்ப்புப் பிரச்சனை, அதனடிப்படையிலான சம்பளப் பிரச்சனை இன்று பெண்கள் எதிர்நோக்கும் பிரதான பிரச்சனை என்று குறிப்பிட்டு, அதோடு பாலியல் துன்புறுத்தல் என்பது பெண்களை மனிதர்களாக மதிக்கின்ற உயர்நிலையைத் தாழ்த்திவிட்டுள்ளது எனவும் அவற்றை ஒழிப்பதற்காக இணைந்து போராட வேண்டும் என்றும் முன்னுக்குப் பின் முரணாகப் பேசியுள்ளார். பெண்கள் தங்கள் ஒடுக்குமுறைக்கு எதிராகப் பொதுவான அமைப்பின்கீழ் ஒன்றுபட வேண்டும் என்ற கருத்து நிராகரிக்கப்பட்டுத் தனியொரு மனிதனின் வழிகாட்டலில் தீர்க்கப்படுவதாக குறிப்பிடுவது பெண்களினது தனித்துவத்திற்கும் சுயமான சிந்தனைக்கும் தடைவிதிக்கப் படுவதையே காட்டுகிறது. இந்த இட்ததில் சரநிகர் இல.8இல் வெளியாகிய 'தேசிய விடுதலைப் போரும் பெண்களும்' என்ற கட்டுரையில், "இயக்கத்துக்குள் பெண்கள் பிரச்சனை தொடர்பாக அதிக குழப்பம் இருக்கிறது. எனினும் இறுதியில் அவர்கள் (சுதந்திரப் பறவைகள்) தமது விவாதத்தை முடிக்கைகயில் தமக்குத் தங்கள் தலைவர் எல்லாப் பிரச்சனைகளையும் தீர்த்து வைப்பார் என்ற நம்பிக்கை இருப்பதாகக் கூறினர். (முறிந்தபனை.பக்.328)" என்று எழுதியிருப்பதை நினைவுபடுத்துவது பொருத்தமானது.

விடுதலைப் புலிகளது தலைமை எப்போதுமே சுயாதீனமான வெகுஜன

www.tamilarangam.net

அமைப்புகளது நடவடிக்கைகளையோ, வளர்ச்சியையோ விரும்பியதில்லை. அவற்றைத் தடைப்படுத்தியே வந்துள்ளது. இதேநிலைமைதான் பெண்களுக்கும் ஏற்பட்டுள்ளது. மேலும், அதே பெண்கள் தினத்தில் உரையாற்றிய கரிகாலன் என்பவர் இன்று பெண்கள்மீதான மிகப்பெரிய ஒடுக்குமுறையாகச் சீதனப் பிரச்சனை இருக்கிறது என்றும் நாடு விடுதலை அதையும்போது சமத்துவமான பெண்கள் விடுதலைகொண்ட சமுதாயம் உருவாகும் என்றும் கூறியுள்ளார்.

இதேநேரத்தில் யாழ்ப்பாணத்தில் பல விடயங்களுக்காக மக்கள் வரிகட்ட நிர்ப்பந்திக்கப் பட்டுள்ளனர். சீதனக் கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபட்டவர்களிடம் இருந்தும் வரி வசூலிக்கப் படுவதாக அங்கிருந்து வரும் செய்திகள் கூறுகின்றன. சீதனம் வாங்குபரிடம் வரிவசூலிப்பது எந்தவிதத்திலும் சீதனப் பிரச்சனையை ஒழிக்கப் போவதில்லை. இந்த நிலைமை சீதனத் தொகை முன்பிருந்ததைவிட அதிகரிக்கும் நிலையைத்தான் உருவாக்குகிறது. கல்யாணத் தரகருக்கான் கூலியையும் பெண் வீட்டாரிடமே அறவிடும் எமது சமூகம் "இயக்கத்திற்குக் கொடுக்கவேண்டிய வரிப்பணத்தையும் சேர்த்து சீதனத்தொகையை உயர்த்திவிடும் நிலைமையைத்தான் புலிகள் உருவாக்கியுள்ளார்கள்.

யாருக்காகப் போராடப் புறப்பட்டார்களோ அதே மக்களது அடிப்படை ஜனநாயக உரிமைகளைக்கூடப் புறக்கணித்துவிட்ட இந்த அமைப்பு பெண்விடுதலைக்காகக் குரல் கொடுப்பதன் பின்னணிதான் என்ன? அன்றாடம் யுத்தத்தில் மடிந்துகொண்டிருக்கும் போராளிகளின் இடத்தை நிரப்பப் பெருமளவில் நபர்கள் தேவைப்படுவதால் விகிதாசரா ரீதியாக அதிகளவில் உள்ள பெண்களின் பக்கம்

## மறப்பு

அகதிக்கான
இவ்வருடத்துச் சிலமணிநேரச் சூரியன்
எனக்கும் சேர்த்துத்தான்
உதிக்கின்றதென்கின்ற
நினைப்பை
எக்காலையும் போல
இன்றும் மறந்தேன்.


நானே என்னை மறந்து
நானாக எஞ்சி இருப்பது

ஒரு சோடி சப்பாத்து
ஒரு டெனிம் களிசாண்
ஒரு சேட்டு
ஒரு ஸ்வெட்டர்
ஒரு ஜக்கெட்
ஒரு பெண்ணுக்கான சீதனம்

<u>பெண்வழிச் சமையல் கணக்கு</u>

காலை - பால் புக்கை - சம்பல்
சிவத்தப் பச்சை அரிசி - 7 கிலோ
தேங்காய் - 10
விறகு - ஒரு தூக்கு - கொத்தியது
செத்தல்மிளகாய் - 1/2கிலோ - பொரிக்க
தேங்காய் - 20
மத்தியானம் -
குத்தரிசி - 20 கிலோ
மீன் - புன்னாலைப்பாலம்

**சுகன்**



www.tamilarangam.net

இவர்களது பார்வை திரும்பியுள்ளது. கடந்த காலங்களில் தேசவிடுதலை இயக்கங்களுக்காகப் பெண்கள் பயன்பட்டதுபோல இன்றும் அதேநிலைமை எதுவித மாறுதலும் இன்றித் தொடர்வது வேதனைக்குரியது. பெண்விடுதலை பற்றிய ஆரோக்கியமான நிலை என்பது எமது தேசத்தைப் பொறுத்தவரை பூச்சியமாகவே தெரிகிறது.

அரசியல் ரீதியான ஆழமான பார்வையும் (?) தெளிவும் (?) கொண்டவர்கள் என்று சொல்லப் படுபவர்கள் என்எல்எ.ஃப்டியினர். இயக்கத்திற்குச் சொல்லிக் கொள்ளாது ஓடிப்போன தனது மகனைத் தேடி அவரது தாய் இந்தியாவில் உள்ள இந்த இயக்கத்தினுடைய முகாம்வரை சென்று தேடியபோது பல நாட்கள் அவரை அலைக்கழித்த பின்னர் இறுதியில் அவரது மகன் அங்கே இல்லை என்பதாக அவர்கள் பதிலளித்தனர். ஆத்திரமுற்ற அவர் பணத்திற்காகத் தனது மகனை அவர்கள் கடத்திவிட்டார்கள் என்று குமுறியபோது; இதன் முக்கிய உறுப்பினர் ஒருவர் பெண்களை இழிவுபடுத்தும் வகையில் எம்மவர்களால் பாவிக்கப்படும் மிக மட்டமான ஒரு சொல்லால் அந்த வயோதிபத் தாயை வைது துரத்தினார்.

இவ்வாறு விடுதலை இயக்கங்களால் பெண்கள்மீது நிகழ்த்தப்பட்டதாக மேலே குறிப்பிடப் பட்டிருப்பவை ஓரிரு உதாரணங்கள் மட்டுமே. ஒவ்வொரு விடுதலை இயக்கத்தினது வரலாறும் அக்குவேறு ஆணிவேறாக ஆராயப்பட்டு எழுதப்படுமாயின் பெண்கள்மீது அவை நிகழ்த்திய ஒடுக்குமுறைகளும் வெளிச்சத்துக்கு வரலாம். அனைத்து விடுதலை இயக்கங்களும் ஒன்றைஒன்று மிஞ்சும் வகையில் பெண்களுக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபபட்டன. அல்லது நிகழ்ந்த அநீதிகளை மூடிமறைத்தன என்பது, இவை பெண்களுக்கு எதிரான நிலைப்பாட்டினையே நடைமுறையில் கொண்டிருந்தன என்பதையே எடுத்துக் காட்டுகிறது.

மூன்றாவது பாதையின் அவசியம் பற்றி எல்லாத் திசைகளிலும் இருந்து குரல்கள் ஒலித்தாலும் ஒவ்வொருவரும் தம்மளவில் வெவ்வேறான கருத்துகளையே கொண்டிருக்கின்றனர். இந்நிலையில் வெளிப்படையான ஒரு வேலைத்திட்டத்தை சமர் தனது ஏழாவது இதழில் முன்வைத்துள்ளது. இந்த வேலைத்திட்டம் முடிந்த முடிபாக இல்லாது விவாதத்திற்குரியது என்று குறிப்பிடப் பட்டுள்ளது. இருப்பினும் இவர்கள் முன்வைத்த இவ்வேலைத் திட்டத்தில் பெண்களது நிலைபற்றி எவ்வித கருத்துகளோ குறிப்புகளோ இடம்பெறவில்லை. இது தேசிய விடுதலைப் போரில் பெண்களின் நிலை என்ன என்ற கேள்வியை மீண்டும் எழுப்புகிறது.


(இன்னும் வரும்)

M. ZLATKOVSKY



www.tamilarangam.net

# இந்தியா என்பது மாயமான் எண்டு தெரிஞ்சு போச்சுது



துருவசக்தி

**புரியாத புதிர் 21**
**எல்லாமே தலை கீழ்.....**

கவிராயரிடம் போனேன், நீண்ட நாட்களாக அவரைச் சந்திக்கவில்லை. நான் தன்னைச் சந்திக்கவில்லை என்பதற்காக அவர் என்னைக் கோபித்துக் கொள்வாரோ என்று பயந்துகொண்டே போனேன்.

என்னை அவர் ஆவலோடு எதிர்பார்த்துக் காத்திருந்தவர் போலத் தெரிந்தார். "ஆ.... தம்பி வாரும் வாரும். என்ன கனகாலமாகக் காணயில்லை..... நான் நினைச்சன் மற்ற ஆக்கள் மாதிரிச் சொல்லாமற் கொள்ளாமல் கனடாவுக்கு ஓடியிற்றீரோ எண்டு."

"இல்லை கவிராயர்... .தெரியும்தானே, இப்ப 'சமர்' (sommer) எண்டு. ரெண்டுவேலை. இப்பதான் உழைக்க முடியும். அதுதான் கொஞ்சம் 'பிஸி'" என்றேன் தலையைச் சொறிந்தபடி.

"அதுசரி.... உழைப்பில இருந்தாக் காணுமே, அதுசரி உம்மட்ட முக்கியமான சில கேள்விகள் கேக்கவேணும் எண்டு ஓடித் திரிஞ்சனான்......."

"ஐயோ.. கேள்வியோ?.... என்னட்டையோ?"

"ஓமோம்.... ஏன் தம்பி கேள்வி எண்டவுடனை இப்பிடிப் பயப்பிடுகிறியள்? ...ம்... தம்பி இப்பெல்லாம் எங்கட ஆக்கள் கேள்வி கேக்கிறதே கூடாது எண்டிறவை. கேள்வி கேட்டா, விளங்காததைக் கேட்டாத் தேசத்துரோகி எண்டு முத்திரை குத்திறவை. காலம் அப்பிடி. கேள்விகள் கேக்கிறது நல்லது. அப்பதான் தெளிவு பிறக்கும்..... கேள்வியும் அதற்குரிய விடையும்தான் சந்தேகங்களைத் தீர்த்து ஒரு ஆரோக்கியமான நிலையை உருவாக்கும்"

"ம்... ஓமோம் அண்ணை, கேள்விகளுக்கு உள்ளாலைதான் புதிய தெளிவு பிறக்கும் என்பது சரி... என்ன கேள்வி" என்றேன்.

"விசயத்துக்கு வாறன். தம்பி, பத்து வருயமாச்சு, யூலைக் கலவரம் நடந்து. இப்ப எண்டது மாதிரிக் கிடக்கு. அந்தக் கொடூரம் நடந்து அது சனத்திற்றை எழுச்சி ஒண்டைக் கொண்டுவந்து,

www.tamilarangam.net

இயக்கங்கள் உண்டாகி, இயக்கங்களை நாங்கள் கடவுள் எண்டு நினைச்சு, இந்தியாவை எம்மைக் காக்கிற தாய் என்று நினைச்சு, இயக்கங்கள் எல்லாம் சனத்தைத் துன்புறுத்திறதில தாங்கள் ஒண்டுக்கொண்டு சளைச்சதுகள் இல்லை எண்டுகாட்டி, இந்தியாவே கதி எண்டு.

கிடந்து இயக்கங்கள் தங்களைத் தாங்களே அடிச்சு எரிச்சு, இண்டைக்கு இந்தியா எங்கட மக்களைக் கொன்று தானும் ஒரு மாயைபூரன் என்று நிரூபித்து, பிறகு, யார் எதிரி எண்டு நினைச்சமோ அநத் இலங்கை அரசிட்டப் புலிகள் போய், இந்தியா வெளியேறினபிறகு மற்ற இயக்கங்கள் இலங்கை அரசின்ர எடுபிடிகளாகிச் சனத்தைக் கொல்லவும் ஆதரவாகி...... இப்பிடிக் கொஞ்சக்

காலத்தில நிறைய மாற்றங்கள் வந்திட்டுது.

யார் எதிரி, யார் போராளி எண்டதே ஒண்டும் புரிய மாட்டன் எண்டிது. அதுமட்டுமில்ல, 83 கலவரத்தில் வெட்டுவேண்டி, எரிஞ்ச உடலோட சனங்கள் வடக்கு நோக்கிப் பாதுகாப்புத் தேடி ஓடோடி வந்ததுகள், ஆனால்இண்டைக்கு? வடக்கில் இருந்து கொழும்புக்குத்

தெற்கிற்கு வருகுதுகள், கொழும்பு அகதிமுகாமில் வந்து இருக்குதுகள். ஏன் இந்தநிலை? ஒண்டுமே புரியேல்லை... உமக்கு ஏதாவது புரியுதே? என்று ஒரே மூச்சில் இழுத்துவிட்டார்.

எனக்குத் தலைசுற்றியது.

"இல்லை அண்ணை இல்லை.... பல கேள்விகளுக்கு எனக்கும் விடை தெரியேல்லை...." என்றேன்.

வடககு தாயநாடு எணடு ஓடிவநதம இபப திருமப தெநகிறகு ஏ ஓடுறம?

நாஙாளே கிழககை உதைககிறம

வேணடாம எணடு சிஙகளவஙகளே எதிரததாஙகள இபப அவஙாளே கடடிபபிடிககிறாஙகள!

**புரியாத புதிர் 22**
**அவர்களை**
**கழிக்கவை**

"நெருக்கடி வரும்போது வேற்றுமைகள் நீங்கி ஒற்றுமைதான் பலப்படும். ஆனால் தமிழர்களுக்கு நெருக்கடி ஏற்பட்டபிறகு வடக்கு கிழக்கு பிரியும் நிலை அபாயகரமாக ஏற்பட்டிருக்கிறது. இதை சிங்கள அரசால் தமிழர்களும் முஸ்லிம்களும் ஒடுக்கப் பட்டாலும், இரு பகுதியினருக்கும் பெரிய பிளவு வந்திருக்கு." என்று கவிராயர் கூற எனக்கு ஒற்றைக் கண்ணை யாரோ பிடுங்கிக் கொண்டோடியது போலிருந்தது.